

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் அறிவித்த அறிவிப்புகள்

(24.08.2021 - 09.05.2022)

1 ஆண்டு ஆட்சி

ஓயா உழைப்பின் ஓராண்டு

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
# திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
# விதி 110இன் கீழ் அறிவித்த அறிவிப்புகள்
# (24.08.2021 முதல் 09.05.2022 வரை)

சிறப்பு வெளியீடு எண். 58

# தமிழரசு

இலவச வெளியீடு

மே 2022

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி,
சென்னை – 600 113.

## பொருளடக்கம்


| வ. எண் | அறிவிப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | ரூ.39 கோடி மதிப்பீட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம் | 1 |
| 2. | முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் நலனுக்காக ரூ.317.40 கோடி நிதி ஒதுக்கீடு | 7 |
| 3. | விழுப்புரம் மாவட்டத்தில் 21 சமூக நீதிப் போராளிகளுக்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில் மணிமண்டபம் | 14 |
| 4. | வடசென்னையில் தமிழ் சிந்தனை மரபை வளர்த்தெடுத்த அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுக்கு மணிமண்டபம் | 18 |
| 5. | நெசவாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையினையேற்று பஞ்சு, கழிவு பஞ்சு மீதான ஒரு விழுக்காடு வரி ரத்து | 21 |
| 6. | பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் பிறந்தநாளை ‘சமூகநீதி நாள்’ ஆகக் கொண்டாடுவோம் | 23 |
| 7. | அரசுப் பணியாளர்களின் கோரிக்கையை ஏற்று அகவிலைப்படி உயர்வு முன்னதாகவே அமல்படுத்தப்படும் | 28 |
| 8. | ‘தமிழ்நாடு ஆதிதிராவிடர் – பழங்குடியினர் நல ஆணையம்’ உருவாக்கம் | 33 |

| வ. எண் | அறிவிப்புகள் | பக்கம் எண் |
| --- | --- | --- |
| 9. | அகழாய்வில் கிடைத்த அரிய பொருட்களைக் காட்சிப்படுத்த திருநெல்வேலியில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் அருங்காட்சியகம் | 37 |
| 10. | கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட நகைக் கடன்கள் தள்ளுபடி | 45 |
| 11. | சமூக நீதிக்கான நமது போராட்டம் தொடரும்... | 48 |
| 12. | வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி ரூ.12 இலட்சமாக உயர்வு | 53 |
| 13. | மக்கள் நலனை மட்டுமே முன்னிறுத்தி கடந்த ஆட்சியில் நிறைவேற்றப்படாத அறிவிப்புகளையும் நிறைவேற்றுவோம் | 54 |
| 14. | ரூ.68,375 கோடி முதலீட்டில் 2,05,802 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் 130 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் | 67 |
| 15. | அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் ''சமத்துவ நாள்'' | 74 |
| 16. | ''என் கடன், பணி செய்து கிடப்பதே'' | 77 |
| 17. | ரூ.25 கோடி மதிப்பீட்டில் ''ஒலிம்பிக் தங்கம் தேடுதல்'' திட்டம் | 81 |
| 18. | 600 ஊராட்சிகளில் ''கிராமச் செயலகங்கள்'' | 86 |

| வ. எண் | அறிவிப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 19. | கலைஞர் பிறந்த நாள் அரசு விழாவாக கொண்டாட்டம் | 93 |
| 20. | முதலாண்டு முத்தான தொடக்கம் இரண்டாமாண்டு இணையற்ற ஆண்டாக இருக்கும் | 99 |
| 21. | மயிலாடும்பாறை ஆய்வு முடிவின்படி தமிழகத்தில் இரும்பின் பயன்பாடு 4,200 ஆண்டுகளுக்கு முற்பட்டது | 126 |


✵ ✵ ✵



# ரூ.39 கோடி மதிப்பீட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம்

## 24.08.2021

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110இன்கீழ் இந்த அரசின் முதல் அறிவிப்பினை உங்கள் அனுமதியோடு இந்த அவைக்கு அறிவிக்க விரும்புகிறேன். விதி 110இன்கீழ் அறிவிக்கும் முதல் அறிவிப்பே 'தமிழினத் தலைவர்', 'முத்தமிழறிஞர்', 'எண்பதாண்டு காலம் இந்தத் தமிழ்ச் சமுதாயத்துக்கு உழைத்தப் போராளி'கலைஞர் அவர்களது புகழுக்குப் பெருமை சேர்க்கும் அறிவிப்பாக அமைந்துள்ளதை நினைத்து நான் மட்டுமல்ல, இந்த அரசே பெருமைப்படுகிறது.

உலகெங்கிலும் தமிழர்களுக்கெல்லாம் தமிழினத் தலைவர், இலக்கியத் துறையைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் முத்தமிழறிஞர், கலையுலகத்தினருக்கு என்றும் கலைஞர், தமிழ்நாட்டின் தலைவர்களுக்கெல்லாம் தலைவர், இந்திய அரசியலை வழிநடத்திய அரசியல் ஞானி, இந்த அவைக்கு என்றும் நிரந்தர உறுப்பினர், எங்களையெல்லாம் உருவாக்கியத் தலைவர், கோடிக்கணக்கான உடன்பிறப்புகளின் உள்ளத்தில் குடியிருக்கும் மாண்பாளர். இது மட்டுமல்ல; இன்னும் சொல்லிக்கொண்டேப் போகலாம்! "என் பாதை, சுயமரியாதைப் பாதை, தமிழின நலன் காக்கும் பாதை, தமிழ் நெறி காக்கும் பாதை, தந்தை பெரியாரின் பாதை, பேரறிஞர் அண்ணாவின் பாதை, அறவழிப் பாதை, அமைதிப் பாதை, ஜனநாயகப் பாதை, இதில் பயணித்தால் மரணமே வரும் எனப் பயமுறுத்தினாலும், அந்தப்

பாதையிலிருந்து மாற மாட்டேன்'' என்று இறுதிவரை உறுதியோடு வாழ்ந்தவர்தான் கலைஞர் அவர்கள்.

எண்பது ஆண்டு பொதுவாழ்க்கை, எழுபது ஆண்டுகள் திரைத்துறை, எழுபது ஆண்டுகள் பத்திரிகையாளர், 60 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினர், 50 ஆண்டுகள் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் பேரியக்கத்தினுடைய தலைவர் என்று வாழ்ந்த காலம் முழுவதும் வரலாறாக வாழ்ந்தவர் கலைஞர் அவர்கள்.

நின்ற தேர்தலில் எல்லாம் வென்ற தலைவர் அவராக மட்டும்தான் இருக்க முடியும். குளித்தலையில் போட்டியிட்டு 13 சட்டமன்றத் தேர்தல்களிலும் குனியாத தலை, கலைஞருடைய தலை. 1957, 1962, 1967, 1971, 1977, 1980, 1989, 1991, 1996, 2001, 2006, 2011, 2016 என மொத்தம் 13 முறை இந்தச் சட்டமன்றத்துக்குப் போட்டியிட்டு, 13 முறையும் வெற்றி வாகை சூடிய வெற்றி நாயகர் கலைஞர் அவர்கள். தோல்வி அவரைத் தொட்டதே இல்லை! வெற்றி அவரைக் கைவிட்டதே இல்லை! அவர்தான் கலைஞர்!

இந்தியாவில் இப்படி ஒருவர் இருந்தது கிடையாது; இனி ஒருவர் அவர் இடத்தை அரசியல் களத்தில் பிடிக்க முடியாது என்று போற்றத்தக்கப் பெருமையுடையவர் கலைஞர் அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு 10.02.1969 அன்று முதன்முதலில் தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்றார் கலைஞர். அதன்பின்னர், 15.03.1971, 27.01.1989, 13.05.1996, 13.05.2006 என மொத்தம் ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தமிழ்மொழியின் மேன்மைக்கும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், தமிழ்ச் சமுதாய மக்களின் கல்வி, அறிவியல், சமூகப் பொருளாதார அரசியல் எழுச்சிக்கும் வழிவகுக்கும் மகத்தானத் திட்டங்களையும், சட்டங்களையும் உருவாக்கி, ஒட்டுமொத்த இந்தியாவிலும், தமிழ்நாட்டை வளர்ச்சி

பெற்ற முன்னணி மாநிலமாக்கியதில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பங்கு ஈடு இணையற்றது.

இன்று நாம் பார்க்கும் நவீனத் தமிழ்நாடு என்பது கலைஞர் உருவாக்கிய தமிழ்நாடு ஆகும். கனவு நகரங்களைச் சிலர் உருவாக்குவார்கள். கலைஞர் அவர்கள்தான், கனவு மாநிலத்தையே உருவாக்கிய மகத்தான சிற்பி. "நான் முதலமைச்சராகக் கோட்டையில் இருந்தாலும், அங்கிருந்தபடியே குடிசைகளைப் பற்றியே சிந்திப்பவன்" என்று முதல் முறை ஆட்சிக்கு வந்தபோது முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். 'சமுதாயச் சீர்திருத்தத் தொண்டு, வளர்ச்சிப் பணிகள், சமதர்ம நோக்கு' இவை மூன்றையும்தான் தன்னுடைய ஆட்சியின் இலக்கணமாக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையில்தான் ஆட்சியை நடத்தினார்கள். அனைத்துத் துறைகளும் ஒருசேர வளர்ந்தன.

அன்னைத் தமிழ்மொழிக்குச் செம்மொழித் தகுதி; ஒன்றிய அரசில் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு உரிமை; அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் சட்டம்; மகளிருக்குச் சொத்தில் சம உரிமை என்ற சட்டம்; பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலின மக்களுக்கான சமூகநீதி உரிமைகள்; விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்; கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்பட்ட 7 ஆயிரம் கோடிக் கடன் ரத்து; சென்னைத் தரமணியில் டைடல் பார்க்; சென்னைக்கு மெட்ரோ ரயில் திட்டம்; சிப்காட், சிட்கோ, தொழில் வளாகங்கள் உருவாக்கம்; தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உருவாக்கியது; நமக்கு நாமே திட்டம்; அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்; அவசர ஆம்புலென்ஸ் 108 சேவை அறிமுகம்; இலவச மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்; மினி பஸ்களை கொண்டு வந்தது; உழவர் சந்தைகள் அமைத்தது; ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவி; கைம்பெண்கள் மறுமண நிதி உதவி;

கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவி ஆகிய திட்டங்கள்; பல்லாயிரம் கோயில்களுக்குத் திருப்பணிகள்; அரசு வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இடஒதுக்கீடு; உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்காக 33 விழுக்காடு இடஒதுக்கீடு; இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்புகள் வழங்குதல்; மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைத்தல்; அனைவரும் இணைந்து வாழ சமத்துவபுரங்கள்; இஸ்லாமிய சமூகத்தினருக்கு 3.5 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கியது; உருது பேசும் இஸ்லாமியர்களைப் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் இணைத்தது; நுழைவுத் தேர்வு ரத்து; மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கியது; சேலம் உருக்காலை, சேலம் புதிய ரயில்வே மண்டலம்; நெம்மேலி கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்; தெற்காசியாவிலேயே பெரிய அண்ணா நூற்றாண்டு நூலகம் ஆகியவை உருவாக்கம்; மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் ஆகியோருக்கு மறுவாழ்வு; ஏராளமான பல்கலைக்கழகங்கள், மருத்துவக் கல்லூரிகள், கலை, அறிவியல் கல்லூரிகள் உருவாக்கியது; இப்படி நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பிதான் முதலமைச்சர் கலைஞர்!

திருக்குவளை என்ற குக்கிராமத்திலிருந்து கிளம்பிய ஒரு இளைஞனுக்குத் தமிழ்நாட்டை எப்படி வடிவமைக்க வேண்டும் என்ற கனவு இருந்தது; ஒரு தொலைநோக்குப் பார்வை இருந்தது. திருவள்ளுவர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகிய மூவரும் அவருக்கு மூச்சுக்காற்றாக இருந்து செயல்பட வைத்தார்கள். இந்த மூவரது கனவுகளை நிறைவேற்றும் மாமனிதராகக் கலைஞர் செயல்பட்டார்கள்.

இலக்கியத்துக்குள் போனால், அவரது குறளோவியமும், சங்கத் தமிழும், தொல்காப்பியப் பூங்காவும் தென்றலாய் வீசுகிறது. கதைக்குள் பயணித்தால், பொன்னர் சங்கரும், தென்பாண்டிச்

சிங்கமும் உறுமுகிறது. திரையுலகைப் பார்த்தால், அவரது பராசக்தியும் மனோகராவும் பூம்புகாரும் மின்னுகிறது. நாடகத்துக்குள் நுழைந்தால், தூக்குமேடையும் சாக்ரடீசும், சேரன் செங்குட்டுவனும் ஒலிக்கிறது. அவரது சிற்பத் திறமைகளுக்குச் சான்றாக வள்ளுவர் கோட்டம், குமரியில் 133 அடி வள்ளுவர் சிலையும் எழுந்து நிற்கிறது.

சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பாடப்புத்தகம் வேண்டுமா? அவரது உரைகள் இருக்கின்றன. பத்திரிகையாளர்களுக்கு இலக்கணம் வேண்டுமா? அவர் நடத்திய முரசொலி விரிகிறது. அரசியல்வாதிகளுக்கு அரிச்சுவடி வேண்டுமா? அவரது கடிதங்களும், நெஞ்சுக்கு நீதியும் இருக்கிறது. அரசியல் களத்தில் பார்த்தால் அவரால் உருவாக்கப்பட்ட நாங்கள் இருக்கிறோம். அதுமட்டுமல்ல; தன்னை வசைபாடியவர்களையும் வாழ்த்தியவர் அவர்.

இப்படி, கடந்த அரை நூற்றாண்டுக் காலத்தின் நிரந்தரத் தலைப்புச் செய்தியாக இருந்த கலைஞர் அவர்கள், 2018 ஆகஸ்ட் 7ஆம் நாள் நிரந்தர ஓய்வுக்குச் சென்றுவிட்டார். ஓய்வெடுக்கச் சென்றார் என்று நான் சொன்னாலும்கூட, அவர் இந்தத் தமிழ்ச் சமுதாயத்துக்கு ஏராளமானவற்றைக் கொடுத்துவிட்டுத்தான் ஓய்வெடுக்கச் சென்றிருக்கிறார்.

தான் மறைந்தால், ‘ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான்’ என்று நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே எழுதச் சொன்ன மக்கள் தொண்டர் அவர். ‘அண்ணா! நீ இருக்குமிடந்தேடி யான் வரும் வரையில், இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா! நான் வரும்போது கையோடு கொணர்ந்து அதை உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா!’ என்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் உறுதிமொழி எடுத்தவர் அவர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சோப இலட்சம் தொண்டர்களின் எஃகு இதயத்தை நம்பி, நாம் கொடுத்த வாக்கை நம்முடைய உடன்பிறப்புகள் காப்பாற்றுவார்கள்

என்ற நம்பிக்கையோடு உறுதிமொழி தந்த உடன்பிறப்புகளின் தலைவர் அவர். அவர் பேரறிஞர் அண்ணாவுக்குக் கொடுத்த வாக்கை அவரது தம்பிமார்களாகிய நாங்கள் காப்பாற்றினோம்.

இப்படி தன்னைத் தந்து, இந்தத் தாய்த் தமிழ்நாட்டை உருவாக்கிய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய அரும்பணிகளைப் போற்றும் விதமாக, அவரது வாழ்வின் சாதனைகளை, சிந்தனைகளை மக்களும், வருங்காலத் தலைமுறையும் அறியக்கூடிய வகையில், நவீன விளக்கப் படங்களுடன் சென்னை, காமராஜர் சாலை, அண்ணா நினைவிட வளாகத்தில் **2.21** ஏக்கர் பரப்பளவில் ரூபாய் **39** கோடி மதிப்பீட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம் அமைக்கப்படும் என இந்த மாமன்றத்தில் தெரிவித்து விடைபெறுகிறேன்.

❖ ❖ ❖

# முகாம் வாழ் இலங்கைத் தமிழர் நலனுக்காக ரூ.317.40 கோடி நிதி ஒதுக்கீடு

## 27.08.2021

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது என்றால், கடல் கடந்து வாழும் தமிழர்களின் கண்ணீரால்" என்று எழுதினார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். அத்தகைய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழி நடக்கக்கூடிய இந்த அரசின் சார்பில், கடல் கடந்து வந்த இலங்கைத் தமிழ் மக்களின் கண்ணீரைத் துடைக்கக்கூடிய வகையில் சில அறிவிப்புகளைச் சட்டப்பேரவை விதி 110இன்கீழ் இன்று வெளியிட நான் விரும்புகிறேன்.

இலங்கை நாட்டில் வாழும் தமிழ் மக்கள் 1983ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரத்திற்குப் பிறகு, கடல் கடந்து தமிழ்நாட்டிற்கு வரத் தொடங்கினார்கள். அத்தகைய தமிழ் மக்களை அன்று முதல் இன்று வரையிலும் நாம் அரவணைத்துக் காப்பாற்றி வருகிறோம்; அவர்களுக்கு வாழ்வாதாரம் வழங்கி வருகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றத் தருணங்களில் எல்லாம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இலங்கைத் தமிழர்களின் நலனில் எப்போதும் அக்கறை கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, கடந்த 1997–1998ஆம் ஆண்டில், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு, 2 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 3 ஆயிரத்து 594 புதிய வீடுகள், தலா 5 ஆயிரத்து 750 ரூபாய் செலவில்

கட்டிக் கொடுக்கப்பட்டன. மேலும், இதர உட்கட்டமைப்பு வசதிகளைச் சீரமைப்பதற்கு 2 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.

1998–1999ஆம் ஆண்டில், தலா 7 ஆயிரத்து 700 ரூபாய் மதிப்பீட்டில், 3 ஆயிரத்து 826 வீடுகள், 2 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டன. கடந்த 02.11.2009 அன்று "இலங்கை அகதிகள் முகாமில் உள்ள அடிப்படைத் தேவைகள்" குறித்த ஒரு ஆய்வுக் கூட்டத்தை முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நடத்தினார்கள். அதனடிப்படையில், அப்போது துணை முதலமைச்சராக இருந்த என்னையும், அமைச்சர்களையும் இலங்கை அகதிகள் முகாம்களுக்கு அனுப்பி ஆய்வு நடத்தி, அறிக்கை தர உத்தரவிட்டார்கள். அப்படி ஆய்வு செய்துவிட்டு, திரும்பி வந்து நாங்கள் அப்போது கொடுத்த அறிக்கையினை ஏற்று, இலங்கை அகதிகள் முகாம் வீடுகள் பழுதுபார்ப்பது, புதுப்பிப்பது, புதிய கைப்பம்புகள், கழிப்பிட வசதிகள் ஏற்படுத்துவது உள்ளிட்ட இலங்கை அகதிகள் முகாம்களில் இருக்கும் தமிழர்களின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான 14 அடிப்படைப் பணிகளை நிறைவேற்ற 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கிக்கொடுத்த முதலமைச்சர்தான் கலைஞர் அவர்கள் என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

1983ஆம் ஆண்டு முதல் இதுவரை 3 இலட்சத்து 4 ஆயிரத்து 269 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். இவர்களில், 18 ஆயிரத்து 944 குடும்பங்களைச் சார்ந்த 58 ஆயிரத்து 822 பேர் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமிழ்நாட்டில் 29 மாவட்டங்களில் அமைந்துள்ள 108 முகாம்களில் (இரண்டு சிறப்பு முகாம்கள் உள்பட) தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும், 13 ஆயிரத்து 540 குடும்பங்களைச் சார்ந்த 34 ஆயிரத்து 87 நபர்கள் காவல் நிலையங்களில் பதிவுசெய்து, வெளிப்பதிவில் வசித்து வருகிறார்கள். கடந்த சில ஆண்டுகளாக அகதிகளாக முறையான அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்துவரக்கூடிய இலங்கைத்

தமிழர்களுக்கு, இனி பாதுகாப்பான, கௌரவமான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை அமைத்துத் தருவதை இந்த அரசு உறுதிசெய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதற்காக, அவர்கள் தங்கியிருக்கும் முகாம்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில், பின்வரும் அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன்:

இலங்கைத் தமிழர்களது முகாம்களில், மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள **7** ஆயிரத்து **469** வீடுகள், **231** கோடியே **54** இலட்சம் ரூபாய் செலவில் புதிதாகக் கட்டித்தரப்படும். இதில் முதற்கட்டமாக, **3** ஆயிரத்து **510** புதிய வீடுகள் கட்டுவதற்கு, நடப்பு நிதி ஆண்டில் **108** கோடியே **81** இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

முகாம்களில் உள்ள மின் வசதி, கழிப்பிட வசதி மற்றும் குடிநீர் வசதி போன்ற இதர அடிப்படை வசதிகளை மேம்படுத்திட **30** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதைத் தவிர, ஆண்டுதோறும், இதுபோன்ற வசதிகளைச் செய்துதர ஏதுவாக, இலங்கைத் தமிழர் வாழ்க்கைத் தர மேம்பாட்டு நிதியாக **5** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இந்த அடிப்படை வசதிகள் மட்டுமல்லாமல், அவர்களின் பிள்ளைகளின் கல்வி மேம்பட, வாழ்வு சிறக்க பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பொறியியல் படிப்பு பயிலுவதற்குத் தேர்ச்சிபெற்ற மாணவர்களில் மதிப்பெண் அடிப்படையில், முதல் **50** மாணவர்களுக்கு, அனைத்துக் கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணம் ஆகியவற்றை அரசே ஏற்கும். மேலும், வேளாண் / வேளாண் பொறியியல் பட்டப் படிப்பிலும் மதிப்பெண் அடிப்படையில் முதல் **5** மாணவர்களுக்கும், மேற்சொன்ன கல்வி மற்றும் விடுதிக் கட்டணங்களை அரசே ஏற்றுக்கொள்ளும். அதுமட்டுமின்றி, முதுநிலைப் பட்டப்படிப்புப் பயிலும் அனைத்து முகாம்வாழ் மாணவர்களையும் ஊக்குவிக்கும் வகையில், அவர்களின் கல்வி மற்றும் விடுதிக் கட்டணங்களை

அரசே ஏற்றுக்கொள்ளும். இதற்காக ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களில் ஆண்டொன்றுக்குத் தோராயமாக, 750 மாணவர்கள் அரசு மற்றும் பிற கல்லூரிகளில் கலை, அறிவியல் மற்றும் பட்டயம் உள்ளிட்ட தொழிற்படிப்புகள் படித்து வருகின்றனர். இவர்களுக்கு வழங்கப்படக்கூடிய கல்வி உதவித்தொகை (Scholarship) போதுமானதாக இல்லை என அறியப்பட்டுள்ளது. இவர்களுக்குப் பாலிடெக்னிக் படிப்பிற்கு 2,500 ரூபாய், இளநிலை கலை மற்றும் அறிவியல் படிப்பிற்கு 3,000 ரூபாய், இளநிலை தொழில்சார்ந்த படிப்புகளுக்கு 5,000 ரூபாய் கல்வி உதவித்தொகையாக ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது. இனி, இதை உயர்த்தி, பாலிடெக்னிக் படிப்பிற்கு 10 ஆயிரம் ரூபாய்; இளநிலை கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பிற்கு 12 ஆயிரம் ரூபாய்; இளநிலை தொழில்சார்ந்த படிப்புகளுக்கு 20 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும். இதற்காக, 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து, அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், அவர்கள் தங்களது வேலைவாய்ப்புத் தகுதியினை உயர்த்திக்கொள்ளவும், வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும். இதற்காக, ஐந்தாயிரம் முகாம் வாழ் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், சிறு, குறு தொழில்கள் செய்திட ஏதுவாகவும், முகாம்களில் உள்ள 300 சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி மற்றும் சமுதாய முதலீட்டு நிதியாக, ஒவ்வொரு சுயஉதவிக் குழுவுக்கும் தலா ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். அதுமட்டுமின்றி, கடந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 321 சுயஉதவிக் குழுக்களுக்கு,

ஏற்கெனவே வழங்கப்பட்ட 50 ஆயிரம் ரூபாயுடன், மேலும் 75 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். இதற்காக நடப்பு நிதி ஆண்டில் 6 கோடியே 16 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு, மாதந்தோறும் அவர்களுடைய வாழ்வாதாரத்திற்காகப் பணக்கொடை வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகையானது, குடும்பத் தலைவருக்கு ஆயிரம் ரூபாயும், இதர பெரியவர்களுக்கு 750 ரூபாயும், 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு 400 ரூபாயும் வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பணக்கொடை, கடந்த பத்தாண்டு காலமாக உயர்த்தப்படாத நிலையில், இனி குடும்பத் தலைவருக்கு மாதந்தோறும் 1,500 ரூபாய், இதர பெரியவர்களுக்கு 1,000 ரூபாய் மற்றும் 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு 500 ரூபாய் என்று உயர்த்தி வழங்கப்படும். இதனால், அரசிற்கு ஆண்டொன்றுக்குக் கூடுதலாக 21 கோடியே 49 இலட்சம் ரூபாய் செலவாகும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. பிரதம மந்திரி உஜ்வாலா திட்டத்தின்கீழ் இவர்களுக்கு எரிவாயு இணைப்புப் பெற இயலாத நிலை உள்ளது. எனவே, ஒவ்வொரு குடும்பத்திற்கும் விலையில்லா எரிவாயு இணைப்பு மற்றும் இலவச அடுப்பு வழங்கப்படும். இதற்காக அரசிற்கு ஒருமுறை 7 கோடி ரூபாய் செலவினம் ஏற்படும். அதைத் தவிர, குடும்பத்திற்கு 5 எரிவாயு உருளைக்குத் தலா 400 ரூபாய் வீதம் மானியத் தொகை வழங்கப்படும். இதற்காக 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படும். முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு தற்போது 20 கிலோவிற்கு மேல் வழங்கப்படும் அரிசிக்கு, கிலோ ஒன்றிற்கு 57 பைசா வீதம் மானியம் வழங்கப்படுகிறது. இதனை இனி இரத்து செய்து, அவர்கள் பெறும் முழு அரிசி அளவும் விலையில்லாமல் வழங்கப்படும்.

இதற்கான செலவுத் தொகையான 19 இலட்சம் ரூபாயையும் அரசே ஏற்றுக்கொள்ளும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு கோ–ஆப்டெக்ஸ் மூலம் ஒவ்வோர் ஆண்டும் இலவச ஆடைகளும், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இலவசப் போர்வைகளும் வழங்கக்கூடிய திட்டத்தில் ஒன்றிய அரசு நிருணயித்த விலையில் ஆடைகள் வாங்கி வழங்க இயலாத நிலையில், நடப்பு ஆண்டிற்குப் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் அடிப்படையில் குடும்பம் ஒன்றிற்கு 1,790 ரூபாயிலிருந்து, குடும்பம் ஒன்றுக்கு, 3,473 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக, அரசிற்கு ஆண்டொன்றுக்கு 3 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு ஒன்றிய அரசு நிருணயித்துள்ள 250 ரூபாய் மதிப்பில் 8 வகையான சமையல் பாத்திரங்களை ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவசமாக வழங்க இயலாத நிலையில், 1,296 ரூபாய் மதிப்பில் சேலம் இந்திய உருக்காலை நிறுவனம் மூலம் உயர்த்தப்பட்ட வீதத்தில் பாத்திரங்கள் வழங்கப்படும். இதனால், அரசுக்கு ஒரு கோடியே 97 இலட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவினம் ஏற்படும்.

இதைத்தவிர, முகாம்களில் வசிக்கக்கூடிய இலங்கை அகதிகளுக்கும், வெளிப்பதிவில் உள்ள அகதிகளுக்கும் உரிய உதவிகளை வழங்கிடவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும், குடியுரிமை வழங்குதல் மற்றும் அவர்களில் இலங்கை திரும்பும் அகதிகளுக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்தல் போன்ற நீண்டகாலத் தீர்வினைக் கண்டறிய ஏதுவாகவும், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர், மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஒருவர், பொதுத்துறைச் செயலாளர், மறுவாழ்வுத்துறை இயக்குநர் மற்றும் பிற அரசு உயர் அலுவலர்கள், அரசு சாரா

உறுப்பினர்கள், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுடைய பிரதிநிதி மற்றும் வெளிப்பதிவில் வசிக்கக்கூடிய அகதிகளுக்கான பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய ஒரு ஆலோசனைக் குழு நிச்சயமாக விரைவில் அமைக்கப்படும்.

மேலும், தமிழ்நாட்டில் உள்ள முகாம் வாழ் இலங்கைத் தமிழர் நலனைப் பேணிட இந்த அரசு வீடு மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்தலுக்கு 261 கோடியே 54 இலட்சம் ரூபாய், அவர்களது கல்வி மற்றும் வேலைவாய்ப்பினை உறுதி செய்திட 12 கோடியே 25 இலட்சம் ரூபாய் மற்றும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட 43 கோடியே 61 இலட்சம் ரூபாய், மொத்தம் 317 கோடியே 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திடும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்குள்ள தமிழர்களை மட்டுமல்ல; கடல் கடந்து வாழக்கூடிய தமிழர்களையும் காக்கக்கூடிய அரசுதான் இந்த அரசு என்பதைக் கூறி அமர்கிறேன்.

❖ ❖ ❖

# விழுப்புரம் மாவட்டத்தில் 21 சமூக நீதிப் போராளிகளுக்கு ரூ.4 கோடியில் மணிமண்டபம்

**02.09.2021**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 110 விதியின்கீழ் இந்த அறிவிப்பினை நான் வெளியிட விரும்புகிறேன். சமூக நீதிக் கொள்கையின் தாய்மடியாக விளங்கக்கூடிய மாநிலம் நம்முடைய தமிழ் மாநிலம். வகுப்புரிமை, வகுப்புவாரி உரிமை, இடஒதுக்கீடு, சாதிரீதியான ஒதுக்கீடு என்று எந்தப் பெயரைச் சொல்லி அழைத்தாலும், அதற்குச் சமூகநீதி என்ற ஒற்றைச் சொல் கொடுக்கும் பொருளை வேறு எந்தச் சொல்லும் தருவது கிடையாது. அத்தகைய சமூகநீதிக் கொள்கைதான் திராவிட இயக்கம், இந்தத் தமிழ்ச் சமுதாயத்துக்குக் கொடுத்த மாபெரும் கொடையாகும். தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல; இந்திய ஒன்றியத்துக்கே அந்தத் தத்துவத்தைத் திராவிட இயக்கம் கொடையாக வழங்கியது.

வகுப்புரிமை (Communal G.O.) எனும் இடஒதுக்கீட்டு முறையை நூறாண்டுகளுக்கு முன் நடைமுறைக்குக் கொண்டுவந்தது நீதிக் கட்சிதான். மூடப்பட்டுக் கிடந்த கல்வி, வேலைவாய்ப்பு, அதிகாரப் பதவிகள் அனைத்தும் அதன்மூலமாக அனைவருக்குமானது. சுதந்திர இந்தியாவில் அதற்குச் சட்டரீதியான இடர்ப்பாடு வந்தபோது, தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் இரட்டைக்குழல் துப்பாக்கியாக இருந்து முன்னெடுத்த போராட்டம்தான் அது. அந்தப் போராட்டம் இந்தியத் துணைக்

கண்டத்தையே கவனிக்க வைத்தது. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், அதனை அன்றைய பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு அவர்களிடத்திலே வலியுறுத்தியதன் காரணமாக, இந்திய அரசியல் சட்டத்தில் முதல் திருத்தம் செய்யப்பட்டது. தமிழ்நாட்டின் சமூகநீதிக் கொள்கைக்கு இந்திய அரசியல் சட்ட அங்கீகாரம் கிடைத்தது. அப்படி சமூகநீதியை அடைய, பல்வேறு போராட்டங்களை நடத்திய இயக்கம்தான் திராவிட இயக்கம்.

பிற்படுத்தப்பட்டோர், பட்டியலினத்தவர், பழங்குடியினர் ஆகியோருக்குரிய இடஒதுக்கீட்டினை உறுதிப்படுத்தியதும், காலத்தின் தேவைக்கேற்ப அளவு மாற்றம் பெற்றுத் தந்ததும், கடந்த அரை நூற்றாண்டுக் கால வரலாற்றிலே இருக்கக்கூடிய சரித்திரச் சான்றாகும். அது யாராலும் மறைக்க முடியாத சாசனமாக அமைந்திருக்கிறது.

சமூகநீதிக்கான தொடர்ச்சியான போராட்டங்களின் வரிசையில், 1987ஆம் ஆண்டு நடைபெற்ற 20 விழுக்காடு தனி இடஒதுக்கீடு கோரி வடதமிழகத்தில் நடந்த போராட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது. அந்தப் போராட்டத்தில், அன்றைய அரசின் காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்கள் 21 பேர். சமூகநீதிப் போராளிகளான அவர்களுடைய உயிர்த் தியாகத்திற்கும், போராட்டத்திற்கும் நியாயம் வழங்கிடும் வகையில், 1989ஆம் ஆண்டு அமைந்த முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அரசு, இந்தியாவிலேயே முதன்முறையாக மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவை அமைத்துக் கொடுத்து, அவர்களுக்கு 20 விழுக்காடு இடஒதுக்கீட்டினை வழங்கி, கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் சம வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அது அவர்களுடைய முன்னேற்றத்திற்கான பாதையை வகுத்துத் தந்தது.

சமூகநீதிக் கொள்கையின் தொடர்ச்சியாக, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது வழியில் செயல்படக்கூடிய நம்முடைய அரசு, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் 20 விழுக்காடு இடஒதுக்கீட்டில் வன்னிய சமுதாயத்தினருக்கான 10.5 விழுக்காடு தனி ஒதுக்கீட்டினை சட்டப்பூர்வமாக நடைமுறைப்படுத்தியிருக்கிறது. ஒடுக்கப்படும் சமுதாயம் எதுவாக இருந்தாலும், அதன் உரிமைகள் காக்கப்பட வேண்டும்; மீட்கப்படவேண்டும் என்பதே திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய உயர்ந்த நோக்கமாகும். அத்தகைய தியாகிகளின் பங்களிப்பை நினைவுகூர்ந்து, 1987ஆம் ஆண்டு இடஒதுக்கீடுப் போராட்டத்தில் காவல்துறையினுடைய துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான 21 சமூகநீதிப் போராளிகளின் தியாகத்தை மதிக்கக்கூடிய வகையிலே, ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலே, விழுப்புரம் மாவட்டத்தில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தலின்போது நான் அளித்த வாக்குறுதி இது. யார் மறந்திருந்தாலும், நிச்சயம் நான் மறக்கவில்லை; யாரையும் மறக்கமாட்டேன்.

"நான் சமுதாயத்தில் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவன். மிகவும் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் என் வகுப்புக்கு ஓர் இடம் உண்டு. நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பதால், பின்தங்கிய வகுப்பினர் நலனுக்காக என் உயிரையேப் பணயமாக வைத்துப் போராடுவேன்" என்று தமிழ்நாடு சட்டமன்றத்திலே அன்றைக்கு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் சொன்ன வாசகம் இது. அந்த உறுதிமொழியை நானும் ஏற்றுக் கொண்டுள்ளதன் அடையாளம்தான் இந்த அறிவிப்பு என்பதை நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு.தி.வேல்முருகன் அவர்களும், அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்களும் இதுகுறித்துப் பேசுகிற நேரத்தில், பாராட்டி நன்றி தெரிவித்துப் பேசினார்கள். அதே நேரத்தில், ஒருசில கோரிக்கைகளையும் எடுத்து வைத்திருக்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புவது, ஏற்கெனவே கழக ஆட்சிக் காலத்திலே, கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே, உயிர்நீத்த அந்த 21 தியாகிகளின் குடும்பத்தினருக்குத் தலா 3 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல, அவர்களது குடும்பத்தினருக்கு பென்ஷன் தொகையாக மாதம் 3 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதே நேரத்தில் நான் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். அரசு வேலைவாய்ப்பை அவர்களுக்கு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். நிச்சயமாக அதுகுறித்து ஆய்வுசெய்து, அரசு சார்ந்த நிறுவனங்களிலே, கல்வித் தகுதியின் அடிப்படையிலே நிச்சயமாக அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்ற அந்த உறுதியையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

❖ ❖ ❖

# வடசென்னையில் தமிழ் சிந்தனை மரபை வளர்த்தெடுத்த அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுக்கு மணிமண்டபம்

## 03.09.2021

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர், அவ்வையார், கபிலர், வள்ளலார் வரிசையிலே தமிழ்ச் சிந்தனை மரபை வளர்த்தெடுத்த மாபெரும் ஆளுமையான அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் பெருமையைப் போற்றக்கூடிய அறிவிப்பு ஒன்றை, 110 விதியின்கீழ் இந்த மாமன்றத்தில் எடுத்து வைப்பதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

தமிழ்நாட்டு அரசியலைப் பொறுத்தவரையில், இரண்டு சொற்கள் இல்லாமல் யாரும் அரசியல் நடத்த முடியாது. ஒன்று, தமிழன்; இன்னொன்று, திராவிடம். இந்த இரண்டு சொற்களையும் அரசியல் களத்தில் அடையாளச் சொல்லாக மாற்றியவர்தான், அறிவாயுதம் ஏந்தியவர்தான் அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள்.

1881ஆம் ஆண்டே மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் ‘பூர்வத் தமிழர்’ என்று பதியச் சொன்னவர் பண்டிதர் அவர்கள். 1891ஆம் ஆண்டு அவர் தொடங்கிய அமைப்பின் பெயர் ‘திராவிட மகாஜன சபை’ என்பதாகும். 1907ஆம் ஆண்டு ‘ஒரு பைசாத் தமிழன்’ என்ற இதழைத் தொடங்கி, அதையே ‘தமிழன்

என்ற இதழாக நடத்தி வந்தவர் அவர். 'பூர்வீக சாதிபேதமற்ற திராவிடர்காள்' என்று அழைத்தவர் அவர். அதனால்தான் தமிழன், திராவிடம் ஆகிய இரண்டு சொற்களையும் அறிவாயுதமாக அவர் ஏந்தினார் என்று குறிப்பிட்டேன். அவர் போட்டுக்கொடுத்த பாதையில்தான் தமிழ்நாட்டு அரசியல் செயல்பட்டு வருகிறது.

எழுத்தாளர், ஆய்வாளர், வரலாற்று ஆசிரியர், மானுடவியல் சிந்தனையாளர், பதிப்பாளர், பத்திரிகையாளர், மருத்துவர், பேச்சாளர், மொழியியல் வல்லுநர், பன்மொழிப் புலவர், புதிய கோட்பாட்டாளர், சிறந்த செயல்பாட்டாளர், சளைக்காத போராளி எனப் பன்முக ஆற்றலைக் கொண்டவர்தான் அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள். அவரது தாத்தா திரு.கந்தப்பன் அவர்கள், தன்னிடம் இருந்த திருக்குறள் ஓலைச் சுவடிகளை திரு.எல்லீஸ் அவர்களிடம் கொடுத்து, திருக்குறளை அச்சுப் பதிப்பாகக் கொண்டுவந்ததை நினைக்கும்போது, குறளுக்கு அவருடைய குடும்பம் ஆற்றிய தொண்டுக்காக நாம் அனைவரும் தலைவணங்க வேண்டும்.

தந்தை பெரியார் அவர்களே, "என் பகுத்தறிவுப் பிரச்சாரத்துக்கும், சீர்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடி அயோத்திதாசப் பண்டிதர்தான்" என்று குறிப்பிட்டிருக்கிறார். அதனால், அவர் சொன்னதைத் தாண்டி நான் எதுவும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. "இந்திய நாட்டின் முன்னேற்றத்துக்கு சாதியும் மதமுமே தடை" என்று சொன்ன அயோத்திதாசர், "மனிதர்களை மனிதர்களாகப் பார்ப்பவர் எவரோ, அவர்தான் மனிதர்" என்று முழங்கினார்.

**1845** முதல் **1914** வரை வாழ்ந்த அயோத்திதாசர் அவர்களுடைய **175**ஆவது ஆண்டு விழாவின் நினைவாகவும், அவரது அறிவை வணங்கும் விதமாகவும், வடசென்னைப் பகுதியில் மணிமண்டபம்

அமைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிடுவதில் இந்த அரசு பெருமைப்படுகிறது.

மகான் புத்தரை 'இரவு பகலற்ற ஒளி' என்று சொன்ன அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுடைய சிந்தனைகளும், இரவு பகலற்ற ஒளியாக இந்தத் தமிழ்ச் சமுதாயத்துக்குப் பயன்பட வேண்டும் என்று சொல்லி அமர்கிறேன்.

❖ ❖ ❖

# நெசவாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையினையேற்று பஞ்சு, கழிவு பஞ்சு மீதான ஒரு விழுக்காடு வரி ரத்து

## 04.09.2021

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களின் நலனுக்காகப் பல்வேறு அறிவிப்புகளையும், நலத் திட்டங்களையும் வழங்கியது திராவிட முன்னேற்றக் கழக அரசு. அதன் தொடர்ச்சியாக, இப்போது நெசவுத் தொழிலை நம்பியிருக்கக்கூடிய நெசவாளர் தோழர்கள் மற்றும் சிறு குறு தொழில் நிறுவனங்களின் நன்மையைக் கருத்தில்கொண்டு, ஓர் முக்கிய அறிவிப்பினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு, 110 விதியின்கீழ் வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தியத் துணித் தொழில் வணிகத்தில் மூன்றில் ஒரு பங்கு தமிழ்நாடு துணித் தொழில் வகிக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள நூற்பாலைகளின் எண்ணிக்கை 1,570 ஆகும், இவ்வாலைகள் மூலம் நூற்கப்படும் நூல், நாட்டின் மொத்த நூற்புத்திறனில் 45 விழுக்காடு ஆகும், தமிழ்நாட்டில் அமைந்துள்ள நூற்பாலைகளுக்குத் தேவையான பஞ்சின் அளவில் 95 விழுக்காடு பிற மாநிலங்களிலிருந்து கொண்டுவரப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண் பொருட்கள் விற்பனை (ஒழுங்குமுறை) சட்டம் 1987, பிரிவு 24–இன்படி, பஞ்சு மற்றும் கழிவுப் பஞ்சின்

விற்பனை மதிப்பு மீது சந்தை நுழைவு வரியாக 1 விழுக்காடு விதிக்கப்படுகிறது. மேற்படி சட்டத்தின்படி, பருத்திப் பொதி, பஞ்சு மற்றும் கழிவுப் பஞ்சு ஆகியவை வேளாண் பொருட்களாகக் கருதப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள சந்தைப் பகுதிகளில் கொள்முதல் அல்லது விற்பனை செய்யப்படும் பொழுது 1 விழுக்காடு வரி (சந்தைக் கட்டணம்) விதிக்கப்படுகிறது. சந்தை நுழைவு வரி என்பது, பருத்திப் பொதிகள் மீது மட்டுமே விதிக்கப்பட வேண்டும். மாறாக, பஞ்சு மற்றும் கழிவுப் பஞ்சு போன்ற உற்பத்திப் பொருட்கள் மீதும் 1 விழுக்காடு சந்தை நுழைவு வரி விதிக்கப்படுகிறது.

இதனால் வெளி மாநிலங்களிலிருந்து பஞ்சு கொள்முதல் செய்யப்படும்பொழுது சிறு, குறு நூற்பாலைகள் போக்குவரத்துக் கட்டணம் செலுத்துவதிலே பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. பஞ்சின்மீது விதிக்கப்படும் சந்தை நுழைவு வரியை நீக்க வேண்டுமென்பது தொழில் முனைவோர் மற்றும் நெசவாளர்களின் நெடுநாள் கோரிக்கையாக இருக்கிறது. இதனால், மாநிலத்தில் இந்தியப் பருத்திக் கழகம் பஞ்சு நூல் விற்பனையை மேற்கொள்ளும்பொழுது, நூற்பாலைகள் பெரிய அளவிலான பஞ்சு இருப்பினைப் பராமரிக்க வேண்டியதில்லை.

ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் நெசவாளர்களுடன் நடைபெற்ற கருத்துக் கேட்புக் கூட்டங்களில், இந்த வரியினை நீக்க வேண்டுமென்று தங்களது கோரிக்கையாக அவர்கள் தெரிவித்தனர். இதனைக் கருத்திற்கொண்டு, தொழில் முனைவோர் மற்றும் நெசவாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு விழுக்காடு வரி (சந்தைக் கட்டணம்) இரத்து செய்யப்படுகிறது. இதற்கான உரிய சட்டதிருத்தம் இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடரிலே கொண்டுவரப்படவிருக்கிறது என்பதைக் கூறி, அமைகிறேன். ❖

# பகுத்தறிவு பகலவன்
# தந்தை பெரியார் பிறந்தநாளை
# ‘சமூகநீதி நாள்’ ஆகக் கொண்டாடுவோம்

## 06.09.2021

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முறையாக 1967ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது, ‘இந்த ஆட்சியே தந்தை பெரியாருக்குக் காணிக்கை’ என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்தார்கள். ஆறாவது முறை ஆட்சிக்கு வந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு, அந்தப் பகுத்தறிவுப் பகலவனின் அறிவுச்சுடரைப் போற்றும் விதமாக, வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பு ஒன்றை விதி 110இன்கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு, இந்த மாமன்றத்தில் வெளியிடுவது என் வாழ்வில் கிடைத்ததற்கரிய நல்வாய்ப்பு என்பதை எண்ணி மகிழ்கிறேன்.

“ஈ.வெ. இராமசாமி என்கிற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப்போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக்கொண்டு அதேப் பணியாய் இருப்பவன். இதைச் செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணியைச்செய்ய யாரும் வராததினால், நான் அதை மேற்போட்டுக்கொண்டு தொண்டாற்றி வருகிறேன்” என்று அறிவித்துக்கொண்டு, 95 வயது வரை மூத்திரச் சட்டியைத் தூக்கிக்கொண்டு இந்த இனத்துக்காக, நாட்டுக்காகப் போராடியவர்தான் தந்தை பெரியார் அவர்கள்.

‘மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு’ என்பதையே அடிப்படையாகக்கொண்டு சுயமரியாதை இயக்கம் தொடங்கிய தந்தை பெரியார் அவர்கள் மானமும் அறிவும் உள்ள மனிதர்களாக ஆக்குவதற்கு அறிவுலக ஆசானாக இந்த நாட்டை வலம் வந்தார். அவர் நடத்திய போராட்டங்கள் யாராலும் ‘காப்பி’ அடிக்க முடியாத போராட்டங்கள்; அவர் எழுதிய எழுத்துகள் யாரும் எழுதத் தயங்கும் எழுத்துக்கள்; அவர் பேசியப் பேச்சுக்கள், யாரும் பேசப் பயப்படும் பேச்சுகள்; தமிழர் நலமெல்லாம் தன்னுடைய நலமாகக் கருதினார்; தமிழர்க்கு எதிரானது எல்லாவற்றையும் தனது எதிரியாகக் கொண்டு எதிர்த்திருக்கிறார். அவர் நடந்த நடை, அவர் நடத்திய சுற்றுப்பயணங்கள், அவர் நடத்திய மாநாடுகள், அவர் நடத்திய போராட்டங்களைச் சொல்லத் தொடங்கினால், இந்த மாமன்றத்தையே பத்து நாட்களுக்கு ஒத்திவைத்துப் பேச வேண்டும்.

“மனிதனுக்கு மனிதன் ஏற்றத் தாழ்வு இல்லை; ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம்” – இவை இரண்டும்தான் அவரது அடிப்படைக் கொள்கைகள். சாதி ஒழிப்பு, பெண்ணடிமைத்தனம் ஒழிப்பு ஆகிய இரண்டும்தான் அவரது இலக்குகளாக இருந்திருக்கின்றன. அந்த இரண்டுக்கும் எவையெல்லாம் தடையாக இருக்குமோ, அவை அனைத்தையும் கேள்வி கேட்டார்; அறிவியல்பூர்வமாகக் கேள்வி கேட்டார்; தன்னைப் போலவே சிந்திக்கத் தூண்டினார்.

அவரது சுயமரியாதைச் சிந்தனையால் தமிழினம் சுயமரியாதைச் சிந்தனையைப் பெற்றது; அவர் உருவாக்கிய பகுத்தறிவின் கூர்மையால் தமிழினம் சிந்தனைத் தெளிவு பெற்றது. சாதியால் அடக்கி ஒடுக்கப்பட்ட மனிதர்கள் கல்வி, வேலைவாய்ப்பில் மேன்மையை அடைவதற்கான சமூகநீதிக் கதவைத் திறந்து வைத்தது அவரது கைத்தடியே ஆகும். தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல; இன்று இந்தியா முழுமைக்கும் சமூகநீதிக் கருத்துகள்

விதைக்கப்பட்டுள்ளன என்றால், அதற்கு அவர் போட்ட அடித்தளமே காரணம்.

நாடாளுமன்றத்தின் வாசலுக்கேப் போகாத அவரால்தான் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் முதல் முதலாகத் திருத்தம் செய்யப்பட்டது. சட்டமன்றத்துக்குள் வர ஆசைப்படாத அவரது சிந்தனை கொண்ட சட்டங்கள் ஏராளமாக இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. தனது சிந்தனையை அடுத்தவர் மூலமாகச் செய்ய வைக்கும் அபூர்வமான ஆற்றல் அவருக்குத்தான் இருந்தது.

‘என் வாழ்வில் வசந்த காலம் என்பது தந்தை பெரியாரோடு நான் இளைஞராக இருந்து வலம்வந்த காலம்தான்’ என்று நம்மையெல்லாம் உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

“பாராட்டிப் போற்றி வந்த பழமை லோகம்
ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்”

என்று எழுதினார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். பேரறிஞர் பெருந்தகையும், தலைவர் கலைஞர் அவர்களும் உருவான குருகுலம் பெரியாருடைய குருகுலமாகும். இந்தக் குருகுலத்துப் பயிற்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கி, அரசியல் புரட்சிகரக் கருத்துக்களைத் தமிழ்நாட்டில் விதைத்து, ஆட்சிக்கு வந்து அதே கொள்கையை நிறைவேற்றிவரும் அந்தக் காட்சியை நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். இது உலகில் எந்த சீர்திருத்த இயக்கத்துக்கும் கிடைக்காத புகழாகும். சீர்திருத்தவாதிகள் பேசிவிட்டுப் போயிருப்பார்கள்; ஆட்சியாளர்களுக்கு அதன் வாசனையே இருக்காது. தமிழ்நாட்டில் மட்டும்தான் ஒரு சீர்திருத்த இயக்கம், அரசியல் இயக்கமாக மாறி, அந்த இயக்கம் சீர்திருத்தக் கருத்துக்களை நடைமுறைப்படுத்தி, சட்டமாகவும் ஆக்கி அந்தச் சமுதாயத்தை மேன்மை அடைய வைத்திருக்கிறது.

அவரால் கல்வி பெற்றவர்கள், அவரால் வேலைவாய்ப்பைப் பெற்றவர்கள், அவரால் அதிகாரத்தைப் பெற்றவர்கள், அவரால் பெண்ணினம் அடைந்த வளர்ச்சிகள், ஒடுக்கப்பட்ட மக்கள் அடைந்த எழுச்சிகள் ஆகியவற்றுக்கு இன்றைய தமிழ்நாடே சாட்சி. இந்த விதை தந்தை பெரியார் போட்ட விதை; பேரறிஞர் அண்ணா அதற்கு எருவூட்டினார்; கலைஞர் அவர்கள் வளர்த்தார்கள். அதனை மாபெரும் விருட்சமாகக் காப்பாற்ற வேண்டியக் கடமை நமக்கு இருக்கிறது.

சுயமரியாதை, பகுத்தறிவு, சமதர்மம், சமூகநீதி, இன உரிமை ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட கொள்கையைத் தந்தை பெரியார் அவர்கள் உருவாக்கினார்கள். அதுதான் கடந்த நூற்றாண்டில் இந்தச் சமூகத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்டது; எதிர்காலத்துக்குப் பாதை அமைத்துத் தரப்போகிறது.

இந்த உணர்வை, உணர்ச்சியை, எழுச்சியை, சிந்தனையை விதைக்கும் அடையாளமாக அறிவாசான் தந்தை பெரியார் பிறந்த செப்டம்பர் 17ஆம் நாளை ஆண்டுதோறும் ‘சமூகநீதி நாள்’ ஆகக் கொண்டாடுவது என்று தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது. தந்தை பெரியாரின் அறிவு வெளிச்சத்தில் வளர்ந்த நாம், நமது நன்றியின் அடையாளமாக இந்த நாளைக் கொண்டாடுவோம்; சாதிய ஏற்றத் தாழ்வுகள், தீண்டாமைக் கொடுமைகளை, மத வேறுபாடுகளை உதறித் தள்ளுவோம்; பெண்களைச் சமநிலையில் மதிப்போம். அந்த எண்ணத்தை விதைக்கும் விதமாக இந்த உறுதிமொழியைத் தயாரித்துள்ளோம். ஆண்டுதோறும் செப்டம்பர் 17ஆம் நாளன்று தலைமைச் செயலகம் தொடங்கி, அனைத்து அரசு அலுவலகங்களிலும் கீழ்க்கண்ட உறுதிமொழியை அனைவரும் எடுத்துக்கொள்வோம்.

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற அன்பு நெறியும்
யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பண்பு நெறியும்

எனது வாழ்வியல் வழிமுறையாகக் கடைப்பிடிப்பேன்!

சுயமரியாதை ஆளுமைத் திறனும், பகுத்தறிவுக் கூர்மைப் பார்வையும் கொண்டதாக என்னுடைய செயல்பாடுகள் அமையும்!

சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை நான் ஒப்படைத்துக்கொள்வேன்!

மானுடப் பற்றும் மனிதாபிமானமும் ஒன்றே எனது இரத்த ஓட்டமாக அமையும்!

சமூகநீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைக்கும் எனது பயணம் தொடர இந்த நாளில் உறுதியேற்கிறேன்!"

என்ற உறுதிமொழியை எடுத்துக்கொள்வோம் என்று இந்த மாமன்றத்துக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தந்தை பெரியார் மறைந்தபோது, 'தந்தை பெரியார் தனது சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டார், நாம் தொடர்வோம்' என்றார் அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள். எனவே, நாம் தொடர்வோம்! தொடர்வோம்! தொடர்வோம்!

❖ ❖ ❖

# அரசுப் பணியாளர்களின் கோரிக்கையை ஏற்று அகவிலைப்படி உயர்வு முன்னதாகவே அமல்படுத்தப்படும்

## 07.09.2021

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களின் உற்ற நண்பனாக, அவர்களுக்கு உரிமைகளையும், சலுகைகளையும் வழங்கும் தோழனாக என்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்பட்டு வருகிறது. பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற அரசுகள் அறிவித்துச் செயல்படுத்திய, அரசு ஊழியர்களுக்கான நலத் திட்டங்கள் எண்ணற்றவை; இந்த நாட்டிற்கே வழிகாட்டுபவை.

அந்த வகையில், அண்மையில், பல்வேறு அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்கங்களைச் சார்ந்த சங்கப் பிரதிநிதிகள் அரசிடம் வைத்த கோரிக்கைகளையெல்லாம் பரிசீலித்து, பின்வரும் முக்கிய அறிவிப்புகளை 110 விதியின்கீழ் வெளியிட விரும்புகிறேன்.

- ✶ அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி உயர்வு குறித்து, நிதிநிலை அறிக்கையில் 01.04.2022 முதல் அமல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதுகுறித்து வரப்பெற்ற அரசு ஊழியர்கள் சங்கங்களின் கோரிக்கையினைக் கனிவுடன் பரிசீலித்து, இந்த அரசுக்குக் கடும் நெருக்கடியான நிதிச் சூழல் இருப்பினும், அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, அறிவிக்கப்பட்ட நாளுக்கு மூன்று மாத காலத்திற்கு

முன்னதாகவே, அதாவது, 01.01.2022 முதல், அகவிலைப்படி உயர்வு அமல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதன்மூலம் 16 இலட்சம் அரசு அலுவலர்கள் மற்றும் ஒய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இவ்வாறு அறிவிக்கப்பட்ட காலத்திற்கு முன்னரே, அகவிலைப்படி உயர்வினை அமல்படுத்துவதால், மூன்று மாத காலத்திற்குக் கூடுதலாக ஆயிரத்து 620 கோடி ரூபாய் செலவினம் ஏற்படும். ஆண்டொன்றுக்குக் கூடுதலாக 6 ஆயிரத்து 480 கோடி ரூபாய் செலவாகும்.

- சத்துணவு மையங்களில் பணிபுரியும் சத்துணவுச் சமையலர்கள் மற்றும் சமையல் உதவியாளர்கள் ஆகியோரின் ஓய்வுபெறும் வயது 58லிருந்து 60ஆக உயர்த்தப்படும். இதன்மூலம் தற்போது பணியிலிருக்கும் 29 ஆயிரத்து 137 சமையலர்களும், 24 ஆயிரத்து 576 சமையல் உதவியாளர்களும் பயன்பெறுவார்கள்.

- அரசுப் பணியாளர்கள் தங்கள் பணிக் காலத்தில் பெற்றிடும் கூடுதல் கல்வித் தகுதிகளுக்கான ஊக்க ஊதிய உயர்வு 2020ஆம் ஆண்டு ரத்து செய்யப்பட்டது. அரசுப் பணியாளர்கள் பெற்றிடும் கூடுதல் கல்வித் தகுதியின்மூலம் அவர்களுடைய பணித்திறன் மற்றும் அவர்களது செயல்பாடுகள் மேம்படுவதை ஊக்குவிக்கும் பொருட்டு, உயர் கல்வித் தகுதிகளுக்கான ஊக்கத் தொகை, ஒன்றிய அரசால் அண்மையில் அறிவித்துள்ள வழிகாட்டு முறைகளின் அடிப்படையில் விரைவில் அறிவிக்கப்படும்.

- அரசுப் பள்ளிகளில் காலியாகவுள்ள இளநிலை உதவியாளர் பணியிடங்கள், தேவைக்கேற்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக நிரப்ப விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

* ஓய்வுபெறும் நாளில் அரசுப் பணியாளர்கள் தற்காலிக பணிநீக்கத்தில் வைக்கும் நடைமுறை தவிர்க்கப்படும்.

* 2016, 2017 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் முந்தைய அரசுக்கு எதிராக அரசு ஊழியர்கள் நடத்திய வேலைநிறுத்தப் போராட்டங்கள் தொடர்பாக, பல்வேறு சங்கங்கள் தங்கள் வேலைநிறுத்தக் காலம் மற்றும் தற்காலிகப் பணி நீக்கக் காலத்தினைப் பணிக் காலமாக முறைப்படுத்த வேண்டுமெனக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதனைப் பரிவுடன் பரிசீலித்து, பாதிக்கப்பட்ட அரசு ஊழியர்களுடைய வேலைநிறுத்தக் காலம் மற்றும் தற்காலிகப் பணிநீக்க காலம் ஆகியவை பணிக் காலமாக முறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* வேலைநிறுத்தப் போராட்டத்தின்போது பணியிட மாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களை, அதே இடத்தில் மீண்டும் பணியமர்த்தும் வகையில், கலந்தாய்வின்போது அவர்களுக்கான உரிய முன்னுரிமை வழங்கப்படும். மேலும், போராட்டக் காலத்தில் அவர்கள்மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் கைவிடப்படும். அந்த ஒழுங்கு நடவடிக்கையின் காரணமாகப் பதவி உயர்வு ஏதேனும் பாதிக்கப்பட்டிருந்தால், அவையும் சரிசெய்யப்படும்.

* பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரர்கள் கருணை அடிப்படையில் அரசுப் பணி பெறுவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை நீக்கும் வகையிலும், கருணை அடிப்படையிலான நியமனங்கள் குறித்து தற்போது நடைமுறையில் உள்ள தெளிவின்மையினைச் சரிசெய்யும் வகையிலும் உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படும்.

* அரசுப் பணியாளர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அரசு ஊழியர்களைச் சார்ந்து வாழும் மகன்கள் மற்றும் மகள்கள் ஆகியோரை அவர்களது வயது வரம்பினைக் கருத்தில் கொள்ளாமல் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் வகையில் ஆணைகள் பிறப்பிக்கப்படும். மேலும், அரசு ஊழியர்கள் இத்திட்டத்தின்கீழ் இடர்பாடுகள் எதுவுமின்றி பயன்பெற ஏதுவாக, அவர்களுக்கு உதவிடும் வகையில் ஒருங்கிணைந்த தனி தொலைபேசி உதவி மையம் (Help Desk) ஒன்று அமைக்கப்படும்.

* மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அரசு ஊழியர் சங்கங்களால் கொரோனாவுக்கான சிகிச்சைகளை உயர் சிகிச்சைப் பிரிவில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை அளிக்கப்பட்டுள்ளது. கொரோனா சிகிச்சைகளைப் பொறுத்தவரையில், அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள சிகிச்சை தொகையான 10 இலட்சம் ரூபாயைவிடவும் கூடுதலாக, கொரோனா சிகிச்சைக்கான செலவுத் தொகை அரசு நிதி உதவியின்கீழ் அனுமதிக்கப்படும்.

* கணக்கு மற்றும் கருவூல துறையின் (IFHRMS) பணிகளை எளிதாக மேற்கொள்ளும்பொருட்டு, அவற்றைத் துரிதமாகவும், எளிதாகவும் செயல்படுத்தக்கூடிய வகையில், மாவட்டந்தோறும் பணியாளர்களுக்கு உரியப் பயிற்சி அளிக்கப்படும்.

* புதியதாக அரசுப் பணியில் சேரும் அரசுப் பணியாளர்கள் மற்றும் பதவி உயர்வு பெறும் பணியாளர்களுக்கு, பணி தொடர்பான பயிற்சியினை அந்தந்த மாவட்டங்களிலேயே வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம்

பவானிசாகர் சென்று பயிற்சி பெறும் நிலை தவிர்க்கப்பட்டு, தாமதமின்றி அரசு ஊழியர்கள் உரியக் காலத்தில் தங்களுக்குரிய தகுதிகாண் பருவம் முடித்தல் மற்றும் பதவி உயர்வு பெறுவது உறுதி செய்யப்படும்.

- ✶ அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை அதிகரித்துள்ளதால், ஆசிரியர் மாணவர் விகிதாச்சார தேவைக்கேற்ப, ஆசிரியர் பணி நியமனம் மேற்கொள்ளப்படும்.

மக்களாட்சித் தத்துவத்தின் நான்கு தூண்களில் ஒன்றான நிருவாகத்தின் அடித்தளமாக விளங்குபவர்கள் அரசு ஊழியர்கள். அவர்களது நலனில் எப்போதுமே அக்கறை கொண்டு அவர்களது நியாயமான கோரிக்கைகளை இந்த அரசு படிப்படியாக, நிச்சயமாக, உறுதியாக நிறைவேற்றும் என்று தெரிவித்து அமைகிறேன்.

❖ ❖ ❖

## ‘தமிழ்நாடு ஆதிதிராவிடர்–பழங்குடியினர் நல ஆணையம்’ உருவாக்கம்

### 08.09.2021

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி எப்போது அமைகின்றதோ, அப்பொழுதெல்லாம் ஒடுக்கப்பட்டவர்களுக்காகவும், ஒதுக்கப்பட்டவர்களுக்காகவும் பாடுபடுகிற அரசாக விளங்கியிருக்கிறது. சமூகத்தில் சதிகளாலும், சாதிகளாலும் புறக்கணிப்பட்டவர்களை அன்புக்கரம் கொண்டு அரவணைத்து, அவர்கள் தங்களிடம் தேங்கிக் கிடக்கும் திறமைகளையும், அவர்களால் சமூகம் பெறத்தக்க பங்களிப்புகளையும் வெளிக்கொண்டு வருவதில் அதிக அக்கறையை எப்போதும் காட்டி வரும் கொள்கைப் பிடிப்பைக் கொண்ட இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்தியாவிலேயே முதன்முறையாக ஆதிதிராவிடர்களுக்குக் கான்கிரீட் கூரையிலான தொகுப்பு வீடுகள், இரட்டைக் குவளை முறை ஒழிப்பு, சமத்துவபுரங்கள், சமத்துவ மயானத்திற்கு ஊக்கத்தொகை, உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தவே முடியாமலிருந்த பாப்பாரப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டகச்சியேந்தல் ஆகிய இடங்களுக்கு உள்ளாட்சித் தேர்தலை நடத்தி, சமத்துவப் பெருவிழா கொண்டாடியவை போன்ற எண்ணற்றச் செயல்பாடுகளை இதற்கு எடுத்துக்காட்டாக இயம்ப இயலும்.

முதலமைச்சர் தலைமையில் மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை நடத்தப்பட வேண்டுமென்பது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் இடம்பெற்றிருக்கும் முக்கிய விதி. இதில் முன்பெல்லாம் ஆளுங்கட்சி மக்கள் பிரதிநிதிகளையும், ஆதரவுக் கட்சி மக்கள் பிரதிநிதிகளையும் மட்டுமே அழைத்து நடத்தப்பட்ட கூட்டம்போல் இல்லாமல், அனைத்து இயக்கங்களையும் சார்ந்த நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களைக் குழு உறுப்பினர்களாக அமைத்து, ஐம்பதுக்கும் மேற்பட்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய அரசாணையை நாங்கள் வெளியிட்டோம். அவர்களையெல்லாம் அழைத்து ஆகஸ்டு மாதம் 19ஆம் நாள் கூட்டம் நடத்தப்பட்டது.

அனைத்துத் தரப்புக் கருத்துகளையும் உள்ளடக்கி, ஒருங்கிணைந்த பார்வையை மக்கள் பிரச்சினைகளில் செலுத்தித் தீர்வுகாண வேண்டும் என்பதே நம்முடைய நோக்கம். பேரறிஞர் அண்ணா ‘மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு’ என்று சொல்லியதை இதயத்தில் ஏற்றி, ஏற்றுக்கொள்ளத்தக்கக் கருத்து எங்கிருந்து வந்தாலும் அதை வரவேற்றுச் செயல்படுத்தி, எளிய மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதுதான் நம்முடைய நோக்கம். அந்த அடிப்படையில், அந்தக் கூட்டத்திலே பல நல்ல கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. முதல் கட்டமாக, அவற்றில் சிலவற்றைச் செயல்படுத்த வேண்டும் என்று எண்ணி இம்மாமன்றத்தில் அறிவிக்க விரும்புகிறேன்.

முதலாவதாக, மாநில அளவில் ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோருடைய சட்டப்பூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுடைய முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், ‘தமிழ்நாடு ஆதிதிராவிடர்–பழங்குடியினர் நல ஆணையம்’ என்கிற புதிய அமைப்பு ஒன்றைத் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் வகையில் இந்த அரசு உருவாக்கச்

சட்டம் இயற்றும். அதற்கான சட்டமுன்வடிவ வரைவு இந்தச் சட்டமன்றத் தொடரிலேயே தாக்கல் செய்யப்படும்.

இரண்டாவதாக, அக்கூட்டத்தில் ஆதிதிராவிட நலத்துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளைப் பொது நீரோட்டத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்கிற ஒரு கருத்தும் முன்வைக்கப்பட்டது. முதற்கட்டமாக, அப்பள்ளிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்த ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள், அறிவுத்திறன் வகுப்பு, கணினிப் பயிற்சி போன்றவை பள்ளிக் கல்வித்துறையின் வழிகாட்டுதலின்படி செயல்படுத்தப்படும். ஆனால், பள்ளிகளை நிருவகிப்பது தொடர்ந்து ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறையின் கைவசமே இருக்கும். பள்ளிகளில் காலிப் பணியிடங்களை நிரப்புதல், பணி அமைப்பை நிருவகித்தல், நிருவாகப் பணிகளைக் கையாளுதல் போன்றவற்றை அத்துறையே செயல்படுத்தும். பள்ளிக் கல்வித்துறை அவற்றில் தலையிடாது.

மூன்றாவதாக, வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் பதியப்பட்டுள்ள வழக்குகளை விரைவாக இறுதி செய்வதற்குத் தற்சமயம் தமிழ்நாட்டில் 18 சிறப்பு நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. மேலும், நான்கு புதிய நீதிமன்றங்கள் அமைப்பதற்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆகஸ்டுத் திங்கள் நடைபெற்ற மாநில அளவிலான விழிப்புணர்வுக் கூட்டத்தைத் தொடர்ந்து இன்னும் நான்கு புதிய நீதிமன்றங்களைச் சேலம், கிருஷ்ணகிரி, மதுரை, திருநெல்வேலி என வழக்குகள் அதிகம் நிலுவையில் உள்ள மாவட்டங்களில் நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மதுரையிலும், திருநெல்வேலியிலும் ஏற்கெனவே சிறப்பு நீதிமன்றங்கள் இருந்தாலும், இந்த நான்கு மாவட்டங்களில் அதிக அளவில் வழக்குகள் நிலுவையில் இருப்பதால் கூடுதல் நீதிமன்றங்கள் அமைக்கப்படும்.

நான்காவதாக, வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோரை சமுதாயக் கண்ணோட்டத்துடன் அணுகி, முறையான நிவாரணம், வளமான எதிர்காலத்திற்கான உத்தரவாதம் ஆகியவற்றை வழங்குவதற்குத் தேவையான விழிப்புணர்வுப் பயிற்சிகள் ‘சமத்துவம் காண்போம்’ என்கிற தலைப்பில் காவல்துறை, வருவாய்த் துறை அலுவலர்களுக்கு நடத்தப்படும்.

ஐந்தாவதாக, தமிழ்நாட்டில் பல கிராமங்களில் சாதி வேறுபாடுகளற்ற மயானங்கள் பயன்பாட்டில் உள்ளன. இறுதிப் பயணத்திலும் பிரிவினைகள் இருக்கக் கூடாது என்பதில் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கும் இத்தகைய சிற்றூர்களுக்கு ஊக்கத்தொகையாக வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்த அரசு சார்பில் 10 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையாக வழங்கப்படும்.

ஆறாவதாக, வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழக்கின் தன்மைக்கேற்றவாறு, 85,000 ரூபாயிலிருந்து 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வரை தற்சமயம் வழங்கப்பட்டு வருகிறது. இனி இத்தொகை பாதிக்கப்பட்டவர்களுக்குக் குறைந்தபட்சமாக ஒரு இலட்சம் ரூபாயும், அதிகபட்சமாக 12 இலட்சம் ரூபாயாகவும் மாநில அரசு நிதி மூலம் உயர்த்தி வழங்கப்படும்.

விழிப்புணர்வுக் கூட்டமே தேவையில்லை என்கிற நிலையை அடைவதே நம் இலக்கு. தமிழ்நாட்டு மக்களின் மனதில் மடைமாற்றத்தை ஏற்படுத்தி, நாம் அனைவரும் அய்யன் திருவள்ளுவர் கூறியதற்கேற்பப் ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற ஒப்பற்றத் தத்துவத்தின்படி இணைந்து வாழ அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டுமென்று உங்கள் அனைவரையும் கேட்டு அமைகிறேன்.

❖ ❖ ❖

# அகழாய்வில் கிடைத்த அரிய பொருளைக் காட்சிப்படுத்த திருநெல்வேலியில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் அருங்காட்சியகம்

## 09.09.2021

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வீழ்வது நாமாக இருந்தாலும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்' என்ற உணர்வை நமக்கெல்லாம் ஏற்படுத்திய தமிழினத் தலைவர் கலைஞர் போற்றிய செம்மொழியாம் தமிழ்மொழியின் பெருமையை, உலகத்துக்கு நாகரிகத்தையும், பண்பாட்டையும் கற்றுக்கொடுக்க, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வலம்வந்த தமிழினத்தின் சிறப்பைப் பறைசாற்றும் அறிவிப்பு ஒன்றை, விதி 110இன்கீழ் இந்த மாமன்றத்தில் தங்களுடைய அனுமதியோடு பெருமையாக நான் வெளியிடுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதெல்லாம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றதோ; அப்போதெல்லாம் அது தமிழின் ஆட்சியாக, தமிழினத்தின் ஆட்சியாகத்தான் இருந்துள்ளது.

தமிழ் மாநிலத்துக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டியது; நூற்றாண்டுக் கனவான செம்மொழித் தகுதியைத் தமிழுக்குப் பெற்றுத்தந்தது; 'மெட்ராஸ்' என்ற பெயரைச் 'சென்னை' என மாற்றியது; தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கையை நிறைவேற்றியது; ஸ்ரீ, ஸ்ரீமதி என்ற சொற்களுக்கு மாற்றாக திரு, திருமதி ஆகிய சொற்களைச் சட்டப்பூர்வமாக ஆக்கியது; தலைநகரில்

வள்ளுவர் கோட்டமும், குமரிமுனையில் 133 அடியில் வள்ளுவர் சிலையும் அமைத்தது; திரும்பிய பக்கமெல்லாம் திருக்குறளைத் தீட்டியது; 'தமிழ் வாழ்க' என எழுத வைத்தது; சிலம்பின் பெருமையைக் காட்டும் பூம்புகார் கோட்டம் அமைத்தது; தமிழில் வழிபாடு செய்யும் உரிமையை வழங்கியது; ஆட்சிமொழியாய்த் தமிழை முழுமைப்படுத்தியது; தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம் அனைத்துப் பாடங்களையும் தமிழில் மொழிபெயர்த்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடப் புத்தகங்களை வெளியிட்டது; தமிழைக் கணினிமொழி ஆக்கியது; பிற பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இணையானவர்களாகத் தமிழாசிரியர்களை ஆக்கியது; தமிழாசிரியர்களும் தலைமையாசிரியர் ஆகலாம் என உயர்த்தியது; உலகம் முழுவதும் தமிழைப் பரப்பியது; உலகத் தமிழ் மாநாட்டை நடத்தியது; உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை நடத்தியது; தமிழறிஞர் நூல்களை எல்லாம் நாட்டுடைமை ஆக்கியதும், அவர்களது குடும்பத்துக்கு இலட்சக்கணக்கில் நிதி உதவி செய்ததும் என, 'தமிழ் அரசை' நடத்தியதுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு.

கடந்த நான்குமாத காலமாக, தி.மு.க. அரசு ஆற்றி வரும் தமிழ்ப் பணியை மீண்டும் நான் உங்களுக்கு நினைவூட்டத் தேவையில்லை. மாமன்னர்கள் பலர் இந்தியாவைத் தங்கள் குடையின்கீழ் கொண்டு வந்து ஆண்டபோதும், தனிக்குடையின்கீழ் ஆளுகை செலுத்திய மண் இந்தத் தமிழ் மண். பண்டைய நாகரிகம் கொண்டது தமிழ் மண் என்பதற்கு சான்றுகள் பல உள்ளன. இவையெல்லாம் ஏதோ சில இலக்கிய ஆதாரங்களை வைத்து மட்டும் நான் சொல்லவில்லை. அசைக்க முடியாத தொல்லியல் சான்றுகள் இருக்கின்றன. இவை அனைத்தும் யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாத சான்றுகள் ஆகும்.

முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள், தனது ஆட்சிக் காலத்தில் தொல்லியல், ஆழ்கடல் கள ஆய்வை விரிவாக மேற்கொள்ளப் பெருமுயற்சி எடுத்தார். கடந்த 1990ஆம் ஆண்டு கடல்சார் ஆய்வுக்குப் பெருந்திட்டம் தீட்டியதும், பின்னர் கடலில் மூழ்கிய பூம்புகார் நகரத்தினைக் கண்டறிய மேற்கொள்ளப்பட்ட ஆழ்கடல் அகழாய்வில் சில கட்டுமானப் பகுதிகள் கண்டறியப்பட்டதும், முத்தமிழறிஞர் கலைஞருடைய பெருமுயற்சியால்தான் என்பதை அனைவரும் நன்றாக அறிவோம்.

அந்த வரிசையில், சிவகங்கை மாவட்டம், கீழடியில் தற்போது நடைபெற்றுவரும் அகழ்வாராய்ச்சி உலக அரங்கில் அனைவரது கவனத்தையும் பெற்றிருக்கிறது. தமிழரின் பண்பாட்டு அடையாளங்களை அள்ளிக்கொடுக்கும் கீழடியில் நடைபெற்று வந்த அகழ்வாராய்ச்சியை ஒன்றிய அரசு பாதியிலேயே கைவிட்டபோது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அதற்கு எதிராக, தனது கடுமையான கண்டனத்தைப் பதிவுசெய்தார். நானும் கடந்த 2019ஆம் ஆண்டு, கீழடிக்கு நேரடியாகச் சென்று, அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த அகழாய்வுப் பணிகளைப் பார்வையிட்டேன். வியக்கவைக்கும் செங்கல் கட்டுமானங்கள், கருப்பு மற்றும் சிவப்பு வண்ணம் தாங்கிய பானை ஓடுகள், அரிய கல்மணிகள், தங்க அணிகலன்கள், சிந்துவெளி நாகரிகக் காலத்தில் காணப்பட்ட அதே திமில் கொண்ட காளையின் எலும்புகள், விளையாட்டுப் பொருட்கள், தொழிற்பகுதிகள் என ஒரு செழுமைமிக்க சமூகமாக, சங்ககாலத் தமிழர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை நாம் மட்டுமல்ல; உலகமே அறிந்துகொண்டது.

அதுமட்டுமல்ல; கரிமப் பகுப்பாய்வு (Carbon Dating) முடிவுகளின்படி, கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே எழுத்தறிவு பெற்ற சமூகமாகச் சங்ககாலத் தமிழர்கள் விளங்கினர் என்பதும்

உறுதியானதை இம்மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். அந்தவகையில், 'கீழடி' என்ற ஒற்றைச் சொல் உலகத் தமிழர்களை ஒன்றிணைத்தது என்றே சொல்லவேண்டும். அதே உணர்வைத் தாங்கி தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை கீழடி, ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை, கொடுமணல், மயிலாடும்பாறை, கங்கைகொண்டசோழபுரம் ஆகிய இடங்களில் தற்போது அகழாய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. அப்போது கிடைத்த பல்வேறு பழமைவாய்ந்தப் பொருட்கள் குறித்து, அகில இந்திய அளவில் புகழ்பெற்ற தொல்லியல் ஆய்வாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களைத் தமிழ்நாடு தொல்லியல் துறை கலந்தாலோசித்தது. அதன்படி, கீழ்க்கண்ட முக்கிய முடிவுகளை வெளியிடுவதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

- கீழடியில் சூரியன், நிலவு மற்றும் வடிவியல் குறியீடுகள் கொண்ட முத்திரைகளுடன் கூடிய வெள்ளிக் காசு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதை ஆய்வுசெய்த தலைசிறந்த நாணயவியல் அறிஞரும், கொல்கத்தா பல்கலைக்கழகப் பேராசிரியருமான சுஷ்மிதா பாசு மசும்தார், இந்த வெள்ளிமுத்திரைக் காசு, கி.மு. நான்காம் நூற்றாண்டுக்கு, அதாவது, மௌரியப் பேரரசர் அசோகர் காலத்திற்கும் முற்பட்டது என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

- ஏற்கெனவே, கரிமப் பகுப்பாய்வு முடிவுகளின்படி, கீழடியில் கண்டெடுக்கப்பட்ட தமிழி எழுத்துக்களின் காலம், கி.மு. ஆறாம் நூற்றாண்டு என்று அறிவிக்கப்பட்ட நிலையில், அதை வலுப்படுத்தும் விதமாக, தற்போது பெறப்பட்ட இரண்டு கரிம மாதிரிகளின் பகுப்பாய்வு முடிவுகளிலும், கீழடி நாகரிகம் கி.மு. ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்தது எனத்

தெரியவந்துள்ளது என்ற செய்தியை நான் பெருமையோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- முந்தைய அகழாய்வுகளில் கிடைக்கப்பெற்ற கரிமப் பகுப்பாய்வுகளின் காலக் கணக்கீட்டு முடிவுகளின்படி, கி.மு. எட்டாம் நூற்றாண்டிற்கு முன்பாகவே, கொற்கை ஒரு துறைமுகமாகச் செயல்பட்டு வந்தது என்பது ஏற்கெனவே உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போது, கொற்கையில் நடைபெற்றுவரும் அகழாய்வில் கருப்பு வண்ணப்பூச்சு பெற்ற கங்கைச் சமவெளியைச் சார்ந்த பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இவற்றைக் கவனமாக ஆய்வுசெய்த இந்தியத் தொல்லியல் துறையின் முன்னாள் தலைமை இயக்குநர் முனைவர் ராகேஷ் திவாரி மற்றும் பனாரஸ் இந்து பல்கலைக்கழகப் பேராசிரியர் ரவீந்திரநாத் சிங் ஆகியோர், கொற்கைத் துறைமுகமானது கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னரே வெளிநாடுகளுடனும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

- இவற்றுக்கெல்லாம் மகுடம் சூட்டும் வகையில், ஒரு முக்கிய ஆய்வு முடிவை இங்கு நான் வெளியிட விரும்புகிறேன். தமிழ்நாடு தொல்லியல் துறையால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வின்போது ஆதிச்சநல்லூருக்கு அருகே, சிவகளைப் பறம்புப் பகுதியில் வெளிப்பட்ட முதுமக்கள் தாழி ஒன்றில் கண்டெடுக்கப்பட்ட நெல்மணிகள் அமெரிக்க நாட்டின் மயாமி நகரத்தில் அமைந்திருக்கும் உலகப்புகழ் பெற்ற Beta Analytical Laboratory–க்குப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன. அதன் ஆய்வு முடிவுகள் சமீபத்தில் கிடைத்துள்ளன. AMS

Carbon Dating முறையில் ஆய்வு செய்ததில், முதுமக்கள் தாழியில் கண்டெடுக்கப்பட்ட நெல்மணிகளின் காலம் கி.மு. 1155 எனக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, 'தண்பொருநை' என்று அழைக்கப்பட்ட தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் 3,200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை அறிவியல் ஆய்வுகளின் அடிப்படையில் உறுதிசெய்ய முடிகிறது என்பதைத் தமிழ்கூறும் நல்லுலகம் அறியும் வகையில், இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் அளவிட முடியாத பெருமிதமும், மனமகிழ்ச்சியும் நான் கொள்கிறேன்.

பண்டைய தமிழர்களின் செழுமையான பண்பாடு, கடல்வழி வணிகம், நீர் மேலாண்மை, இரும்பு உருக்குதல், அரிய மணிகள் தயாரித்தல், முத்துக் குளித்தல் போன்ற தொழில்நுட்பங்களை உலகம் அறிந்துகொள்ளத் தேவையான சான்றுகளைச் சேகரிக்கும் வகையில், இந்தியாவில் வேறெந்த மாநிலத்தை விடவும் அதிக அளவு நிதியாக ஐந்து கோடி ரூபாய் நடப்பு நிதியாண்டில் அகழ்வாராய்ச்சிப் பணிக்காகவும், ஆழ்கடல் அகழாய்வுக்காகவும் இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருப்பதை, மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.

அதன் தொடர்ச்சியாக, ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை உள்ளிட்டப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின்போது கிடைத்த அரிய பொருட்களை அழகுறக் காட்சிப்படுத்தும் விதமாக, திருநெல்வேலி நகரில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளோடு அருங்காட்சியகம் அமைக்கப்படும். இது 'பொருநை அருங்காட்சியகம்' என அழைக்கப்படும்.

இதுமட்டுமல்ல; தமிழ்ப் பண்பாட்டின் வேர்களைத் தேடி, இந்தியத் துணைக்கண்டமெங்கும்; அதேபோல் கடல்கடந்து பயணம்

செய்து தமிழர்கள் வெற்றித்தடம் பதித்த வெளிநாடுகளிலும்; தமிழ்நாடு தொல்லியல் துறை உரிய அனுமதிகள் பெற்று இனி ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும் என்பதை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

முதற்கட்டமாக, சங்ககாலத் துறைமுகமான முசிறி, தற்போது பட்டணம் என்ற பெயரில் கேரள மாநிலத்தில் அமைந்துள்ளது. சேரநாட்டின் தொன்மையினையும், பண்பாட்டினையும் அறிந்து கொள்ளும் வகையில், கேரள மாநிலத் தொல்லியல் வல்லுநர்களுடன் இணைந்து அங்கு ஆய்வுப் பணி மேற்கொள்ளப்படும். அதேபோல், ஆந்திர மாநிலத்திலுள்ள வேங்கி, கருநாடக மாநிலத்தின் தலைக்காடு மற்றும் ஒடிசா மாநிலத்திலுள்ள பாலூர் ஆகிய வரலாற்றுச் சிறப்புடைய இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ள உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

அன்றைய ரோமப் பேரரசின் ஒருபகுதியாக விளங்கிய எகிப்து நாட்டிலுள்ள குசிர்–அல்–காதிம் மற்றும் பெர்னிகா, மேலும் ஓமான் நாட்டின் கோர் ரோரி ஆகிய இடங்களில் பழந்தமிழகத்தோடு இருந்த வணிகத் தொடர்பை உறுதிசெய்யும் வகையில், தமிழி எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளன. அந்தப் பகுதிகளில், அந்தந்த நாட்டின் தொல்லியல் வல்லுநர்களோடு இணைந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

மாமன்னர் இராசேந்திர சோழன் வெற்றித் தடம் பதித்த தென்கிழக்காசிய நாடுகளான இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, வியட்நாம் ஆகிய நாடுகளில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அந்தந்த நாட்டுத் தொல்லியல் வல்லுநர்கள் துணையோடு, உரிய அனுமதி பெற்று ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என உலகிற்கு அறிவித்த தமிழரின் பண்பாட்டு அடையாளங்களைத் தேடி, இனி உலகெங்கும் பயணம் செய்வோம். இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு, இனி, தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் தொடங்கி எழுதப்பட வேண்டும் என்பதைச் சான்றுகளின் அடிப்படையில், அறிவியல் வழிநின்று நிறுவுவதே நமது அரசினுடைய தலையாயக் கடமை என்பதை இம்மாமன்றத்தின் மூலம் உலகிற்கு அறிவிப்பதில், உலகிற்கு எடுத்துக்காட்டாக எடுத்துச் சொல்வதில் பெருமிதம் கொண்டு, அந்தப் பெருமையோடு அமைகிறேன்.

❖ ❖ ❖

# கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட நகைக் கடன்கள் தள்ளுபடி

## 13.09.2021

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில், பத்தி 264–இல், ‘கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட 5 பவுனுக்கு உட்பட்ட நகைக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும்’ என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. அதனை நிறைவேற்றும் விதமாக தங்களது அனுமதியோடு, 110 விதியின்கீழ் நான் அறிவிப்பினை வெளியிட விரும்புகிறேன்.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மானியக் கோரிக்கையின்மீது, கடந்த 25.08.2021 அன்று நடந்த விவாதத்தின்போது, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், கடந்த ஆட்சியில் வழங்கப்பட்ட பயிர்க் கடன் தள்ளுபடியில் பல்வேறு குளறுபடிகள் நடந்துள்ளதை ஆதாரங்களோடு சுட்டிக்காட்டி, எவ்வாறு 2 இலட்சத்து 42 ஆயிரத்து 783 நபர்களுக்கு, 2 ஆயிரத்து 749 கோடியே 10 இலட்சம் ரூபாய் தவறாகத் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதை விரிவாக விளக்கிப் பேசினார். அந்த விவாதத்தின்போது, தொடர்ந்து பேசிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவ்வாறான தவறுகள் நகைக் கடன்களிலும் எந்தெந்த மாவட்டங்களில், எந்தெந்த வகையில் நடைபெற்றுள்ளன என்பதையும் விளக்கி, எனவே, நகைக் கடன்கள் ஒவ்வொன்றையும் தீவிரமான மற்றும் விரிவான ஆய்வுக்கு உட்படுத்தியப் பின்னரே தள்ளுபடி செய்வது

குறித்த முடிவு எடுக்கப்படும் என்பதை இந்த அவையிலே தெரிவித்திருந்தார். அதன்படி, அனைத்து நகைக் கடன்கள் பற்றிய முழு புள்ளிவிவரங்களும் சேகரிக்கப்பட்டு, கடந்த ஒரு மாத காலமாக தீவிர ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

அதனடிப்படையில், நகைக் கடன்கள் தள்ளுபடி என்பது ஒரு குடும்பத்திற்கு 5 பவுனுக்கு உட்பட்ட நகைக் கடன்களை சில தகுதிகளின்கீழ், உண்மையான ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் தள்ளுபடி செய்யப்படும் என்பதை நான் அறிவிக்க விரும்புகிறேன். இந்த நகைக் கடன்கள் தள்ளுபடி அறிவிப்பு குறித்து, தகுதியான நபர்களைக் கண்டறிவதற்காக, கடந்த ஒரு மாத காலம், ஒரு குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பெற்ற அனைத்து நகைக் கடன்கள் பற்றிய பெயர், கடன் பெற்ற கூட்டுறவு சங்கங்களின் விவரம், கடன் பெற்ற நாள், கடன் தொகை, கடன் கணக்கு எண், வாடிக்கையாளர் தகவல் குறிப்பு எண், குடும்ப அட்டை எண், ஆதார் எண், முகவரி, அலைபேசி எண் உள்ளிட்ட 51 விதமான தகவல்களைச் சேகரித்து, தொகுக்கப்பட்டு கணினி மூலம் விரிவான பகுப்பாய்வு செய்யப்பட்டன.

அவ்வாறு புள்ளிவிவரங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டதில் நகைக் கடன்கள் வழங்கப்பட்டதிலும், பல்வேறு விதிமீறல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நகைக் கடன் தள்ளுபடி செய்கையில் சரியான, தகுதியான ஏழை, எளிய மக்கள் மட்டுமே பயன்பெற வேண்டும் என்று இந்த அரசு கருதுகிறது. எனவே, 5 பவுனுக்கும் குறைவாக நகைக் கடன் பெற்றவர்களில் சில நேர்வுகளில் தள்ளுபடி செய்யவேண்டிய அவசியம் ஏற்படவில்லை எனக் கருதப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, 2021ஆம் ஆண்டு பயிர்க் கடன் தள்ளுபடி வழங்கப்பட்டதில் பயன் பெற்றவர்கள், ஒரே குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள், ஒரு கூட்டுறவு நிறுவனத்திலோ அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களிலிருந்தோ, ஒன்றுக்கும் மேற்பட்ட கடன்கள் மூலம்

5 பவுனுக்கு மேல் நகை ஈட்டின்பேரில் கடன் பெற்றவர்கள்; தவறாக AAY (அந்தியோதயா அன்ன யோஜன) குடும்ப அட்டையைப் பெற்று, அவற்றைப் பயன்படுத்தி நகைக் கடன் பெற்றவர்கள்; மற்றும் இதுபோன்ற மேலும் சில நேர்வுகளில் வழங்கப்பட்ட கடன்களைத் தள்ளுபடி செய்ய இயலாது. இதுகுறித்த விபரமான வழிமுறைகளை கூட்டுறவுத் துறை இன்னும் ஓரிரு நாளில் வெளியிடும்.

இந்த நகைக் கடன் தள்ளுபடி குறித்த தேர்தல் அறிக்கையில் அறிவிப்பு வெளிவந்தவுடன், முறையற்ற வகையில் தள்ளுபடி பெறவேண்டும் என்கிற தவறான நோக்கத்தோடு, நகைக் கடன்களைப் பெற்றிருப்பதும், குறிப்பாக, சில மாவட்டங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த முறைகேட்டில் ஈடுபட்ட சங்கங்களின்மீது தகுந்த நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும்.

மேற்கூறியவாறு, தகுதியுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 பவுனுக்கு உட்பட்டு நகைக் கடன்களைத் தள்ளுபடி செய்வதற்காக அரசுக்கு ஏற்படும் செலவு, பூர்வாங்க மதிப்பீடுகள் மற்றும் ஆய்வுகளின் அடிப்படையில் 6 ஆயிரம் கோடி ரூபாய் ஆகும் எனத் தெரிய வருகிறது. இதற்காக கூட்டுறவு நிறுவனங்களுக்கு, தமிழ்நாடு அரசு தேவையான உதவிகளை செய்யும் என்பதையும் இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு நிறுவனங்கள் இனி நேர்மையாக, திறமையாக, ஏழை, எளிய விவசாயிகளும், நடுத்தர வர்க்கத்தினரும் பயன்பெறும் வகையில் செயல்படத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். முழுமையான கணினிமயமாக்கம், Core Banking போன்ற நவீன வசதிகளுடன் கூட்டுறவு நிறுவனங்கள் முறையாகக் கண்காணிக்கப்பட்டு, எதிர்காலத்தில் சிறப்பாக நடத்திச் செல்லப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்து அமைகிறேன்.

❖ ❖ ❖

# சமூக நீதிக்கான
# நமது போராட்டம் தொடரும்...

## 06.01.2022

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

‘எல்லோருக்கும் எல்லாம் என்ற திசை நோக்கி நகரட்டும் இந்த வையம்’ என்ற உன்னதமான குறிக்கோளைக் கொண்டதுதான் இந்த அரசு. குறிப்பாக, கல்வி என்பதை அடிப்படை உரிமையாகச் செயல்படுத்திக் காட்ட நினைக்கக்கூடிய அரசாகவும் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. எந்தவொரு கல்லூரிச் சேர்க்கையாக இருந்தாலும், அதற்கு வைக்கப்படும் நுழைவுத் தேர்வானது ஏழை, எளிய, கிராமப்புற விளிம்பு நிலை மாணவ சமுதாயத்தைப் பாதிக்கும். அதனால் அந்தத் தேர்வுகளைத் தவிர்த்து, பள்ளிக் கல்வித் திறனை மட்டும் அடிப்படையாகக் கொண்டதாக கல்லூரி மாணவர் சேர்க்கை அமைய வேண்டும் என்பதில் மாற்றமுடியாத உறுதிப்பாடு கொண்டதாக இந்த அரசு இருக்கிறது. அதாவது, 12ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையிலேயே கல்லூரி மாணவர் சேர்க்கை அமைய வேண்டும் என்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது.

இந்த அடிப்படையில்தான், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் மாநில அளவில் நடத்தப்பட்டு வந்த நுழைவுத் தேர்வுகளை, 2007ஆம் ஆண்டு அகற்றி, அதற்காகத் தனிச் சட்டம் இயற்றினார்கள். அச்சட்டத்திற்கு மாண்புமிகு குடியரசுத் தலைவருடைய ஒப்புதலையும் பெற்று, கல்லூரி மாணவர்கள் சேர்க்கையில்,

ஏழை, எளிய கிராமப்புற மாணவர்களின் நலன் காக்கப்படுவதை உறுதிசெய்தார். இதன் அடிப்படையில்தான், பல ஆண்டுகளாக தமிழ்நாட்டிலே மருத்துவ மாணவர்கள் சேர்க்கையும் நடைபெற்று, திறன்மிக்க நம் மாணவர்களுக்கு மருத்துவக் கல்வி பயிலக்கூடிய வாய்ப்பும் கிடைக்கப்பெற்றது. இத்தகைய மருத்துவர்கள் மூலமாக இன்று மருத்துவத்துறையிலே நம் நாட்டிற்கே முன்னோடியாக நாம் விளங்கிக்கொண்டிருக்கிறோம்.

ஆனால், கடந்த காலத்தில் ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட நீட் தேர்வுக்கான திருத்தச் சட்டம், அதன்பிறகு கொண்டுவரப்பட்ட தேசிய மருத்துவ ஆணையச் சட்டம் ஆகியன மருத்துவ மாணவர் சேர்க்கையில் நீட் தேர்வை முன்னிறுத்தி, நமது மாணவர்களை வெகுவாகப் பாதித்துள்ளன. மாநில அரசு நிதியிலிருந்து, மாநில அரசுகளால் தொடங்கப்படக்கூடிய மருத்துவக் கல்லூரிகளில் எவ்வாறு அம்மாநில மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என்பது குறித்து முடிவு செய்யக்கூடிய உரிமையை மாநில அரசுகளிடமிருந்து பறித்து விட்டது ஒன்றிய அரசு. இதுமட்டுமின்றி, நுழைவுத் தேர்வுக்கான சிறப்புப் பயிற்சிகளைப் பெறுவதற்கு வசதி வாய்ப்புகள் உள்ள மாணவர்களுக்கு மட்டுமே சாதகமாகவும், மருத்துவ மாணவர் சேர்க்கையில் 12 ஆண்டுகள் படிக்கக்கூடிய பள்ளிக் கல்வியால் எவ்விதப் பயனும் இல்லை என்ற நிலையை உருவாக்கி, பள்ளிக் கல்வி அமைப்பையே அர்த்தமற்றதாக ஆக்குவதாகவும் இந்த ‘நீட்’ தேர்வுமுறை உள்ளது.

இவ்வாறு மாணவர்களின் கல்விக் கனவைச் சிதைப்பதாக மட்டுமல்ல; இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவத்தை சீர்குலைப்பதாகவும் இந்தச் செயல்கள் அமைந்துவிட்டன. இதனை நாம் வேடிக்கை பார்க்க முடியாது. மாணவர்களது எதிர்காலம் பாழாகி வருவதை கண்டும் காணாமல் நாம் இருந்து

விடமுடியாது. இதனைச் சரிசெய்து, மாநில உரிமைகளையும் நமது மாணவர்களுடைய நலனையும் மீண்டும் நிலைநிறுத்தும் நோக்கத்தோடு இந்த அவையால் ஒருமனதாக 19.09.2021 அன்று ஒரு சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தச் சட்டமுன்வடிவு இன்னமும் மாண்புமிகு ஆளுநர் அவர்களால், மாண்புமிகு குடியரசுத் தலைவருடைய ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படாமல் இருக்கிறது. இதுகுறித்து, மாண்புமிகு ஆளுநர் அவர்களை நானே நேரில் சென்று சந்தித்து வலியுறுத்தியிருக்கிறேன்.

இதனைத் தொடர்ந்து, கடந்த 28.12.2021 அன்று நாடாளுமன்ற திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. டி.ஆர். பாலு அவர்கள் தலைமையிலே, தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு குடியரசுத் தலைவர் அலுவலகத்தில், நீட் தேர்வால் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் குறித்தும், இந்தச் சட்டமுன்வடிவுக்கு ஒப்புதல் பெறப்படுவதில் ஏற்படக்கூடிய காலதாமதம் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கக்கூடிய மனு ஒன்றை அளித்திருக்கிறார்கள். பின்னர், அம்மனு மேல்நடவடிக்கைக்காக ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு உள்ளதாக மாண்புமிகு குடியரசுத் தலைவருடைய செயலகத்தின் சிறப்புப் பணி அலுவலர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே, இதுகுறித்து மேலும் வலியுறுத்திட, அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்களை நேரிலே சந்திக்க நேரம் கேட்டனர். ஆனால், இதுவரையிலே, அவர்களைச் சந்திக்க மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள் மறுத்து வருகிறார். மக்கள் பிரதிநிதிகளை மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள் சந்திக்க மறுப்பது, மக்களாட்சியினுடைய மாண்புக்கு எதிரானதாகும். எட்டரை கோடி

தமிழக மக்களின் எதிர்பார்ப்புகளையும், நமது மாணவர்களுடைய கனவுகளையும் நிறைவு செய்வதற்கான இந்த அரசின் முயற்சிகள் வெற்றிப் பெற வேண்டும். அதற்காகவே இவ்வாறு பல வகைகளில் இந்த அரசு அயராது முயற்சி செய்து வருகின்றது. பல நாட்கள் கடந்தும், உள்துறை அமைச்சர் அவர்கள் நேரிலே சந்திக்க நேரம் ஒதுக்காத நிலையிலே, அவரிடம் கொடுக்கப்பட வேண்டிய மனு, அவரது அலுவலகத்திலே நேற்றையதினம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சமூக நீதியை நிலைநாட்டுவதில் நமது நாட்டிற்கே முன்னோடியாக விளங்கும் தமிழ்நாட்டின் வரலாற்றையும், திராவிட இயக்கங்களின் வரலாற்றையும் புரட்டிப் பார்க்கும்போது, நமது வெற்றிகள் அனைத்தும் நீண்ட நெடிய அரசியல், சட்டம் மற்றும் மக்கள் போராட்டங்களுக்குப் பின்னரே கிட்டியிருக்கின்றன.

நாமும், நமது மாநிலமும் இன்று அடைந்துள்ள இந்த வளர்ச்சியை இப்போராட்டங்களின் மூலமாகத்தான் நாம் பெற்றுள்ளோம் என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, 'நீட்' போன்ற நுழைவுத் தேர்வுகளுக்கு எதிரான நமது இந்தப் போராட்டத்தையும், நமது சமூகநீதி இயக்கத்தின் அடுத்த கட்டப் போராட்டம் எனக் கருதி, நாம் நமது கொள்கையிலிருந்து எள்முனையளவு கூட பின்வாங்காமல் முன்னெடுத்துச் செல்வோம்.

மேற்கூறிய இந்தச் சூழ்நிலையைக் கருத்திலே கொண்டு, அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து நாம் ஒருமித்த நிலைபாட்டினை எட்டுவதற்கு, நமது சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தை நாளை மறுநாள், அதாவது, **08.01.2022** அன்று கூட்டுவது என்று முடிவு செய்திருக்கிறோம். அந்தக் கூட்டத்தில் நீங்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டுமென்று சட்டமன்றக் கட்சிகளுடைய

தலைவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்; உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன். நீங்களும் சேர்த்து நிறைவேற்றிய தீர்மானம்தான் அது. அதனால், அதன் முக்கியத்துவத்தைக் கருதி, அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்களும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும். அந்தக் கூட்டத்தில் எடுக்கப்படக்கூடிய முடிவுகளின் அடிப்படையில் நீட் தேர்வுக்கு எதிரான, சமூக நீதிக்கான நமது போராட்டம் தொடரும் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்து அமைகிறேன்.

❖ ❖ ❖

## வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி ரூ.12 இலட்சமாக உயர்வு

### 24.02.2022

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோர்களுக்கு வழக்கின் தன்மைக்கேற்றவாறு, 85,000 ரூபாயிலிருந்து 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வரை தற்சமயம் வழங்கப்பட்டு வருகிறது. இனி இத்தொகை பாதிக்கப்பட்டவர்களுக்குக் குறைந்தபட்சமாக ஒரு இலட்சம் ரூபாயும், அதிகபட்சமாக 12 இலட்சம் ரூபாயாகவும் மாநில அரசு நிதி மூலம் உயர்த்தி வழங்கப்படும்”

❖ ❖ ❖

## மக்கள் நலனை மட்டுமே முன்னிறுத்தி கடந்த ஆட்சியில் நிறைவேற்றப்படாத அறிவிப்புகளையும் நிறைவேற்றுவோம்

23.03.2022

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு சட்டமன்றத்திலும், பொதுவெளியிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் வாக்குறுதிகள் குறித்தும், அவற்றை இந்த அரசு நிறைவேற்றி வருவது குறித்தும் சில கருத்துக்களும், விமர்சனங்களும் எதிர்க்கட்சியினரால் முன்வைக்கப்பட்டு வருவதால், அவை குறித்து மாமன்ற உறுப்பினர்களுக்கும், பொதுமக்களுக்கும் இப்பொருள் குறித்த உண்மை நிலையை விளக்கும் வகையில், உங்கள் அனுமதியுடன் இந்த அவையில் ஒரு வெள்ளை அறிக்கைக்குச் சமமான, ஒரு அறிக்கையை சட்டமன்றப் பேரவை விதி 110இன்கீழ் இப்பொழுது நான் வெளியிட விரும்புகிறேன்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், அறிவுச்சுடர் பேறறிஞர் அண்ணா, நல்லாட்சி தந்த நாயகராகவும், நற்றமிழ் வளர்த்த புரவலராகவும், சொல்லாலும், செயலாலும், எழுத்தாலும் தமிழ் வளர்த்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் முனைப்போடு செயல்பட்டு வரக்கூடிய இந்த அரசு, ஆட்சிக்கு வந்து பத்து மாதங்கள் நிறைவுபெற்றுள்ளது.

தி.மு.க. தேர்தல் அறிக்கை தமிழக மக்களின் எதிர்பார்ப்புகளை குறிப்பிட்ட காலவரையறைக்குள் நிறைவேற்றுவதற்கும், மாநிலப் பொருளாதாரத்தை மீட்பதற்கும், துறைவாரியான முன்னேற்றத்திற்கும், ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்ட அறிக்கையாகும். இந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள 505 வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படும். அதில் சொல்லப்படாத நலத்திட்டங்களும் செயல்படுத்தப்படும் என்ற நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புடன் மக்கள் அளித்த மாபெரும் வெற்றியைப்பெற்று அமைந்துள்ள இந்த அரசு, அதனை நிறைவேற்ற உறுதியுடன் செயல்பட்டு வருகிறது.

தமிழக மக்களின் நம்பிக்கையை உறுதி செய்யும் விதமாக, கடந்த மே 7ஆம் தேதியன்று பதவியேற்ற ஒரு சில மணித்துளிகளிலேயே தமிழகத்திலுள்ள கோடிக்கணக்கான மக்கள் பயன்பெறும் வகையில் ஐந்து முக்கிய கோப்புகளில் கையெழுத்திட்டு அரசாணைகளை நான் வெளியிட்டேன்.

- 2.09 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் ரூ.4,000 கொரோனா நிவாரண நிதி.
- ஆவின் பால் லிட்டருக்கு ரூ.3 குறைப்பு.
- மகளிருக்கு அரசு நகரப் பேருந்துகளில் இலவசப் பயணம்.
- மக்களின் மனுக்களின்மீது தீர்வு காண "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" துறை.
- தனியார் மருத்துவமனைகளில் கொரோனா சிகிச்சைக்கான அனைத்து செலவினங்களையும் முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தில் அரசே ஏற்பு.

இந்த ஐந்தில், முதல் நான்குமே திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றிருந்தவை. கடந்த பத்து

மாதங்களுக்குள் நிறைவேற்றப்பட்ட முக்கியமான சில வாக்குறுதிகளை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும், விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கவும், முதன்முறையாக வேளாண்மைக்கென்றுத் தனியாக இரண்டு நிதிநிலை அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
- கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் சுமார் 55 ஆயிரம் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை 2,756 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டது.
- கூட்டுறவு அமைப்புகள் மூலம் வழங்கப்பட்ட 5 சவரனுக்குட்பட்ட ரூபாய் 5 ஆயிரத்து 250 கோடி நகைக்கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.
- பெட்ரோல் விலை லிட்டருக்கு 3 ரூபாய் குறைப்பு.
- ஊரகப் பகுதிகளில் 1,200 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை செயல்படுத்துவது.
- ‘நமக்கு நாமே’ திட்டம், உள்ளூர் சமூகங்களுடன் இணைந்து 100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுவது.
- “இயற்கை வேளாண்மை வளர்ச்சித் திட்டம்” என்ற உன்னதத் திட்டத்தை செயல்படுத்துவது.
- அண்ணா நூற்றாண்டு நூலகம் புதுப்பொலிவு பெறக்கூடிய வகையில் புனரமைத்தல் மற்றும் மதுரையில் கலைஞர் நூலகம் அமைத்தல்.
- இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டம், மீத்தேன்/ நியூட்ரினோ மற்றும் கூடங்குளம் அணுமின் நிலையம்

மற்றும் எட்டுவழிச்சாலைத் திட்டங்களுக்கு எதிராகப் போராடிய விவசாயிகள், பொதுமக்கள்மீது போடப்பட்ட 5,570 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன.

- மூன்று வேளாண் சட்டங்கள் மற்றும் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, மேற்படி மூன்று வேளாண் சட்டங்களும் ஒன்றிய அரசால் திரும்பப் பெறப்பட்டுள்ளன.
- NEET தேர்விலிருந்து விலக்கு பெறுவதற்கான சட்ட முன்வடிவை சட்டப்பேரவையில் நிறைவேற்றியது.
- கொரோனா சிகிச்சைப் பணியில் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த மருத்துவர்களின் குடும்பங்களுக்கு தலா 25 இலட்சம் ரூபாய் கொரோனா இழப்பீட்டுத் தொகை.
- அதேபோல், கொரோனா நோய்த் தொற்றால் காவல்துறையில் உயிரிழந்த காவல்துறை அலுவலர்கள் மற்றும் காவலர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு தலா 25 இலட்சம் ரூபாய் வீதம் நிவாரணத் தொகை.
- குடும்ப அட்டை கோரி விண்ணப்பிக்கக்கூடிய தகுதிவாய்ந்த அனைத்து நபர்களுக்கும் பதினைந்து நாட்களுக்குள் ‘ஸ்மார்ட் கார்டு’ வழங்குதல்.
- தமிழக அரசிற்கு ஆலோசனைகளை வழங்கிட ‘முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு’ அமைக்கப்பட்டுள்ளது.
- பணியிலிருக்கும்போது உயிரிழக்கும் அரசுப் பணியாளரின் குடும்பத்தினருக்கு, குடும்பப் பாதுகாப்பு நிதியிலிருந்து

வழங்கப்படும் உதவித்தொகை 3 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நடத்தப்படும் அரசுப் பணிகளுக்கான தேர்வுகளில் தமிழ் மொழி தேர்ச்சி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- ஸ்டெர்லைட் சம்பவம் குறித்து தவறாக பதிவு செய்யப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை மற்றும் கல்வித் தகுதியின் அடிப்படையில் அரசுப் பணி வழங்கப்பட்டுள்ளது.
- மகளிர் அரசு ஊழியர்களுக்கான மகப்பேறு கால விடுப்பு 9 மாதங்களிலிருந்து 12 மாதங்களாக உயர்த்தப்பட்டது.

இந்த அரசினால் வெளியிடப்பட்டுள்ள பல்வேறு அறிவிப்புகளில், தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள வாக்குறுதிகளோடு, இடம் பெறாத அறிவிப்புகளும் அடங்கும். அவை குறித்து நடவடிக்கைகள் தொடர்புடையத் துறைகளால் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில்,

- இந்த மாமன்றத்தில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில் 52 தேர்தல் வாக்குறுதிகளும்;
- மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரை குறித்த என்னுடைய பதிலுரையில் 1 வாக்குறுதியும்;
- மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட 2021–2022ஆம் ஆண்டு மற்றும் 2022–2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவு அறிக்கையில் 33 வாக்குறுதிகளும்;

- மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் வேளாண்மைக்காக தாக்கல் செய்யப்பட்ட 2021–2022ஆம் ஆண்டு மற்றும் 2022–2023ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் 21 வாக்குறுதிகளும்;
- விதி 110இன்கீழ் வெளியிடப்பட்ட அறிக்கையில் 3 வாக்குறுதிகளும்;
- அவரவர் துறை சார்பாக அமைச்சர் பெருமக்கள் வெளியிட்ட அறிவிப்புகளில் 78 வாக்குறுதிகளும்;
- இதர அறிவிப்புகளில் 10 வாக்குறுதிகளும், நேரடியாக நிறைவேற்றப்பட்ட 10 வாக்குறுதிகளும் என இதுவரை மொத்தம் 208 தேர்தல் வாக்குறுதிகள் அரசின் அறிவிப்புகளாக இடம்பெற்றுள்ளன. இவை அனைத்திற்கும் உரிய அரசாணைகள் வெளியிடப்பட்டு, அரசாணைகள் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் அனைத்தும் முறையாகவும், முழுமையாகவும் செயல்படுத்தப்படுவதை இந்த அரசு முனைப்புடன் கண்காணித்து வருகிறது.

இந்த அரசு பதவியேற்று, இதுவரை நடைபெற்ற சட்டசபைக் கூட்டங்கள், அரசு விழாக்கள் போன்றவற்றில் குறிப்பிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் இடம்பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்ட வாக்குறுதிகளைத் தவிர, தேர்தல் அறிக்கையில் சொல்லாத பல்வேறு கொள்கை அளவிலான அறிவிப்புகளும் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில், தமிழக மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றம் மற்றும் பலவகையான நலத்திட்ட உதவிகள் என சொல்லாதவற்றையும் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. உதாரணமாக,

- பள்ளிக்கு வந்து கல்வி கற்றுவந்த மாணவர்களை வீட்டுக்குள் முடக்கிவைத்த கொரோனா பெருந்தொற்று

குழந்தைகளின் கல்வியை மட்டுமின்றி அவர்களின் மனதையும் பாதித்துவிட்டது. இந்தப் பாதிப்பை சரி செய்யக்கூடிய விதமாக தனித்துவம் கொண்ட 'இல்லம் தேடிக் கல்வித் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டு வகுப்பறையைப் பள்ளிகளுக்கு வெளியேயும் நீட்டிக்கச் செய்யும் மகத்தான முயற்சியை இந்த அரசு மேற்கொண்டது.

- மாநிலத்தில் தொற்றா நோய்களின் சுமையை எதிர்கொள்ளும் விதமாக இல்லங்களுக்கேச் சென்று, அனைவருக்கும்நலவாழ்வுஎன்கிறஉயரியநோக்கத்தினைச் செயல்படுத்தும் வகையில், "மக்களைத் தேடி மருத்துவம்" என்ற புதிய திட்டத்தை செயல்படுத்துவது.
- தமிழ்நாட்டில் சாலைப் பாதுகாப்பையும், சாலை விபத்தில் ஒருவர் கூட உயிரிழக்கக்கூடாது என்பதையும் உறுதி செய்யக்கூடிய உயரிய நோக்கத்தோடு "இன்னுயிர் காப்போம்–நம்மைக் காக்கும் 48" என்ற உயிர் காக்கும் திட்டத்தை செயல்படுத்துவது.
- தமிழ்நாட்டில் உள்ள சிற்றூர்கள் அனைத்தும் அவற்றின் முழு ஆற்றலுக்கேற்ப வளர்ச்சியடைந்து செழிக்க வேண்டும் என்கின்ற நோக்கில் 'கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தை' அறிமுகப்படுத்தியது.
- மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் தனித்துவத் திறன்களை மேம்படுத்தி அவர்களுக்கு ஒரு சிறப்பான எதிர்காலத்தை ஏற்படுத்தித் தரக்கூடிய எனது கனவு திட்டமான 'நான் முதல்வன்' என்ற உன்னதமானத் திட்டத்தை செயல்படுத்துவது.

- அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு அனைத்து தொழிற் கல்வி இடஒதுக்கீட்டுப் பிரிவுகளில், ஏழரை விழுக்காடு இடங்கள் முன்னுரிமையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்தல்.
- திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை.
- கொரோனாவால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு 5 இலட்சம் ரூபாய் வைப்பு நிதி, கல்வி மற்றும் விடுதிக் கட்டணங்கள் அரசே ஏற்பு.
- கொரோனாவால் தந்தை அல்லது தாயை இழந்த குழந்தைகளோடு இருக்கும் தந்தை அல்லது தாய்க்கு 3 இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகை.
- தமிழ்நாட்டில் உள்ள முகாம் வாழ் இலங்கைத் தமிழர் நலனைப் பேணிட, வீடு மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு, 317 கோடியே 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ‘தமிழ்நாடு ஆதிதிராவிடர் – பழங்குடியினர் நல ஆணையம்’ என்கிற புதிய அமைப்பு ஒன்றைத் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் வகையில் உருவாக்கச் சட்டம் இயற்றப்பட்டு, ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.
- பத்திரிகையாளர் மற்றும் ஊடகத் துறையினர் “முன்களப் பணியாளர்” களாக அறிவிப்பு.
- அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகை மற்றும் ஊடகத் துறையினருக்கான சிறப்பு ஊக்கத்தொகை 5,000 ரூபாய் ஆக உயர்வு.

➢ கொரோனா தொற்றால் மரணமடைந்த அங்கீகரிக்கப்பட்ட ஊடகத் துறையினர்களுக்கான இழப்பீட்டுத் தொகை 10 இலட்சம் ரூபாயாக உயர்வு.

சட்டமன்றத் தேர்தலின்போது மக்களுக்கு அளித்த 505 வாக்குறுதிகளில், 208 வாக்குறுதிகளை நிறைவேற்றப் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

2011–2012 முதல் 2020–2021 வரை கடந்த பத்தாண்டுகளில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் கடந்த ஆட்சியாளர்களால், வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் 537 அறிவிப்புகள் நிலுவையில் உள்ளன.

செயல்படுத்தப்படாமல் நிலுவையில் உள்ள 537 அறிவிப்புகளில் 5,470 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டிலான 26 அறிவிப்புகள், அவற்றை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் எவற்றையும் ஆராயாமல், ஆய்வு மேற்கொள்ளாமல், 110 விதியின்கீழ் அறிவிக்கப்பட்டு, செயல்படுத்த இயலாதவை என கைவிடப்பட்டுள்ளது. இதில் பெரும்பாலான, அதாவது 19 அறிவிப்புகள் 2011ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை உள்ள ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்டவை ஆகும்.

மேற்கூறிய 537 அறிவிப்புகளில், 9,741 கோடி ரூபாய் திட்ட மதிப்பிலான 20 அறிவிப்புகளுக்கு, கடந்த ஆட்சிக்காலத்தில் அதற்குரிய அரசாணைகள் எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

537 அறிவிப்புகளில் 491 அறிவிப்புகளுக்கு மட்டுமே அரசாணை மற்றும் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில், 76,619 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 143 அறிவிப்புகளுக்கு அதற்குரிய அரசாணை மற்றும் அனுமதி வழங்கப்பட்டு, நிதி எதுவும் விடுவிக்கப்படாமலும், பணிகள் துவங்கப்படாமலும் உள்ளன. அவற்றில் சிலவற்றை

இந்த மாமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

- 2,160 கோடி ரூபாய்ச் செலவில் 311 ஏக்கரில் சென்னை திருமழிசையில் துணைக்கோள் நகரம்.
- மதுரை விமான நிலையத்துக்கு அருகில் 586.86 ஏக்கரில் ஒருங்கிணைந்த துணைகோள் நகரம்.
- ரேஷன் கார்டு வைத்திருப்பவர்களுக்கு இலவச செல்போன் வழங்கப்படும், பொது இடங்களில் இலவச வை–பை, ரேஷன் கார்டு வைத்திருப்பவர்கள் கோ–ஆப்டெக்சில் பொங்கல் பண்டிகைக்கு துணி எடுக்க ரூ.500 மதிப்புள்ள கூப்பன் வழங்கப்படும்.
- அம்பேத்கர் அறக்கட்டளை நிறுவப்படும், அம்மா வங்கி அட்டை அனைவருக்கும் வழங்கப்படும் என்று 2016ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் அ.தி.மு.க. கொடுத்த பல்வேறு வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.
- ரூ.25க்கு ஒரு லிட்டர் பால்.
- மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் பேணும் வகையில் வைட்டமின் டி மற்றும் இரும்புச் சத்துகள் செறிவூட்டப்பட்ட ஆவின் பால் 1 லிட்டர் ரூ.25க்கு என குறைந்த விலையில் வழங்கப்படும் என்ற வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை.
- இதேபோல, மீனம்பாக்கம்–செங்கல்பட்டு இடையே உயர்நிலை நெடுஞ்சாலை மேம்பாலம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.
- உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2 வருடத்துக்கு ஒரு முறை நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், கடந்த

5 ஆண்டுகளில் ஒரு முறை மட்டுமே உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடந்திருக்கிறது.

கடந்த ஆட்சியாளர்களால் 2011 ஆம் ஆண்டு அவர்களது தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் நிறைவேறாமல் இருப்பவைகளை தங்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

- சென்னை முதல் கன்னியாகுமரி வரை கடலோரச் சாலைத் திட்டம்.
- தென் தமிழகத்தில் ‘ஏரோ பார்க்’.
- ஆன்லைன் டிரேடிங் தடுக்கப்படும்.
- மொபைல் மின்னணு ஆளுமைத் திட்டம்.
- தடையில்லா மின்சாரத்துக்கு சிறப்புத் திட்டம்.
- இலவச டிடிஹெச் சேவைகள் விரைவாக வழங்கப்படும்.
- வீடுகளில் திருட்டு, கொள்ளைகளைத் தடுக்க இளைஞர் சிறப்புப் படைகள்.
- பள்ளிக் குழந்தைகளைப் பாதுகாக்க மாணவர் சிறப்புப் படை.
- மீனவர் பாதுகாப்புப் படை.
- சிங்கப்பூரில் உள்ளதுபோல சென்னை, மதுரை, திருச்சி, கோவையில் மோனோ இரயில் திட்டம் செயல்படுத்தப்படும்.

இதை ஒப்பிடும்போது, 10 ஆண்டுக் காலம் ஆட்சியில் இருந்த அ.இ.அ.தி.மு.க. அரசு தனது 2011ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் 186 வாக்குறுதிகளும், 2016ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் 321 வாக்குறுதிகளும் என மொத்தம் 507 வாக்குறுதிகளை அளித்தது.

அ.தி.மு.க. ஆட்சி 10 ஆண்டுக் காலம் ஆட்சியில் இருந்தும், இந்த 507 வாக்குறுதிகளில், 269 வாக்குறுதிகளுக்கு மட்டுமே அரசாணை வெளியிட்டு நிறைவேற்றியிருக்கிறார்கள்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, இந்த அரசின் முதல் ஆண்டிலேயே 505 வாக்குறுதிகளில், 208 வாக்குறுதிகளுக்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, அவற்றில் 171 வாக்குறுதிகளுக்கு அரசாணைகளும் வழங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

கடந்த ஆட்சியாளர்களால் சட்டப்பேரவை விதி 110இன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் அனைத்தும் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டப் பிறகு அறிவிக்கப்பட்டதால், கிட்டத்தட்ட அனைத்து நிதி ஒதுக்கீடு தேவைப்படும் அறிவிப்புகளுக்கும், தொடர்புடைய துறைகளின் மானியக் கோரிக்கைகளில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த அறிவிப்புகள் அனைத்துமே இன்னமும் வெற்று அறிவிப்புகளாக காகிதத்திலேயே உள்ளன. மேலும், அவை விளம்பர நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டவை என்பது தான் நிதர்சனம்.

நான் தொடர்ந்து ஒன்றை வலியுறுத்திச் சொல்லி வருகிறேன். இந்த அவையிலும் பலமுறை நான் பதிவு செய்திருக்கிறேன். இது எனது அரசு அல்ல. நமது அரசு. அந்தக் கருத்தினைப் பின்பற்றி இந்த அவையில் நமது அரசின் நிலைப்பாட்டை விளக்கிட நான் விரும்புகிறேன்.

தேர்தல் வாக்குறுதிகளைத் தொடர்ந்து நிறைவேற்றி வரும் வேளையில் “பத்து மாதக் குழந்தையிடம் பத்தாம் வகுப்பு

மதிப்பெண் என்ன” என்று கேட்பதுபோல் இருக்கிறது. எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, “இந்தக் குழந்தை பத்தாம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெறுவது மட்டுமல்ல பட்டப் படிப்பிலும் பதக்கம் வெல்லும்”.

நீங்கள் சுட்டிக்காட்டும் ஒவ்வொரு முறையும் எங்கள்மீது அதிக நம்பிக்கை வைத்து நீங்கள் வைக்கக்கூடிய நினைவூட்டல் என்றே நாங்கள் எடுத்துக்கொள்கிறோம்.

மேலும், ஒன்றை இந்த அவையில் மீண்டும் பதிவு செய்ய விரும்புகிறேன். நமது அரசு சொன்னதை மட்டுமல்ல, சொன்னதற்கு மேலும் செய்து காட்டும் அரசு என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

இறுதியாக ஒரு கருத்தை இந்த அவையில் பதிவிட விரும்புகிறேன், எதிர்க்கட்சிகள் கடந்த 10 ஆண்டு காலத்தில் நிறைவேற்றாமல் போன அறிவிப்புகளில் மக்களுக்கு மிகவும் பயன்படும் தேவைகள் ஏதேனும் கண்டறியப்பட்டால், “மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு” என்ற பேரறிஞர் அண்ணாவின் வாக்கிற்கேற்ப, மக்கள் நலனை மட்டுமே முன்னிறுத்தி அவற்றையும் நாங்கள் நிறைவேற்றுவோம் என்ற உறுதியை அளித்து நன்றி கூறி அமைகிறேன்.

❖ ❖ ❖

# ரூ.68,375 கோடி முதலீட்டில் 2,05,802 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் 130 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

## 06.04.2022

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2021ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் ‘‘தொழில் துறையை மீட்டெடுப்போம்’’, ‘‘தொழில் வளர்ச்சியை பரவலாக்க கொள்கைகள் வகுக்கப்படும்’’, ‘‘தொழில் தொடங்க முன்வருவோரை ஊக்குவிக்கக்கூடிய வகையில் ஒற்றைச் சாளர முறை மூலமாகத் தொழில் வளத்தைப் பெருக்குவோம்’’ என்று தேர்தல் வாக்குறுதிகளைக் கொடுத்தோம். அந்த வாக்குறுதிகளை இந்த அரசு படிப்படியாக நிறைவேற்றி வருகிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, 68,375 கோடி ரூபாய் முதலீடும், 2,05,802 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் உருவாக்கக்கூடிய வகையில் 130 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

20.07.2021 அன்று சென்னையில் ‘‘முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு’’ என்ற நிகழ்ச்சி வாயிலாக 17,141 கோடி ரூபாய் முதலீடும், 55,054 பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும் வகையில் 35 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன.

22.09.2021 அன்று சென்னையில் ‘‘ஏற்றுமதியில் ஏற்றம்– முன்னணியில் தமிழ்நாடு’’ என்ற நிகழ்ச்சி வாயிலாக 1,880 கோடி

ரூபாய் முதலீடும், **39,150** பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் **14** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன.

**23.11.2021** அன்று கோயம்புத்தூரில் ‘‘முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு’’ என்ற நிகழ்ச்சி வாயிலாக **35,208** கோடி ரூபாய் முதலீடும், **76,795** பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும் வகையில் **59** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன.

**07.03.2022** அன்று தூத்துக்குடியில் ‘‘சர்வதேச அறைகலன் பூங்கா அடிக்கல் நாட்டு விழாவின்போது’’ **4,488** கோடி ரூபாய் முதலீடும், **15,103** பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும் வகையில் **14** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன.

இதுதவிர, **11.09.2021** மற்றும் **15.03.2022** அன்று நடைபெற்ற நிகழ்வுகளில் **3,558** கோடி ரூபாய் முதலீடும், **4,600** பேர்களுக்கு வேலைவாய்ப்பும் உருவாக்கும் வகையில் DP World மற்றும் சாம்சங் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**26.03.2022** மற்றும் **28.03.2022** ஆகிய நாட்களில் துபாய் மற்றும் அபுதாபி நாடுகளில் நடைபெற்ற நிகழ்வுகளில் **6,100** கோடி ரூபாய் முதலீடும், **15,100** பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும் வகையில் **14** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

‘‘சீரான மற்றும் பரவலான தொழில் வளர்ச்சி’’ எங்கள் தேர்தல் வாக்குறுதி. அதை நிறைவேற்றும் வகையில் இன்றைக்கு சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கிருஷ்ணகிரி, தருமபுரி, மதுரை, கரூர், நாமக்கல், திண்டுக்கல், புதுக்கோட்டை, தேனி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, விருதுநகர், கன்னியாகுமரி ஆகிய **25** மாவட்டங்களில் இந்த முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தொழில் வளர்ச்சிக்கு இவ்வளவு முயற்சிகளை எடுத்துள்ள இந்த அரசின் சார்பில் ஐக்கிய அரபு நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டேன். துபாயில் நடைபெற்ற உலக கண்காட்சி, 5 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் சர்வதேச நிகழ்வுகளில் ஒன்று. 192 நாடுகள் பங்கேற்ற அக்கண்காட்சியில் மார்ச் 25 முதல் 31ஆம் தேதி வரை "தமிழ்நாடு வாரமாக" கடைபிடிக்கப்பட்டது. கண்காட்சியின் இறுதி வாரங்களில்தான் பெரிய முதலீட்டாளர்கள் கலந்துகொள்வார்கள். அதனால் நான் துபாய் சென்று, மார்ச் 25ஆம் தேதி "தமிழ்நாடு அரங்கினை", அந்த அரங்கில் உள்ள கண்காட்சியைத் திறந்துவைத்தேன்.

துபாயிலும், அபுதாபியில் வாழும் புலம்பெயர்ந்த தமிழ்ச் சொந்தங்களைச் சந்தித்து, சொந்த மண்ணான தமிழ்நாட்டில் முதலீடு செய்ய அழைப்பு விடுத்தேன். ஐக்கிய அரபு நாடுகளின் பொருளாதாரத்துறை அமைச்சர், வெளிநாட்டு வர்த்தகத்துறை அமைச்சர், வர்த்தக சங்க நிருவாகிகள் ஆகியோரையும் சந்தித்து, தமிழ்நாட்டிற்கு முதலீடுகள் பெறுவது குறித்து ஆலோசனை நடத்தினேன்.

முபாதலா முதலீட்டு நிறுவனம் மற்றும் ABQ போன்ற நிறுவனங்கள், ஐக்கிய அரபு நாடுகளில் உள்ள பல்வேறு முதலீட்டாளர்களை நிருவகித்திடும் நிறுவனங்கள், இவர்களையும் சந்தித்து வளர்ந்து வரும் துறைகளான எரிசக்தி, சரக்குப் போக்குவரத்துத் திட்டங்கள், உட்கட்டமைப்புத் திட்டங்கள், தரவு மையங்கள், மின்னணுவியல் போன்ற திட்டங்களில் பெருமளவில் முதலீடுகளைப் பெற்றிட உரையாடினேன். இதைத் தொடர்ந்து, இவ்விரு நிறுவனங்களின் முதலீடுகளைப் பெற ஒரு பணிக்குழு (Working Group) விரைவில் அமைக்கப்படவுள்ளது.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல், இந்த துபாய் பயணத்தின் வாயிலாக 6,100 கோடி ரூபாய் முதலீடும், 15,100 பேருக்கு

வேலைவாய்ப்பும் ஏற்படுத்தக்கூடிய வகையில் **6** நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

அபுதாபியைத் தலைமையிடமாகக்கொண்ட மிகப்பெரிய எஃகுக் குழாய் உற்பத்தியாளர்களில் ஒன்று, சென்னையைச் சுற்றியுள்ள மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் உற்பத்தி நிறுவனங்கள் அடங்கியிருக்கக்கூடிய பகுதியில் **1,000** கோடி ரூபாய் முதலீடும், **2,000** பேருக்கு வேலைவாய்ப்பும் ஏற்படுத்தக்கூடிய வகையில் ஒரு உற்பத்தித் திட்டத்தினை நிறுவ தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

லூலூ பன்னாட்டுக் குழுமம் இந்தியா மற்றும் மத்திய கிழக்கு/ வட ஆப்பிரிக்கா மண்டலங்களில் பல்வேறு திட்டங்களை நிறுவியுள்ளது. "இரு பெரும் வணிக வளாகங்கள்", "உணவு பதப்படுத்தக்கூடிய திட்டம்" ஆகியவற்றை தமிழ்நாட்டில் நிறுவ, **3,500** கோடி ரூபாய் மதிப்பீட்டில் **5,000** பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை இந்தக் குழுமத்துடன் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது.

இந்தியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள ஆஸ்டர் DM மருத்துவக் குழுமத்துடன் சென்னையில் **500** படுக்கைகள் கொண்ட பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையை உருவாக்கும் வகையில், **500** கோடி ரூபாய் முதலீடும், **3,500** பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு நாடுகளில் உள்ள மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்றான ஷெராப் குழும நிறுவனத்துடன் **500** கோடி ரூபாய் முதலீடு மற்றும் **1,000** பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் ஒரு "சரக்குப் பூங்கா" அமைத்திட புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு நாடுகளில் உள்ள மிகப்பெரிய ஜவுளி மற்றும் ஆடைகள் உற்பத்தியாளர்களில் ஒன்றான ஒயிட் ஹவுஸ் நிறுவனத்துடன், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள திண்டிவனம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள வாலாஜாபாத் ஆகிய பகுதிகளில் 500 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 3,000 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் வகையில் "ஆடை மற்றும் தையல் திட்டங்களை" அமைத்திட புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு நாட்டைச் சேர்ந்த டிரான்ஸ்வேல்டு குழுமத்துடன் 100 கோடி ரூபாய் மதிப்பில், 600 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் தமிழ்நாட்டில் உணவு பதப்படுத்தக்கூடியத் திட்டம் நிறுவிட புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தங்கள் எல்லாம் நான் துபாய் நாட்டிற்கு மேற்கொண்ட அரசு முறைப் பயணத்தின் விளைவாக கிடைக்கப் போகும் முதலீடுகள். ஆகவே, துபாய் நாட்டிற்குச் சென்ற அரசு முறைப் பயணம், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கவும், நம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும்தான். அந்த இலக்கை எட்டும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டிருக்கிறேன் என்பதை பெருமையுடன் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

10 மாதங்களிலேயே தொழில் துறையில் இந்த அரசு செய்திருக்கக்கூடிய சாதனைகளுக்கு நம்முடைய அரசு பொறுப்பேற்றதும் எடுத்த நடவடிக்கைகளேக் காரணம். 20.07.2021 அன்று தொழில்களை ஈர்க்க, 24 துறைகளைச் சார்ந்த 100 சேவைகளை மின்மய வடிவில் அளித்திடும் வகையில் "ஒற்றைச் சாளர இணையதளம்–2.0"யைத் தொடங்கிவைத்தேன். 23.11.2021 அன்று "ஒற்றைச்சாளர கைபேசி செயலி"யையும் தொடங்கி வைத்தேன். 07.03.2022 அன்று தொழில் தொடங்கத் தேவைப்படும் நிலம் தொடர்பாக "தமிழ்நாடு நிலத் தகவல் இணையத்தை"

தொடங்கிவைத்தேன். அதே, 07.03.2022 அன்று தொழில் தொடங்குவதற்குரிய அனுமதிகள், ஒப்புதல்கள், நடைமுறைகளை அறியும் “வழிகாட்டி நிறுவனத்தின் புதிய இணையதளத்தை” துவக்கிவைத்தேன்.

இப்படி, இந்த அரசு தொழில் துறையில் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் முதலீட்டாளர்களுக்கு, புதிய தொழில் தொடங்குவோருக்கு மிகப்பெரிய நம்பிக்கையை இந்த அரசின்மீது, தமிழ்நாட்டின்மீது அளித்திருக்கிறது. இதற்கு எடுத்துக்காட்டு கூறவேண்டுமென்றுச் சொன்னால், கடந்த 2021ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரையில் மட்டும் தமிழ்நாட்டில் வெளிநாட்டு நேரடி முதலீடு (Foreign Direct Investment) என்பது 41.5 விழுக்காடு அதிகரித்துள்ளது.

அதுமட்டுமல்ல; தமிழ்நாட்டில் முதலீடுகளை ஊக்குவிக்கும் முகமையான ‘Guidance’–க்கு ‘Asia Oceania Region’–ன் வருடாந்திர முதலீடுகள் மாநாட்டில், ‘Best Investment Promotion Agency’ என்ற விருதும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அடுத்தகட்டமாக, 2022ஆம் ஆண்டு மே மாதத்தில் சுவிட்சர்லாந்து நாட்டில் நடைபெறவுள்ள உலகப் பொருளாதார அமைப்பின் வருடாந்திரக் கூட்டத்திலும், ஜெர்மனி நாட்டில் ஹானோவர் நிகழ்விலும், ஜூன் மாதத்தில் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள “க்ளோபல் ஆஃப் ஷோர் விண்ட்” (Global Off Shore Wind) நிகழ்விலும், ஜூலை மாதத்தில் அமெரிக்க நாட்டிலும், முன்னணி முதலீட்டாளர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கான முயற்சிகள் ஏற்கெனவே தொடங்கிவிட்டன என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முக்கியமாக எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக, 2023ஆம் ஆண்டின் இறுதியில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு தமிழ்நாட்டில்

சிறப்பாக நடத்தப்படும். அதன்மூலம், மேலும் அதிகமான முதலீடுகள் திரட்டப்படும். நம்முடைய பல இலட்சம் தமிழக இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு போட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், இனிமேல் போடப்போகும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அனைத்தும் முதலீடுகளாக, வேலைவாய்ப்புகளாக மாறும். தமிழ்நாட்டிற்கு வரும் முதலீடுகளை அதிகரிக்கவும், மாநிலத்தில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தவும் மேற்கொள்ளப்படும் இந்த அரசின் முயற்சிகளுக்கு அனைவரும் கட்சி வித்தியாசம் பாராமல் துணை நிற்க வேண்டும் என்பதை மட்டும் கேட்டு, அதேபோல், என் பயணத்திற்கு வாழ்த்திய நல் உள்ளங்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

❖ ❖ ❖

# அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள் "சமத்துவ நாள்"

## 13.04.2022

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணல் அம்பேத்கர் வடக்கில் உதித்த சமத்துவ சூரியன்; பலர் வாழ்வில் கிழக்காய் இருந்த பகலவன்; சமூகம் ஏற்படுத்திய ஏற்றத் தாழ்வை, கல்வி, சட்டம், அரசியல் எழுச்சி மூலமாக சமப்படுத்திய போராளி; 'இருட்டறையில் இருக்குதடா உலகம்; சாதி இருக்கிறதென்போனும் இருக்கின்றானே' என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய வரிகளைப்போல, சாதிக் கொடுமையால் இருண்ட உலகத்தைத் தன்னுடைய பரந்த அறிவால், ஞானத்தால் விடிய வைத்த விடிவெள்ளி அண்ணல் அம்பேத்கர் அவர்கள். அவர் வேண்டாததை நீக்கிய சிற்பி; வேண்டியதைச் சேர்த்த ஓவியர்; அண்ணல் அறிவுச்சுடராய் விளங்கி அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்துக்கொடுத்தவர். அவருடைய கருத்துக்கள் ஆழமும், விரிவும் கொண்டவை; எதிர்காலத்திற்கு ஒளிவிளக்கு அது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பெரியார் பிறந்தநாளை 'சமூகநீதி நாளாக' அறிவித்தது போல, அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14ஆம் தேதியை 'சமத்துவ நாள்' என்று கொண்டாட வேண்டுமென்ற கோரிக்கை எழுப்பப்பட்டது.

இந்தக் கோரிக்கையை ஏற்று, ஏப்ரல் 14ஆம் தேதி இனி சமத்துவ நாளாகக் கொண்டாடப்படும் என்றும், சமத்துவ நாள் உறுதிமொழி தமிழ்நாடு முழுவதும் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நேற்றைய கூட்டத்தில் அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தில், அண்ணலுடைய முழு அளவு வெண்கலச் சிலையை நிறுவ வேண்டுமென்ற கோரிக்கையை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினுடைய தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான முனைவர் தொல். திருமாவளவன் முன்வைத்தார்கள்.

அந்தக் கோரிக்கையையும் ஏற்று, அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தில் முழுஉருவ வெண்கலச் சிலை நிறுவப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான திரு.ஆ.ராசா அவர்கள், பெரியாருடைய நூல்களை 21 மொழிகளில் மொழி பெயர்த்ததைப் பாராட்டியதோடு, அண்ணல் அம்பேத்கருடைய தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களைத் தமிழில் வாசிக்க வாய்ப்பாக மொழிபெயர்த்துப் புதுப்பிக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை விடுத்திருந்தார்.

அந்தக் கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தமிழக அரசால் அண்ணலுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்கள் செம்பதிப்பாக தமிழில் வெளியிடப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக நீதியின் நோக்கம் சமத்துவத்தை அடைவதே என்பதையும், இவ்விரண்டும் நம் இலக்கின் இரண்டு கண்கள் என்பதையும் இந்த மாமன்றம் மட்டுமல்ல; இந்தியத் துணைக் கண்டமே அறியும். தமிழர்கள் அனைவரும் உயர்ந்த நிலையை அடைய, எத்தகைய விண்ணப்பம் வந்தாலும், அதை உடனே பரிசீலித்து ஆவன செய்கிற ஆட்சிதான் இப்போது நடக்கிறது என்பதைத் தெரிவித்து, இந்தளவில் இந்த அறிவிப்பை நிறைவு செய்து அமைகிறேன்.

❖ ❖ ❖

# “என் கடன், பணி செய்து கிடப்பதே”

## 18.04.2022

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழரைக் கோடி தமிழ் மக்களின் ஒட்டுமொத்த உணர்வையும் பிரதிபலிக்கும் நீட் தேர்வுக்கு விலக்கு கோரும் சட்டமுன்வடிவு கடந்த 210 நாட்களாக கிண்டி ஆளுநர் மாளிகை வளாகத்தில் முடங்கிக் கிடக்கிறது. நூற்றாண்டு கண்ட தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டமுன்வடிவு கிண்டி ஆளுநர் மாளிகை வளாகத்தில் கவனிப்பாரின்றிக் கிடக்கிறது.

அப்படிப்பட்ட வேளையில், அதே ஆளுநர் மாளிகை வளாகத்தில் நடக்கக்கூடிய தேநீர் விருந்து என்ற விழாக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்வது என்பது ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளைப் புண்படுத்துவதாகவும், சட்டமன்ற மாண்பினை மேலும் சிதைப்பதாகவும் அமைவதாலேயே, அந்தக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள இயலாத நிலை இந்த அரசுக்கு ஏற்பட்டது.

இதுகுறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு நானே ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். அதில் அதற்கான விவரங்கள் எல்லாம் விரிவாகத் தரப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு ஆளுநர் அவர்களுடன் எங்களுக்கு எந்தவிதமான தனிப்பட்ட விரோதமும் இல்லை. இன்னும் சொல்லப்போனால், தனிப்பட்ட முறையில் மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களுக்கும்,

தமிழ்நாடு முதலமைச்சரான எனக்கும் மிகமிகச் சுமூகமான உறவு இருக்கிறது. நேரில் பேசும்போது, இந்த ஆட்சியின் செயல்பாடுகளை மிகவும் பாராட்டி அவர் பேசியிருக்கிறார். நாங்கள் ஆட்சி நடத்தக்கூடிய விதம் குறித்து பொது மேடையிலேயே, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். அது ஊடகங்களில் எல்லாம் வெளியாகி இருக்கிறது.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் பழகுவதற்கு அதிகம் இனிமையானவர். எங்களுக்கு அதிகமான மரியாதையை அவர் தருகிறார். ஆளுநர் என்ற முறையில் அந்தப் பதவிக்குரிய மரியாதையை நாங்களும் அளிக்கிறோம்; அளித்துக் கொண்டிருக்கிறோம்; தொடர்ந்து அளிப்போம். இது அரசியல் எல்லைகளைக் கடந்த பண்பாடு. இந்தப் பண்பாட்டை எப்போதும், எந்த நிலையிலும் நாம் அனைவரும் காக்க வேண்டும்; காப்போம்.

தனிப்பட்ட முறையில் எனக்குக் கிடைக்கக்கூடியப் பாராட்டுக்களைவிட, தமிழ்நாட்டுக்குக் கிடைக்கக்கூடிய நன்மையும், பலனுமே முக்கியமானது. அதனையே முக்கியமானதாக நான் கருதுகிறேன்.

இந்தச் சட்டமன்றத்தின் மாண்பை, தமிழ்நாட்டு மக்களின் உணர்வை மதித்து, நீட் விலக்கு மசோதாவை மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அனுப்பிவைத்தாக வேண்டும். அப்படி அனுப்பிவைக்காதது முறையானது அல்ல. இந்தச் சபையின் மாண்புக்கு விரோதமானது ஆகும். மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அனுப்பி வைக்காதது என்பது எனக்கல்ல; இந்தத் தமிழ்நாட்டு மக்களை அவமதிக்கக்கூடிய செயலாகும்.

நான் இந்தப் பேரவைக்குச் சொல்வதெல்லாம், சொல்ல விரும்புவதெல்லாம், கடந்த 50 ஆண்டு கால பொது வாழ்க்கையில் நான் எத்தனையோ வலிகளையும், அவமானங்களையும் சந்தித்து

வந்திருக்கிறேன். அது எனக்கு ஒரு பொருட்டல்ல. இந்த 50 ஆண்டு கால பொது வாழ்க்கை எனக்கு கற்றுத் தந்தது எல்லாம் வலிகளையும், அவமானங்களையும், புகழ்ச்சிகளையும், பாராட்டுரைகளையும் புறந்தள்ளிவிட்டு – "என் கடன், பணி செய்து கிடப்பதே" என்று செயல்படுவதுதான். அப்படித்தான் நான் செயல்பட்டு வருகிறேன்.

"பொது வாழ்க்கையில் மக்கள் நலன் சார்ந்து செயல்படுவதுதான் தலையாய கடமை" என்பதே பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வழியிலே நான் கற்றுக் கொண்டிருக்கக்கூடிய பாடமாகும். அந்த வழியில்தான் நான் சென்று கொண்டிருக்கிறேன். ஆனால், தனிப்பட்ட முறையில் எனக்குக் கிடைக்கக்கூடிய வலி, அவமானங்களைப் பொறுத்துக்கொண்டு, அதனால் தமிழ்நாட்டுக்கு, தமிழ்நாட்டு மக்களுக்கு ஏதேனும் நன்மை கிடைக்கும் என்றால், புகழ்ச்சிகளையும், பாராட்டுரைகளையும் நான் புறந்தள்ளிவிட்டு, அவமானங்களையும், வலிகளையும் தாங்கிக் கொள்ளவே நான் எப்போதும் தயாராக இருப்பேன்.

தமிழ்நாட்டு மக்களுடைய ஒட்டுமொத்த உணர்வாக இருக்கக்கூடிய நீட் விலக்கு சட்டமுன்வடிவை மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்புவதுதான் முக்கியம். அதற்காகத்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டது. எனவே, தனிப்பட்ட ஒரு நபருக்கான மரியாதைகள், புகழுரைகள் இவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு, தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி தொடர்ந்து நான் முயற்சித்துக் கொண்டேயிருப்பேன்.

தமிழ்நாடு முதலமைச்சராக இந்தச் சட்டமன்றத்தின், நூற்றாண்டு கண்ட சட்டமன்றத்தின் மாண்பைக் காக்கும் பொறுப்பும் என்னுடையது என்று புரிந்துகொண்டதால்தான் இந்த முடிவை எடுக்க நேரிட்டது. தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளைத் தொடர்ந்து நாம் அனைத்து மன்றங்களிலும் எதிரொலிப்போம். அவர்களது உரிமையை நிலைநாட்டுவோம்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் திருப்பி அனுப்பிய மசோதாவை, இந்தச் சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் 08.02.2022 அன்று நிறைவேற்றி, மீண்டும் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு நாம் அனுப்பி வைத்தோம். இன்றுடன் 70 நாட்கள் ஆகின்றன. இந்நிலையில், நீட் விலக்கு மசோதாவை மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைக்க மாண்புமிகு ஆளுநர் அவர்கள் முடிவு செய்துள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அது தொடர்பான நடவடிக்கைகளைப் பார்த்துவிட்டு, தேவைப்பட்டால், அனைத்து சட்டமன்றக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்து அமைகிறேன்.

❖ ❖ ❖

# ரூ.25 கோடி மதிப்பீட்டில் "ஒலிம்பிக் தங்கம் தேடுதல்" திட்டம்

## 21.04.2022

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித சக்தி என்பது உடல் வலிமையும், உள்ளத்தின் வலிமையும் இணைந்தது. இரண்டு ஆற்றலும் ஒருசேர இருக்கும் மனிதர்களால்தான் அனைத்துத் துறைகளிலும் வெற்றியாளர்களாக மாற முடியும். அந்த வகையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறையின் சார்பிலான அறிவிப்புகளை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

ஒரு சமுதாயத்தின் வலிமை, அச்சமுதாய மக்களுடைய மனரீதியான நலத்தையும், உடல்ரீதியான வலிமையையும் பொறுத்துள்ளது. அறிவு சக்தியைப் போன்றே, உடல் வலிமையும் ஒரு சொத்து. அத்தகைய உடல் வலிமையை அடைவதற்குப் பல்வேறு பயிற்சிகள் இருந்தாலும், விளையாட்டு என்பது அதில் மிகமிக முக்கியமானது. விளையாட்டு என்பது உடலினை உறுதி செய்கிறது; உடலினைத் துடிப்போடு வைத்திருக்கிறது; மனதுக்கும் புத்துணர்ச்சியைத் தருகிறது. அதேபோல், நேர்மையையும், ஒழுக்கத்தையும் கற்றுத் தருகிறது; வெற்றியோ, தோல்வியோ இரண்டும் ஒன்றுதான் என்ற மனப்பக்குவத்தையும் விளையாட்டு உருவாக்குகிறது; குழுவாக இணைந்து செயல்பட வேண்டுமென்ற கூட்டு மனப்பான்மையை உருவாக்குகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு அரசால் அண்மைக்காலமாக விளையாட்டுத்துறைக்கு ஏராளமான திட்டங்கள் அறிமுகம்

செய்யப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதனை மாணவர்களும், இளைஞர்களும் சீரிய முறையில் ஒருங்கிணைந்து பயன்படுத்திக் கொண்டால், தமிழ்நாட்டின் இளைய ஆற்றல் எழுச்சி பெறும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. தமிழ்நாடு பல ஆண்டுகளாக குழுப் போட்டிகளிலும், தனித் திறன் போட்டிகளிலும் தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் முன்னிலை வகித்து வருகிறது. அரசால் ஏற்படுத்தப்பட்ட விளையாட்டுக் கட்டமைப்பு, பயிற்சி வசதிகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப்படக்கூடிய உயரிய ஊக்கத் தொகை ஆகியவைதான் அதன் அடிப்படைக் காரணங்கள்.

பன்னாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் அதிக பதக்கங்கள் வெல்வதை ஊக்குவிக்கக்கூடிய வகையில், தமிழ்நாடு அரசு ரூ.3 கோடி முதல் பல்வேறு வகையான ஊக்க உதவித் தொகைகளைத் தொடர்ந்து வழங்கி, இளைஞர்களை ஊக்கப்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் உள்ளிட்ட பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் சர்வதேச அளவிலான வாகையர் (Championship) போட்டிகளில் வெற்றி வாகை சூட ஏதுவாக, பல்வேறு விளையாட்டுகளுக்காக உலகத் தரத்திலான விளையாட்டுக் கட்டமைப்புகளை ஏற்படுத்த சென்னைக்கு அருகில் பிரம்மாண்டமான விளையாட்டு நகரம் (Mega Sports City) அமைக்க அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம், தமிழ்நாட்டை சார்ந்த வீரர்கள் சர்வதேச தரத்திலான பயிற்சிகளை மேற்கொண்டு வெற்றி வாகை சூடுவார்கள்.

ஒலிம்பிக் போன்ற பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் வாய்ப்பை ஏற்படுத்த தமிழ்நாட்டின் நான்கு மண்டலங்களில் தலா ஒன்று வீதம் நான்கு ஒலிம்பிக் அகாடமிகள்

(Olympic Academies) அமைக்க அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது.

மாநிலம் முழுவதும் விளையாட்டுப் பயிற்சிகள், அதற்கான வசதிகள் ஏற்படுத்த நினைக்கிறோம். அனைத்துச் சட்டமன்றத் தொகுதிகளிலும், தலா ரூ.3 கோடி செலவில் சிறு விளையாட்டு அரங்கங்கள் நிறுவப்பட உள்ளன. இதன்மூலம், ஏழை, எளிய, நடுத்தரக் குடும்பங்களைச் சார்ந்த கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் வாழக்கூடிய இளைஞர்கள் பலன் பெற வழிவகை செய்யப்பட உள்ளது.

தமிழக விளையாட்டு வீரர்கள், ஒலிம்பிக் போன்ற சர்வதேசப் போட்டிகளில் பதக்கம் வெல்வதற்கு வழிகாட்ட ஒரு முயற்சியைத் தொடங்கவிருக்கிறோம். “ஒலிம்பிக் தங்கம் தேடுதல் (Olympic Gold Quest)” என்ற திட்டம் ரூ.25 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

வட சென்னை பகுதியானது பல்வேறு விளையாட்டுத் திறமையாளர்களை ஊக்குவிப்பதில் புகழ் பெற்று விளங்கி வருகிறது. அப்பகுதியில் உள்ள இளைஞர்களை ஊக்கப்படுத்தி மேம்படுத்தக்கூடிய நோக்கில், வட சென்னை பகுதியில் நவீன தொழில்நுட்பங்களோடு கூடிய நவீன குத்துச்சண்டை விளையாட்டு வளாகம் ரூ.10 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளது. இங்கு கையுந்துப்பந்து (Volleyball), இறகுப்பந்து (Badminton), கூடைப்பந்து (Basket ball), குத்துச்சண்டை (Boxing), கபடி (Kabaddi) மற்றும் இதர உள்ளரங்க விளையாட்டுகளுக்கான வசதிகளோடு (Indoor Games) நவீன உடற்பயிற்சிக் கூடம் (Modern Gym) அமைக்கப்பட உள்ளது.

அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டுக்கென்றே தனியாக பிரம்மாண்டமான மைதானம் அமைக்கப்பட உள்ளது. தமிழர்களால் உருவாக்கப்பட்ட இந்தியத் தற்காப்புக் கலைகளில் ஒன்றாக

விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய சிலம்பம் விளையாட்டினை ஊக்கப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. சிலம்ப வீரர்களுக்கு, விளையாட்டு வீரர்களுக்கான வேலைவாய்ப்புகளில் **3** விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பல்வேறு சர்வதேச அளவிலான போட்டிகளை நடத்த முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம் தமிழ்நாட்டில் விளையாட்டைச் சார்ந்த பொருளாதாரம் உருவாகவும், அதனை மேம்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில், சென்னை ஓபன் ATP டென்னிஸ் தொடரை மீண்டும் நடத்தவும், Beach Olympics எனப்படும் கடற்கரை ஒலிம்பிக்ஸ் தொடரை நடத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டுப் போட்டிகள் நடத்துவதன்மூலம் விளையாட்டுத்துறையில் புதிய முதலீடுகளும் தொழில் வளர்ச்சியும் ஏற்படும். இதனையொட்டி சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்து, தமிழ்நாட்டில் சுற்றுலாத்துறை வளர்ச்சியடைவும் வாய்ப்புகள் ஏற்படும்.

சதுரங்க விளையாட்டில் (Chess) இந்தியாவின் தலைநகராக விளங்கக்கூடிய வகையில் எப்போதுமே தமிழ்நாடு பல்வேறு கிராண்ட் மாஸ்டர்களை உருவாக்கியிருக்கிறது. அந்த வகையில் உலக அளவில் சிறந்த சதுரங்க விளையாட்டு வீரர்கள், கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் உள்ளிட்ட பல்வேறு கிராண்ட் மாஸ்டர்களைத் தமிழ்நாடு தொடர்ந்து உருவாக்கி வருகிறது.

இந்தியாவில் விளையாட்டு உலகின் மணிமகுடமாக விளங்கக்கூடிய **44**ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் வரும் **28.07.2022** முதல் **10.08.2022** வரை தமிழ்நாட்டில் உலகமே வியக்கக்கூடிய வகையில் பிரம்மாண்டமாகத் தமிழ்நாடு அரசால்

நடத்தப்பட உள்ளது. 44ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் போட்டிகளில் உலகில் உள்ள 180 நாடுகளைச் சார்ந்த சதுரங்க விளையாட்டு வீரர்கள் அதிலே பங்குபெறவிருக்கிறார்கள். 44ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை நடத்துவதற்கு இன்றே ஒரு குழு ஏற்படுத்தப்பட்டு, அந்தப் பணிகளும் சிறப்பாகச் செயல்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலமாக விளையாட்டுத் துறையில் தமிழகம் முன்னணி மாநிலமாக வளர்ந்து சிறக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அனைத்துத் துறைகளும் ஒரு சேர வளர வேண்டுமென்ற எனது எண்ணத்தின் வடிவமாக இத்தகைய திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் இளைய சக்தியை ஆக்கப்பூர்வமான வழிகளில் பயன்படுத்த தமிழக அரசு எப்போதும் முனைப்புடன் செயல்படும் என்று இந்த மாமன்றத்துக்கு உறுதி அளித்து அமைகிறேன்.

❖ ❖ ❖

# 600 ஊராட்சிகளில் "கிராமச் செயலகங்கள்"

## 22.04.2022

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற 24.04.2022 அன்று தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம் கொண்டாடப்படுகிறது. அதனை முன்னிட்டு சில அறிவிப்புகளை இந்த மாமன்றத்திற்கு நான் வழங்க விரும்புகிறேன்.

உள்ளாட்சி என்பது மக்களாட்சியினுடைய ஜனநாயகத்தின் ஆணிவேர். அது வலிவுடனும் பொலிவுடனும் இருந்தால்தான், அரசினுடைய நலத்திட்டங்கள் கடைக்கோடி மனிதரையும் சென்றடையும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமையும் போதெல்லாம், உள்ளாட்சிகளின் உருசிதையா வண்ணம், உயர்த்தி வலிமைப்படுத்துவதில் தனிக்கவனம் செலுத்தி வருகிறோம். அதற்கேற்ப திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருவதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.

உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டில் ஒளிவுமறைவற்ற வெளிப்படைத் தன்மையினை ஏற்படுத்திடவும், உள்ளாட்சி அமைப்புகளின் சாதனைகள் மற்றும் திட்டச் செயலாக்கங்கள் குறித்து தகவல், கல்வி மற்றும் தொடர்பு இயக்கங்கள் நடத்திட ஏதுவாக, ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தினத்தை 'உள்ளாட்சிகள் தினம்' எனக் கொண்டாட வேண்டுமென்று நான் துணை முதலமைச்சராக

இருந்தபோது முடிவு மேற்கொள்ளப்பட்டது. 2007 நவம்பர், 1ஆம் நாள் அன்று உள்ளாட்சி தினமாகக் கொண்டாடப்பட்டது. இறுதியாக 2010ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொண்டாடப்பட்டு, அதற்குப் பிறகு அ.தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்டது.

கிராமப்புற மக்களிடையே திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், அரசின் அனைத்து செயல்பாடுகளிலும் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்திடவும், மக்கள் பங்கேற்பை ஊக்குவிக்கவும், இடையில் நடத்தப்படாமல் போன இந்த நிகழ்வு, மக்கள் இயக்கமாக மீண்டும் நவம்பர் 1ஆம் தேதி, "உள்ளாட்சிகள் தினமாக" கொண்டாடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கிராமங்களை வலிமைப்படுத்தவும், அங்கே வளர்ச்சியினை ஊக்கப்படுத்தவும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய அதிகாரங்கள் ஏற்கெனவே வகுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில், ஒவ்வொரு ஊராட்சியிலும் அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கி, கிராம சபை என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, கிராம சபைக்கென குறிப்பிட்ட அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, 1998ஆம் ஆண்டில் முதல் முறையாக, ஆண்டிற்கு 4 முறை, குறிப்பிட்ட நாட்களில் கிராம சபை நடத்தப்பட வேண்டும் என்பதை அரசாணையாக வெளியிட்டார்கள். அதனடிப்படையில், கிராம சபை கூட்டங்கள் நடத்தப்பட்டு வந்தாலும், அவ்வப்போது சிறப்பு கிராம சபைக் கூட்டங்களும் தேவையின் அடிப்படையில் மிகக் குறுகிய கால அறிவிப்புகள்மூலம் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு குறுகிய கால அறிவிப்புகள்மூலம் கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படும்போது, மக்களின் பங்கேற்பு குறைவாக இருக்கிறது என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. எனவே, இதைக் கருத்திற்கொண்டு, குறிப்பிட்ட கால இடைவெளியில் நடத்த வேண்டிய கிராம சபைக் கூட்டங்களின் எண்ணிக்கையை அதிகரித்து, மக்களின் பங்கேற்பினை உறுதி செய்வது அவசியம் எனக் கருதி, இந்த ஆண்டு முதல், ஆண்டிற்கு 6 கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த வகையில், ஜனவரி 26–குடியரசு தினம், மே–1 தொழிலாளர் தினம், ஆகஸ்ட்–15 சுதந்திர தினம், அக்டோபர்–2 அண்ணல் காந்தியடிகள் பிறந்த தினம் ஆகிய நாட்களில் நடைபெற்று வரக்கூடிய கிராம சபை கூட்டங்கள், இனி வரும் காலங்களில், கூடுதலாக மார்ச்–22 உலக தண்ணீர் தினம் அன்றும், நவம்பர்–1 உள்ளாட்சிகள் தினம் அன்றும் நடத்தப்படும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கான மாதாந்திர அமர்வுப் படி தொடர்பாக குறிப்பிட விரும்புகிறேன். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், முதலமைச்சராக இருந்தபோதுதான், முதன்முதலாக மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சிப் பிரதிநிதிகளுக்கு அமர்வுப் படி வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு, இன்றுவரை வழங்கப்பட்டு வருகிறது. அதன்பிறகு, பல ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் இருந்த இந்த அமர்வுப் படியினை உயர்த்தி வழங்கிடக் கோரி பல்வேறு மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றதன் அடிப்படையில், மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பிரதிநிதிகளுக்கு கூட்டங்களில் கலந்துகொள்ளும் நாட்களில் அமர்வுப் படித் தொகை பத்து மடங்காக உயர்த்தி வழங்கப்படும் என்றும், கிராம ஊராட்சித் தலைவர், கிராம

ஊராட்சி உறுப்பினர்களுக்கு அமர்வுப் படித் தொகை ஐந்து மடங்காக உயர்த்தி வழங்கப்படும் என்பதையும் இந்த அவையில் மகிழ்ச்சியோடு அறிவிக்க விரும்புகிறேன்.

இவ்வாறு அமர்வுத் தொகை உயர்த்தி வழங்கப்படுவதால், தமிழகத்திலுள்ள 12,525 கிராம ஊராட்சித் தலைவர்கள், 99,327 கிராம ஊராட்சி உறுப்பினர்கள், 388 ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், 6,471 ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள், 36 மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் 655 மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட 1 இலட்சத்து 19 ஆயிரம் ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகள் இதன்மூலம் பயன்பெறுவார்கள்.

ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் தங்களின் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் செயல்படுத்தப்படக்கூடிய பல்வேறு திட்டப் பணிகளைக் கண்காணித்திட முதன்முறையாக 2008ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 385 ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டன. ஆனால், அதன்பிறகு 10 ஆண்டுகளுக்கு வாகனங்களே வாங்கப்படாத நிலையில், கடந்த ஆட்சியில் 2019–2020ஆம் ஆண்டில், புதிய வாகனங்கள் வழங்குவதற்கான அறிவிப்புகள் மட்டுமே வெளியிடப்பட்டன. ஆனால், செயல்முறைப்படுத்தப் படவில்லை. இதனால் ஏறத்தாழ 13 ஆண்டு காலமாக புதிய வாகனங்கள் அவர்களுக்கு வழங்கப்படாத சூழல் உள்ளது.

இதனைக் கருத்தில்கொண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் அந்தந்த ஒன்றியப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பணிகளைத் திறம்படக் கண்காணித்திட ஏதுவாக, தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கும் புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

அடுத்தபடியாக, கிராம ஊராட்சித் தலைவர்களின் தலைமைப் பண்பினை வெளிக் கொணரக்கூடிய வகையிலும், ஊராட்சிகளில் சிறந்த நிருவாகத்தினை ஏற்படுத்திடும் வகையிலும், சிறப்பாக நிருவகிக்கக்கூடிய கிராம ஊராட்சித் தலைவர்களைப் பெருமைப்படுத்த வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில், நான் துணை முதலமைச்சராகவும், துறையினுடைய அமைச்சராகவும் இருந்தபோதுதான், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால், ‘உத்தமர் காந்தி கிராம ஊராட்சி’ என்ற விருது 2006ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டது. 10 முக்கிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு, ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்புடைய ஊராட்சித் தலைவர்களுக்கு நற்சான்றிதழ், கேடயம் மற்றும் ரொக்கத் தொகை வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டு வந்தது.

அந்த வகையில், 2006 முதல் 2010ஆம் ஆண்டு வரை, 60 கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டது. அதற்குப்பிறகு இடைப்பட்ட காலத்தில் இவ்விருது வழங்கப்படவில்லை. இந்த ஆண்டு முதல் வழங்கத் திட்டமிட்டிருக்கிறோம். சிறப்பாகச் செயல்படக்கூடிய கிராம ஊராட்சிகளுக்கு “உத்தமர் காந்தி விருது” 2022ஆம் ஆண்டு முதல் மீண்டும் வழங்கப்படும் என்பதையும், ஆண்டுதோறும் மாவட்டத்திற்கு ஒன்று வீதம், சிறந்த 37 கிராம ஊராட்சிகளுக்கு பத்து இலட்சம் ரூபாய் வீதம் வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கிராம அளவில், ஊரக வளர்ச்சித்துறை மற்றும் வருவாய்த் துறைக்கு மட்டுமே அலுவலகங்கள் தனித்தனியே செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், பிறத் துறைகள் மூலம் கிராமங்களில் செயல்படுத்தப்படக்கூடிய திட்டங்களை

ஒருங்கிணைத்து, அதனைக் கண்காணிக்க கிராம அளவில் வசதிகளை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே, உள்ளாட்சியில் நல்லாட்சி என்ற நோக்கத்துடன், மக்களாட்சியின் மாண்பினை கிராம அளவில் உறுதி செய்திட ஏதுவாக, ஊரக வளர்ச்சித்துறை, வருவாய்த்துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மற்றும் சமூக நலத்துறை போன்ற முக்கிய துறைகளின்மூலம் செயல்படுத்தப்படக்கூடிய அரசின் பல்வேறு திட்டங்களை கிராம அளவில் ஒருங்கிணைத்து செவ்வனே செயல்படுத்திட 600 ஊராட்சிகளில் "கிராமச் செயலகங்கள்" இந்த ஆண்டே கட்டப்படும் என்பதை இந்த அவையில் பெருமகிழ்ச்சியோடு அறிவிக்க விரும்புகிறேன்.

இந்த கிராமச் செயலகங்கள் ஊராட்சித் தலைவருக்கான அறை, அனைத்துத் துறை கூட்ட அரங்கம், கிராம நிருவாக அலுவலருக்கான அறை, கிராம ஊராட்சிச் செயலருக்கான அறை, இணைய வசதி, கழிவறை வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் கொண்டதாக இருக்கும். இந்த புதிய முன்னெடுப்பின் முதற்கட்டமாக, இந்த ஆண்டு 600 புதிய கிராமச் செயலகக் கட்டடங்கள், ஒவ்வொன்றும் சுமார் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோட்டையில் இருந்து திட்டங்களை வகுத்து, அதற்கான அரசாணைகளை அரசு பிறப்பித்தாலும், அவற்றினை மக்களிடம் கொண்டு சேர்க்கும் முக்கிய பணியை ஆற்றிக் கொண்டிருப்பது உள்ளாட்சி அமைப்புகள்தான். அந்தக் காரணத்திற்காகத்தான், நாங்கள் ஊரக, உள்ளாட்சி அமைப்புகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறோம். அதனை மக்களும் நன்கு உணர்ந்துள்ள காரணத்தினால்தான், ஊரக, உள்ளாட்சி, நகர்ப்புறத் தேர்தல்களில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது வழியில்

செயல்படக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக அரசின்மீது தமிழக மக்கள் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து, எங்களுக்கு இமாலய வெற்றியைத் தந்தார்கள் என்பதை நான் ஆணித்தரமாக இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

தமிழக மக்கள் எங்களது அரசின்மீது வைத்திருக்கக்கூடிய நம்பிக்கை என்றென்றும் வீண்போகாத வண்ணம் நாங்கள் தொடர்ந்து செயல்படுவோம் என்று இந்த அவைக்கு உறுதி கூறி அமைகிறேன்.

❖ ❖ ❖

# கலைஞர் பிறந்த நாள் அரசு விழாவாக கொண்டாட்டம்

## 26.04.2022

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “தமிழர்களே! தமிழர்களே! நீங்கள் என்னைக் கடலில் தூக்கி எறிந்தாலும், கட்டுமரமாகத்தான் மிதப்பேன். அதில் ஏறி நீங்கள் பயணம் செய்யலாம்; கவிழ்ந்து விடமாட்டேன்!

தமிழர்களே! தமிழர்களே! என்னை நீங்கள் நெருப்பில் தூக்கிப் போட்டாலும், அதிலே நான் விறகாகத்தான் வீழ்வேன்; அடுப்பெரித்து நீங்கள் சமைத்துச் சாப்பிடலாம்!

தமிழர்களே! தமிழர்களே! நீங்கள் என்னைப் பாறையில் மோதினாலும், சிதறுத் தேங்காயாகத்தான் உடைவேன்! நீங்கள் என்னை எடுத்துத் தின்று மகிழலாம்!” என்ற வைர வரிகளுக்குச் சொந்தக்காரர் மட்டுமல்ல; தன்னுடைய வாழ்க்கையை அப்படியே வாழ்ந்து காட்டியவர்தான் முத்தமிழறிஞர், தமிழினத் தலைவர், அஞ்சுகச் செல்வர்; நம்மையெல்லாம் ஆளாக்கி விட்டு விட்டு, வங்கக் கடலோரம், தன் அன்பு அண்ணன் அருகே வாஞ்சைமிகு தென்றலின் தாலாட்டில் இருந்தபடி தமிழ்ச் சமுதாயத்தின் மகிழ்ச்சியைக் கண்ணுற்று வரும் கலைஞர் அவர்கள்.

நின்ற தேர்தலில் எல்லாம் வென்ற தலைவர் உண்டென்றால், அவர் ஒருவர்தான். 1957 முதல் 2016 வரை நடந்த தேர்தல்களில்

எல்லாம் வென்றவர் அவர் மட்டும்தான். 1957இல் குளித்தலை; 1962இல் தஞ்சாவூர்; 1967, 1971 ஆகிய ஆண்டுகளில் சைதாப்பேட்டை; 1977, 1980 ஆகிய ஆண்டுகளில் அண்ணா நகர்; 1989, 1991 ஆகிய ஆண்டுகளில் துறைமுகம்; 1996, 2001, 2006 ஆகிய ஆண்டுகளில் சேப்பாக்கம்; 2011, 2016 ஆகிய ஆண்டுகளில் திருவாரூர் ஆகிய தொகுதிகளில் வெற்றி பெற்றார். 13 முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்து, 60 ஆண்டுகள் இந்த மாமன்றத்தின் உறுப்பினராக இருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

1984ஆம் ஆண்டு சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தார்கள். தமிழ்நாட்டை ஐந்து முறை ஆண்டவர் தலைவர் கலைஞர் அவர்கள். 10.02.1969 அன்று முதன்முறையாக; 15.03.1971 அன்று இரண்டாவது முறையாக; 27.01.1989 அன்று மூன்றாவது முறையாக; 13.05.1996 அன்று நான்காவது முறையாக; 13.05.2006 அன்று ஐந்தாவது முறையாக என ஐந்து முறை இந்த நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, 19 ஆண்டுகள் முதலமைச்சராக இருந்தவர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.

ஐந்து முறை ஆட்சியில் இருந்த காலத்தில் முதலமைச்சர் கலைஞர் உருவாக்கியதுதான் இன்று நாம் கண்ணுக்கு முன்னால் பார்க்கக்கூடிய நவீன தமிழகம். அன்னைத் தமிழ் மொழிக்கு செம்மொழித் தகுதி! ஒன்றிய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு உயர்வு! அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டம்! மகளிருக்கும் சொத்திலே பங்குண்டு என்ற சட்டம்! பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலின மக்களுக்கான சமூகநீதி உரிமைகள்! உழவர்களுக்கு இலவச மின்சாரம்! கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்பட்ட 7 ஆயிரம் கோடி ரூபாய் கடன் தள்ளுபடி! சென்னை தரமணியில் டைடல் பார்க்! சென்னைக்கு

மெட்ரோ இரயில் திட்டம்! சிப்காட், சிட்கோ தொழில் வளாகங்கள் உருவாக்கம்! தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உருவாக்கியது! நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டங்கள்!

அவசர ஆம்புலன்ஸ் 108 சேவை அறிமுகம்! இலவச மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்! மினி பஸ்களைக் கொண்டு வந்தது! உழவர் சந்தைகள் அமைத்தது! கைம்பெண் மறுமண நிதி உதவி, கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவி ஆகிய திட்டங்கள்! அரசு வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இடஒதுக்கீடு! பெண்களுக்காக 33 விழுக்காடு இடஒதுக்கீடு! இலவச எரிவாயு இணைப்புடன்கூடிய எரிவாயு அடுப்புகள் வழங்குதல்! மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைத்தல்! அனைவரும் இணைந்து வாழ தந்தைப் பெரியார் நினைவு சமத்துவபுரங்கள்! இஸ்லாமிய சமூ கத்தினருக்கு 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கியது! உருது பேசும் இஸ்லாமியர்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே இணைத்தது! நுழைவுத் தேர்வு ரத்து! மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கியது! சேலம் உருக்காலை, சேலம் புதிய இரயில்வே மண்டலம், நெம்மேலி கடல்நீரைக் குடிநீராக்கக்கூடிய திட்டம், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், ஆசியாவிலேயே பெரிய அண்ணா நூலகம் ஆகியவை உருவாக்கம்! மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் ஆகியோருக்கு மறுவாழ்வு வழங்குதல்! ஏராளமான பல்கலைக்கழகங்கள், மருத்துவக் கல்லூரிகள், கலை—அறிவியல் கல்லூரிகள் உருவாக்கியது!

இப்படி நான் சொல்லத் தொடங்கினால் இன்று முழுவதும் என்னால் சொல்லிக் கொண்டேயிருக்க முடியும். இவைதான் தமிழகத்தின் அடையாளங்கள் என்றால், அந்த அடையாளங்களை

எல்லாம் உருவாக்கியவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

தலைவர்களோடு தலைவர்களாக வாழ்ந்த தலைவர்தான் கலைஞர் அவர்கள்! தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் ராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத், பாவேந்தர் பாரதிதாசன், பெரியவர் பக்தவத்சலம், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதன், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., கவியரசு கண்ணதாசன், திருமுருக கிருபானந்த வாரியார், தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

தமிழகத்தில் மட்டுமல்ல; பரந்து விரிந்த இந்த இந்திய அரசியலுக்கே வழிகாட்டியாக இருந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். இந்தியாவின் குடியரசுத் தலைவர்களாக இருந்த நீலம் சஞ்சீவிரெட்டி, கியானி ஜெயில்சிங், வி.வி.கிரி, சங்கர் தயாள் சர்மா, ஆர்.வெங்கட்ராமன், கே.ஆர்.நாராயணன், ஏ.பி.ஜெ.அப்துல்கலாம், பிரதிபா பாட்டீல் ஆகியோரால் பாராட்டப்பட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள். இந்தியாவின் தலைமை அமைச்சர்களாக இருந்த அம்மையார் இந்திராகாந்தி, சரண்சிங், வி.பி.சிங், தேவகவுடா, ஐ.கே.குஜ்ரால், வாஜ்பாய், மன்மோகன் சிங் ஆகியோரால் போற்றப்பட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

நாடாளுமன்ற வரலாற்றிலேயே முதன்முறையாக நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாத தலைவர் கலைஞருடைய மறைவிற்குத்தான் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் முழுவதுமாக ஒத்திவைக்கப்பட்டன. இப்படி எல்லைகளைத் தாண்டி எல்லோரையும் வசப்படுத்தியவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

படைப்பாளிகளோடு போட்டியிடும் படைப்பாளி; கவிஞர்களில் தலைசிறந்த கவிச்சக்கரவர்த்தி; திரையுலகத்தினரில் மூத்த

கலையுலகவாதி; அரசியல் உலகில் தலைசிறந்த அரசியல் ஆளுமை; நிருவாகத் திறனில் நுணுக்கமான திறமைசாலி; மேடை ஏறினால் வெல்லும் சொல்லுக்கு அவர்தான் சொந்தக்காரர்; அவையில் ஏறினால் அவர்தான் வெற்றிச் சூத்திரம் அறிந்தவர் என எல்லாவற்றிலும் முதல்வராக வாழ்ந்த முதல்வர் அவர்.

'என்னிடம் இருந்து செங்கோலைப் பறிக்கலாம்; எழுதுகோலைப் பறிக்க முடியாது' என்று அவர் சொல்லிக் கொண்டார். செங்கோல் பறிக்கப்பட்டாலும், செங்கோலை வழிநடத்தும் எழுதுகோலை அவர்தான் வைத்திருந்தார். அரசு என்பது பதவிப் பிரமாணம் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக்கொள்ள முடியாமல் போனாலும், அவரிடம்தான் இருந்தது. அரசும் அரசியலும் அவரை இயக்கின. அரசையும், அரசியலையும் அவரே இயக்கினார். இத்தகைய அரசு இயலின், அரசியலின் மாபெரும் தலைவருக்கு இந்த அரசு தனது வரலாற்றுக் கடமையைச் செய்ய நினைக்கிறது.

திருவாரூரில் முத்துவேலர்–அஞ்சுகம் அம்மையாருக்கு மகனாக கலைஞர் அவர்கள் பிறந்துதித்த நாளான ஜூன் **3**ஆம் நாள், அரசு விழாவாக இனி கொண்டாடப்படும் என்பதை இம்மாமன்றத்தில் நெஞ்சில் விம்மக்கூடிய மகிழ்ச்சியால், இதயத்தில் துடிக்கக்கூடிய எழுச்சியால், சிந்தை அணுக்களில் வெளிப்படும் நன்றி உணர்வால் நான் இதை இந்த அவைக்கு அறிவிக்கிறேன்.

வரும் ஜூன் **3** அன்று சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் கம்பீரக் கலைஞரின் கலைமிகு சிலை நிறுவப்படும் என்பதையும் அறிவிப்பதில் பெருமைப்படுகிறேன்.

“நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக உயரம் தாண்ட முடியும்” என்று அடிக்கடிச் சொல்வார் தலைவர் கலைஞர் அவர்கள். நீண்ட தூரம் இந்த தமிழினத்துக்காக ஓடியவர் கலைஞர் அவர்கள். அவரை அதிக அதிக உயரத்தில் உயர்த்திப் பார்ப்பதைத் தனது கடமையாகக் கருதுகிறது தமிழ்நாடு அரசு.

❖ ❖ ❖

# முதலாண்டு முத்தான தொடக்கம் இரண்டாமாண்டு இணையற்ற ஆண்டாக இருக்கும்

## 07.05.2022

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் பொறுப்பேற்று இன்றோடு ஓராண்டு நிறைவு பெறுகிறது. இந்த ஓராண்டு காலத்தில் தமிழ்நாட்டு மக்களுக்கு உண்மையுடனும், உளப்பாங்குடனும் உழைத்திருக்கிறேன் என்கிற மனநிறைவோடுதான் இந்த மாமன்றத்தில் நான் நின்றுகொண்டு இருக்கிறேன்.

ஒரு தனி மனிதனின் வரலாற்றில் வேண்டுமானால் ஓராண்டு என்பது மிக நீண்டதாக இருக்கலாம். ஆனால், ஒரு நாட்டின், மாநிலத்தின் வரலாற்றில் ஓராண்டு என்பது ஒரு துளிதான். துளி போன்ற இந்த ஓராண்டு காலத்தில், கடல் போன்ற விரிந்த சாதனைகளைச் செய்துள்ளோம் என்ற பெருமிதத்தோடு இந்த மாமன்றத்தில் நான் நின்றுகொண்டு இருக்கிறேன்.

‘இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்காக நானும், பேராசிரியரும் உழைத்துக்கொண்டு இருக்கிறோம். எங்களுக்குப் பின்னால் இந்தப் பணியை யார் செய்வார்கள் என்று கேட்பீர்களேயானால், இந்த மேடையில் உட்கார்ந்திருக்கிற தம்பி ஸ்டாலின்தான் அதனைச் செய்ய வேண்டும். சிறப்பாகச் செய்வார் என்று நானும் பேராசிரியரும் நம்புகிறோம்’ என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்த கூட்டத்திலே வெளிப்படையாக அறிவித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், இனமானப் பேராசிரியப் பெருந்தகை அவர்களும் என்மீது வைத்த நம்பிக்கையை இந்த ஓராண்டு காலத்தில் காப்பாற்றி இருக்கிறேன் என்ற மகிழ்ச்சியோடுதான் இந்த மாமன்றத்தில் நான் நின்றுகொண்டு இருக்கிறேன். என்னை மட்டுமல்ல; இந்த அவையில் இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களை மட்டுமல்ல; தமிழ்நாட்டின் எட்டுத்திசையிலும் வாழக்கூடிய எத்தனையோ இலட்சோபலட்சம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீரர்களை உருவாக்கியவர்தான் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். எங்களை எல்லாம் உருவாக்கிவிட்டு அவர் மறைந்தபோது, அவர் வகித்த கழகத் தலைவர் பொறுப்பு என்னுடைய தோளில் சுமத்தப்பட்டது.

'நான் கலைஞர் அல்ல; அவரைப் போலப் பேசத் தெரியாது; அவரைப் போல எழுதத் தெரியாது; அவரைப் போல உழைக்க முயன்று பார்ப்பேன்' என்று அப்போது நான் உறுதி அளித்தேன். அந்த உறுதிமொழியை இந்த ஓராண்டு காலத்தில் காப்பாற்றி இருக்கிறேன் என்று சொல்லும் துணிச்சலோடுதான் உங்கள் முன்னால் நான் நின்றுகொண்டிருக்கிறேன்.

நூற்றாண்டு பழமை கொண்ட இந்தத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் இத்தகைய மகிழ்ச்சிக்குரிய மனநிலையுடன் என்னைத் தலைநிமிர்ந்து நிற்க வைத்த கோடிக்கணக்கான தமிழ்நாட்டு மக்களுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதே மாமன்றத்தில் நின்று முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் உரையாற்றிக்கொண்டு இருந்தார். அரங்கமே அமைதியாகக் கேட்டுக்கொண்டு இருந்தது. ஆனால் அரங்கினுடைய வெளியே, வாசலில் ஏதோ சத்தம் வந்துகொண்டேயிருந்தது. காவலர்களிடம் கண் அசைவில், "என்ன ?" என்று அண்ணா அவர்கள் கேட்டிருக்கிறார். காவலர்கள் அண்ணா அவர்களிடம் ஏதோ சொன்னார்கள். பேரவைத் தலைவருடைய அனுமதி பெற்று அரங்கை விட்டு வெளியில் போன முதலமைச்சர் அண்ணா அவர்கள்,

ஐந்து நிமிடம் கழித்து உள்ளே வந்திருக்கிறார். தனது பேச்சைத் தொடர்வதற்கு முன்னால், “என்னைப் பார்ப்பதற்காக தமிழ்நாட்டின் எங்கோ ஒரு மூலையில் இருந்து எங்களது கழகத் தொண்டர்கள் வந்துள்ளார்கள். நான் இந்த அவைக்குள் நுழைவதற்குக் காரணமான அவர்களை மதித்து வணங்கி, வழியனுப்பி வைத்துவிட்டுத்தான் இங்கே வந்திருக்கிறேன்” என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

தமிழ்நாட்டின் எங்கோ ஒரு மூலையில் இருந்து என்னை இந்த மாமன்றத்துக்குள் இத்தகைய தகுதியோடு நிற்கவைத்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீரர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தோழமைக் கட்சிகளாக மட்டுமில்லாமல், தோழமை உறவுகளாக எங்களோடு எப்போதும் பயணித்துக் கொண்டிருக்கக்கூடிய கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இவர்களால்தான் நான் இங்கு தலைநிமிர்ந்து நிற்கிறேன். அவர்கள் என்மீது வைத்த நம்பிக்கையை இந்த ஓராண்டு காலத்தில் காத்து வந்திருக்கிறேன் என்று உறுதியாக நான் நம்புகிறேன்.

அனைத்துத் தரப்பு மக்களுடைய நலனைக் காத்து, அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, சமச்சீரான வளர்ச்சியை சாதித்துக் காட்டுவதாக இந்த ஓராண்டுக் கழக ஆட்சி திகழ்கிறது. நமது திட்டங்களின் பயன்கள் சென்று சேராதவரே தமிழ்நாட்டில் இல்லை என்ற ஒரு நிலை உருவாகியுள்ளது.

மகளிருக்கு இலவசப் பேருந்துப் பயணம் என்ற ஒரு திட்டம் பெண்கள் சமூகத்தில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மட்டும் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போதுகூட, இந்தச் சட்டமன்றத்திற்கு வருவதற்கு முன்பு, கோபாலபுரத்திற்கு, தலைவர் கலைஞர் அவர்களுடைய இல்லத்திற்குச் சென்று, அவருடைய திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்துவிட்டு, என்னைப் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த தாயிடம் ஆசிர்வாதம் வாங்கிவிட்டு, நானும், நம்முடைய அவை

முன்னவர் அவர்களும் மற்றும் அமைச்சர் பெருமக்கள் எல்லாம் காரிலே வந்துகொண்டிருந்தபோது, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையிலே ஒரு பேருந்து நிலையத்திலே இறங்கி நின்றபோது, ஒரு பேருந்து வந்தது. 'நீங்கள் எல்லாம் காரிலேயே உட்கார்ந்திருங்கள், நான் அந்தப் பேருந்திலே கொஞ்சம் நேரம் பயணம் செய்துவிட்டு வருகிறேன்' என்று சொல்லி, **29–C** அந்தப் பேருந்தில் ஏறினேன். **29–C** பேருந்து என்னுடைய வாழ்நாளிலே மறக்கமுடியாத பேருந்து. ஏனென்றால், பள்ளிப் பருவத்திலே இருந்தபோது, நான் கோபாலபுரத்திலிருந்து **29–C** மூலம் பள்ளிக்குச் சென்று வந்தேன். அப்போது தலைவர் கலைஞர் அவர்கள், பொதுப்பணித்துறை மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சராகவும் இருந்தார். நான் ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி பேருந்து நிறுத்தத்திலிருந்து, **29–C** பேருந்தைப் பிடித்துத்தான் என்னுடைய பள்ளிக்கு, ஸ்டெர்லிங் சாலையில் இறங்கி, அங்கிருந்து சேத்துப்பட்டிற்கு நடந்து போய், பள்ளிக்குச் சென்று படித்தேன். **29–C** என்ற அந்தப் பேருந்தில்தான் இன்றைக்குக் காலையில் நான் ஏறி பயணித்தேன். அந்தப் பேருந்தில் பயணம் செய்துகொண்டிருந்த மகளிரிடத்திலே, 'எப்படி இந்த ஆட்சி நடக்கிறது – ஒரு வருடம் ஆகியிருக்கிறது; இரண்டாவது வருடத்தில் அடியெடுத்து வைக்கிறோம் – உங்களுக்குத் திருப்தியாக இருக்கிறதா?' என்று கேட்டேன். 'ரொம்ப திருப்தியாக இருக்கிறது. உங்களைப் பார்த்ததே அளவுகடந்த மகிழ்ச்சியாக இருக்கிறது' என்று சொன்னார்கள். இந்த இலவசப் பயணத்தினால் உங்களுக்கு என்ன இலாபம், எவ்வளவு மிச்சமாகிறது? என்ற கேள்விகளையெல்லாம் கேட்டேன். அதற்குரிய விளக்கத்தையெல்லாம் சொன்னார்கள்.

ஏற்கெனவே இதுகுறித்து மூன்று வழித் தடங்களில் கருத்துக் கணிப்பு எடுக்கப்பட்டது. கோயம்பேடு முதல் திருவொற்றியூர் வரை; தாம்பரம் முதல் செங்கல்பட்டு வரை; பிராட்வே முதல் கண்ணகி நகர் வரை பயணம் செய்யக்கூடிய **465** பயனாளிகளிடம் கருத்துக் கேட்கப்பட்டது. மாநிலத் திட்டக் குழுவால் நடத்தப்பட்ட இந்தக் கருத்துக் கேட்பின் வாயிலாக, இந்தத் திட்டத்தால் பிற்படுத்தப்பட்ட,

மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலினப் பெண்கள் அதிக அளவிலே பயன்பெற்று வருகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள முடிந்தது. அதிலும் குறிப்பாகப் பட்டியலினப் பெண்கள் அதிகமாக பயனடைந்திருக்கிறார்கள். இந்தச் சலுகை மூலமாக யார், எவ்வளவு பயனடைந்துள்ளார்கள் என்றும் கேட்கப்பட்டது.

வீட்டு வேலை பார்க்கும் ஒரு பெண், மாதத்திற்கு 5 ஆயிரம் ரூபாய் ஊதியம் பெறுவதாகச் சொன்னார். அரசுப் பேருந்துச் சலுகை வழங்கியதன் காரணமாக தனக்கு மாதந்தோறும் 850 ரூபாய் மிச்சமாகிறது என்று அவர் சொன்னார். பொருள்களை விற்பனை செய்யக்கூடிய ஒரு பெண், இந்த மாதம் 9 ஆயிரம் ரூபாய் சம்பாதித்ததாகச் சொன்னார். அரசுப் பேருந்துச் சலுகை வழங்கியதன் காரணமாக இந்த மாதம் 900 ரூபாய் மிச்சமானது என்று சொன்னார். இதுதான் இந்த அரசாங்கத்தினுடைய உண்மையான சாதனை என்று நான் சொல்வேன்.

ஒரு நிறுவனத்தில் பராமரிப்புப் பணியாற்றக்கூடிய ஒரு பெண் மாதம் 9 ஆயிரம் ரூபாய் ஊதியம் பெறுகிறார். அவருக்கு ஆயிரத்து 70 ரூபாய் மாதந்தோறும் மிச்சம் ஆகிறது. இதுதான் இந்த அரசாங்கத்தினுடைய உண்மையான சாதனையாகும். தினக்கூலித் தொழிலாளியாக ஒரு பெண் இருக்கிறார். அவர் 9 ஆயிரம் ரூபாய் மாத ஊதியம் பெறுகிறார். அவருக்கு மாதம் 750 ரூபாய் மிச்சம் ஆகிறது.

அதாவது ஒவ்வொரு பெண்ணுக்கும் சராசரியாக 600 ரூபாயிலிருந்து 1,200 ரூபாய் வரைக்கும் மிச்சம் ஆகிறது. 30.04.2022 வரை 106 கோடியே 34 இலட்சம் பயணங்களை பெண்கள் இலவசமாக மேற்கொண்டுள்ளார்கள். இதுதான் மகத்தான சாதனை. அவர்கள் வாங்கும் மாத வருமானத்தில் 11 விழுக்காடு மிச்சம் ஆகிறது. அன்றாடக் கூலி வேலை பார்ப்பவர்களுக்கு அவர்களது செலவில் 20 விழுக்காடு மிச்சம் ஆகியிருக்கிறது. இப்படி மிச்சமாகும் பணத்தைச் சேமித்து வைப்பதாக அந்தப் பெண்கள் சொல்கிறார்கள். அதாவது, அன்றாடச் செலவுக்கு

இல்லை என்ற நிலையில் இருக்கக்கூடிய பெண்கள் சேமிக்கக் கூடியவர்களாக ஆகியிருக்கிறார்கள். 5 ஆயிரம் முதல் 12 ஆயிரம் வரை சம்பாதிக்கக்கூடிய பெண்களுக்கு வாழ்க்கைச் சுமையைக் குறைக்கக்கூடிய திட்டமாக இது அமைந்திருக்கிறது.

ஒரே ஒரு கையெழுத்தின் மூலமாக கோடிக்கணக்கான பெண்களுடைய வாழ்வில் ஒளியேற்ற முடியும் என்பதை நிரூபித்திருக்கும் ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய திராவிட மாடல் ஆட்சி! ஒரே ஒரு திட்டத்தைப் பற்றித்தான் நான் சொன்னேன். இப்படி ஒவ்வொன்றைப் பற்றியும் நான் விரிவாகச் சொல்ல முடியும்.

ஒரே ஒரு கையெழுத்தின் காரணமாக, ஆயிரம் பேருக்கு, பல்லாயிரம் பேருக்கு, இலட்சம் பேருக்கு, பல இலட்சம் பேருக்கு, கோடிப் பேருக்கு, பல கோடிப் பேருக்கு நன்மைகள் கிடைத்திருக்கிறது. இவை அனைத்தும் ஏதோ வாய்வார்த்தையாக நான் சொல்லவில்லை.

- ❖ 4,000 ரூபாய் கொரோனா உதவித்தொகை பெற்ற குடும்பங்கள் 2 கோடியே 9 இலட்சத்து 81 ஆயிரத்து 900.
- ❖ கொரோனா கால நிவாரணமாக 13 மளிகைப் பொருள்களைப் பெற்ற குடும்பங்கள் 2 கோடியே 7 இலட்சத்து 77 ஆயிரத்து 535.
- ❖ 21 விதமான பொங்கல் பொருள்களை பெற்ற குடும்பங்கள் 2 கோடியே 12 இலட்சத்து 17 ஆயிரத்து 756.
- ❖ கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள் 10 கோடியே 83 இலட்சத்து 7 ஆயிரத்து 713 பேர்.
- ❖ கொரோனாவில் இறந்த மருத்துவ முன்களப் பணியாளர்கள் குடும்பத்துக்கு வழங்கப்பட்ட நிதி உதவி 79 கோடியே 90 இலட்சம்.

- ஆவின் பால் விலையை 3 ரூபாய் குறைத்த காரணத்தால் பயன் பெறுபவர்கள் 1 கோடி பேர்.
- புதியதாக குடும்ப அட்டை பெற்றவர்கள் 11 இலட்சத்து 47 ஆயிரத்து 844 பேர்.
- புதியதாக மின் இணைப்பினைப் பெற்றவர்கள் 9 இலட்சத்து 91 ஆயிரம் பேர்.
- அகவிலைப்படி உயர்வால் பயனடைந்த அரசு ஊழியர்கள் 9 இலட்சத்து 32 ஆயிரம் பேர். அகவிலைப்படி உயர்வால் பயனடைந்த ஒய்வூதியதாரர்கள் 7 இலட்சத்து 15 ஆயிரம் பேர்.
- நகைக்கடன் தள்ளுபடி பெற்றவர்கள் 22 இலட்சத்து 20 ஆயிரத்து 109 பேர்.
- மகளிர் சுயஉதவிக் குழுக்களால் கடன் பெற்றவர்கள் 54 இலட்சத்து 5 ஆயிரத்து 400 பேர்.
- மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வாங்கிய கடனைத் தள்ளுபடி செய்ததால், அதன்மூலமாகப் பயன்பெற்றவர்கள் 15 இலட்சத்து 88 ஆயிரத்து 309 பேர்.
- புதியதாக உருவாக்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக்களில் இணைந்தவர்கள் 4 இலட்சத்து 76 ஆயிரத்து 175 பேர்.
- மக்களைத் தேடி மருத்துவ திட்டத்தால் பயன்பெற்றவர்கள் 93 இலட்சத்து 34 ஆயிரத்து 315 பேர்.
- ‘நம்மைக் காக்கும் 48’ திட்டத்தால் பயன்பெற்றவர்கள் 39 ஆயிரத்து 542 பேர்.
- 104 மருத்துவச் சேவை மையத்தால் பயன்பெற்றவர்கள் 3 இலட்சத்து 16 ஆயிரம் பேர்.

- 108 அவசரகால ஊர்தியால் பயன்பெற்றவர்கள் 16 இலட்சத்து 41 ஆயிரம் பேர்.

- கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டவர்கள் 1 கோடியே 34 இலட்சம் பேர். கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தால் சிகிச்சை பெற்றவர்கள் 3 இலட்சத்து 43 ஆயிரம் பேர். கலைஞரின் வருமுன் காப்போம் முகாம் மூலம் பயன்பெற்றவர்கள் 8 இலட்சத்து 25 ஆயிரம் பேர். நடமாடும் மருத்துவக் குழு மூலம் சிகிச்சை பெற்றவர்கள் 1 கோடியே 54 இலட்சம் பேர்.

- 124 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் புதியதாக உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புக்கள் 1 இலட்சத்து 90 ஆயிரம் பேர்.

- குறு, சிறு நடுத்தரத்தொழில் நிறுவனங்களுக்கு கொரோனா காலக் கடன் பெற்றவர்கள் 539 பேர்.

- தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் மூலம் ஏற்படுத்தப்பட்ட தொழில்கள் மூலமாக வேலை பெற்றவர்கள் 27 ஆயிரத்து 771 பேர். தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடன் பெற்றவர்கள் 124 பேர்.

- கொரோனாவால் உயிரிழந்த முன்களப் பணியாளர் குடும்ப நிவாரணத் தொகை பெற்றவர்கள் – 315 பேர். கொரோனாவால் உயிரிழந்த குடும்பத்துக்கான இழப்பீட்டுத் தொகை பெற்றவர்கள் – 55 ஆயிரத்து 743 பேர். கொரோனாவால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கான இழப்பீடுத் தொகை பெற்றவர்கள் – 10 ஆயிரத்து 824 பேர். தொற்றால் உயிரிழந்த பத்திரிக்கையாளர் குடும்பத்துக்கான நிதியுதவி பெற்றவர்கள் – 16 பேர்.

- 1 இலட்சம் ரூபாய் நிதி உதவி பெற்ற எல்லைப் போராட்ட வீரர்கள் – 76 பேர்.

- ❖ மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இழப்பீடு பெற்ற குடும்பங்கள் – 96 ஆயிரத்து 273 பேர். மழை வெள்ளத்தால் பயிர்கள் பாதிக்கப்பட்டு இழப்பீடு பெற்றவர்கள் – 3 இலட்சத்து 59 ஆயிரம் பேர். உதவித்தொகை பெற்ற போக்குவரத்துத் தொழிலாளர்கள் – 2 ஆயிரத்து 457 பேர்.
- ❖ வருவாய்த்துறையால் பட்டா பெற்றவர்கள் – 1 இலட்சத்து 51 ஆயிரம் பேர். இலவச வீட்டுமனைப் பட்டா பெற்றவர்கள் – 24 ஆயிரத்து 883 பேர். இலவச வீட்டுமனை பெற்ற ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர் – 53 ஆயிரம் பேர். புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து இலவச வீட்டுமனைப் பட்டா பெற்றவர்கள் – 16 ஆயிரம் பேர். நத்தம் திட்டத்தின்கீழ் வீட்டுமனைப் பட்டா பெற்றவர்கள் – 56 ஆயிரம் பேர். இணையவழிப் பட்டா மாறுதல் பெற்றவர்கள் – 19 இலட்சத்து 52 ஆயிரம் பேர். உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பயன்பெற்றவர்கள் – 1 இலட்சத்து 24 ஆயிரம் பேர்.
- ❖ வீட்டு வசதி வாரியம் மூலமாக வீடு பெற்றவர்கள் – 6 ஆயிரத்து 323 பேர்.
- ❖ மாதம் 3 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை பெறும் கலைஞர்கள் – 1,000 பேர்.
- ❖ அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற திட்டத்தால் வேலை பெற்றவர்கள் – 24 பேர்.
- ❖ ஒரு கால பூஜை கோவில் பூசாரிகளுக்கான உதவித்தொகை பெற்றவர்கள் – 9 ஆயிரத்து 982 பேர்.
- ❖ மொட்டை போடும் தொழிலாளர்களுக்கான ஊதியம் பெற்றவர்கள் ஆயிரத்து 744 பேர்.
- ❖ இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தால் பயன்பெற்ற பிள்ளைகள் – 30 இலட்சம் பேர்.

❖ புதிய கைப்பேசிச் செயலி மூலம், பள்ளிக்குச் செல்ல முடியாத குழந்தைகள் எனக் கண்டறியப்பட்டு, மீண்டும் பள்ளிக்கு அனுப்பப்பட்டவர்கள் 1 இலட்சத்து 80 ஆயிரம் பேர்.

❖ எண்ணும் எழுத்தும் திட்டத்தால் பயன்பெறும் மாணவர்கள் – 16 இலட்சம் பேர்.

❖ கட்டாயக் கல்வித் திட்டத்தால் சேர்க்கப்பட்டவர்கள் – 56 ஆயிரம் பேர்.

❖ உயர்த்திய 1,500 ரூபாய் மாதாந்திர உதவித்தொகை பெற்ற மாற்றுத்திறனாளிகள் – 2 இலட்சத்து 11 ஆயிரம் பேர். இலவசக் கருவிகள் பெற்ற மாற்றுத்திறனாளிகள் – 37 ஆயிரம் பேர். உதவித்தொகை பெற்ற மாற்றுத்திறனாளி மாணவர்கள் 23 ஆயிரத்து 326 பேர். தேசிய அடையாள அட்டை பெற்ற மாற்றுத்திறனாளிகள் 4 இலட்சத்து 82 ஆயிரத்து 518 பேர். வேலைவாய்ப்பு பெற்ற மாற்றுத்திறனாளிகள் 553 பேர்.

❖ கருவுற்ற மகளிருக்கு நடந்த சமூகப் பாதுகாப்பு வளைகாப்பு நிகழ்ச்சியில் பங்கெடுத்தவர்கள் 90 ஆயிரம் பேர். சொந்தத் தொழில் தொடங்க திருநங்கைகளுக்காக வழங்கப்பட்ட மானியத்தைப் பெற்றவர்கள் 141 பேர்.

❖ முதியோர் இல்லங்களில் பயன்பெற்ற முதியோர் – 711 பேர்.

❖ கொரோனாவால் பெற்றோரை இழந்தவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை பெறும் குழந்தைகள் 285 பேர்.

❖ உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தில் மனு கொடுத்து உதவிகள் பெற்றவர்கள் 2 இலட்சத்து 29 ஆயிரம் பேர். உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் நிலப்பட்டா பெற்றவர்கள் 32 ஆயிரத்து 283 பேர். உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம்

பெற்றவர்கள் 30 ஆயிரத்து 455 பேர். தனிநபர் வீடு பெற்றவர்கள் 19 ஆயிரத்து 665 பேர். போட்டித் தேர்வு முகாம்களில் பயிற்சி பெறுபவர்கள் 12 ஆயிரம் பேர்.

❖ 5 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகை பெற்ற மீனவக் குடும்பங்கள் 1 இலட்சத்து 71 ஆயிரம். சிறப்பு ஊக்கத் தொகை பெற்ற மீனவக் குடும்பங்கள் – 1 இலட்சத்து 51 ஆயிரம் பேர். மீனவ சேமிப்பு நிவாரணத் திட்டத்தின்கீழ் தொகை பெற்றவர்கள் 3 இலட்சத்து 45 ஆயிரம் பேர்.

❖ குடிநீர் இணைப்புப் பெற்ற ஊரக வீடுகள் – 14 இலட்சத்து 32 ஆயிரம்.

❖ பயிற்சி பெற்ற மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் 2 இலட்சத்து 42 ஆயிரம் பேர்.

❖ ஊரக சுய வேலைவாய்ப்பு நிறுவனம் மூலம் பயிற்சி பெற்ற இளைஞர்கள் – 15 ஆயிரம் பேர். சுய தொழில் தொடங்கிய இளைஞர்கள் – 13 ஆயிரம் பேர்.

❖ மாவட்ட வேலைவாய்ப்பு முகாம் மூலமாக வேலை பெற்றவர்கள் 32 ஆயிரம் பேர். மிதிவண்டிகள் பெற்ற மாணவ, மாணவியர் 4 இலட்சம் பேர். முதியோர் ஓய்வூதியத் திட்டப்படி பணம் பெற்றவர்கள் 3 இலட்சத்து 263 பேர்.

❖ தமிழகம் முழுவதும் நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களின் மூலமாக வேலைவாய்ப்பு பெற்றவர்கள் 68 ஆயிரத்து 800 பேர்.

❖ 7.5 விழுக்காடு இடஒதுக்கீட்டால் பயனடைந்த மருத்துவக் கல்லூரி மாணவ மாணவியர் 437 பேர். 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டால் பயனடைந்த பல் மருத்துவ மாணவ மாணவியர் 107 பேர்.

- பயிர்க்கடன் பெற்றவர்கள் 14 இலட்சத்து 83 ஆயிரத்து 961 பேர். கூட்டுறவுக் கடன் பெற்றவர்கள் 48 இலட்சத்து 93 ஆயிரத்து 174 பேர்.
- டெல்டா மாவட்டத்தில் குறுவை சாகுபடி தொகுப்பு பெற்றவர்கள் 2 இலட்சத்து 87 ஆயிரத்து 401 பேர்.
- காவலர்களுக்கு ஒருநாள் விடுமுறை என்பதால் பயன்பெற்றவர்கள் 63 ஆயிரத்து 77 பேர்.
- பல்வேறு நலத்திட்டங்களைப் பெற்ற இலங்கைத் தமிழர்கள் 92 ஆயிரத்து 669 பேர்.
- பஞ்சுக்கு ஒரு விழுக்காடு வரியைக் குறைத்த காரணத்தால் பயன்பெற்றவர்கள் 3 ஆயிரத்து 52 பேர்.
- மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் – 291 பேர்.
- கொரோனா காலத்தில் உதவி பெற்ற புலம்பெயர் தொழிலாளர்கள் – 1.29 இலட்சம் பேர்.
- உதவித்தொகை பெற்ற அமைப்பு சாராத் தொழிலாளர்கள் – 1.85 இலட்சம் பேர்.
- உரிமை பாதுகாக்கப்பட்டு மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட தொழிலாளர்கள் – 5,235 பேர்.
- மீட்கப்பட்ட கொத்தடிமைகள் – 198 பேர்.
- நலத்திட்ட உதவி பெற்ற தொழிலாளர்கள் – 50 ஆயிரம் பேர்.
- உதவித்தொகை பெற்ற வேலைவாய்ப்பற்ற பதிவுதாரர்கள் – 55 ஆயிரம் பேர்.
- உதவித் தொகை பெற்ற மாற்றுத்திறனாளி பதிவுதாரர்கள் – 14,541 பேர்.

2021ஆம் ஆண்டு, மேட்டூர் அணையிலிருந்து நீர் திறக்கப்படுவதற்கு முன்பாக, 67 கோடி ரூபாய் செலவில் 4,213 கி.மீ. நீளத்துக்குத் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டுக் கடைமடை வரை பாசன நீர் செல்வது உறுதிசெய்யப்பட்டது. அதேபோல், நடப்பாண்டில் 80 கோடி ரூபாய் செலவில் 4,694 கி.மீ. நீளத்துக்குத் தூர்வாரும் பணிகள் பருவமழைக்கு முன்னதாக நடந்து வருகின்றன.

நீண்ட பட்டியலைச் சொன்னேன். இவற்றின்மூலம் கோடிக்கணக்கான தமிழக மக்கள் இந்த ஓராண்டு காலத்தில் நேரடியாகப் பயனடைந்திருக்கிறார்கள். இந்த ஆட்சியானது தமிழ்நாட்டின் ஒவ்வொரு மனிதருக்கும் நேரடியாகப் பயன் தரக்கூடிய ஆட்சியாகச் செயல்பட்டு இருக்கிறது என்பதைப் பெருமையோடு நான் இங்கே பதிவு செய்கிறேன்.

இந்த ஓராண்டு காலத்தில் மகத்தான முன்னெடுப்புகள் பல செய்யப்பட்டுள்ளன.

75ஆவது சுதந்திர நாள் நினைவுத்தூண், சென்னையில் 230 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கிண்டியில் மாபெரும் மருத்துவமனை, மதுரையில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நூலகம், சென்னையில் கலைஞர் நினைவு மண்டபம், அரசுப் பணியிடங்களில் தமிழ் தகுதித் தேர்வு கட்டாயம், வேளாண்மைத்துறைக்காகத் தனி நிதிநிலை அறிக்கை, இல்லம் தேடிக் கல்வி, மக்களைத் தேடி மருத்துவம், நான் முதல்வன் திட்டம், இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48, தமிழ்நாடு ஒலிம்பிக் தங்கப் பதக்கத் தேடல், அறிவுசார் நகரம், சமத்துவபுரங்கள், உழவர் சந்தைகள், அரசு முன் மாதிரிப் பள்ளிகள், பத்திரிகையாளர் நலவாரியம், எழுத்தாளர்களுக்குக் கனவு இல்லம், இலக்கிய மாமணி விருது, கலைஞர் எழுதுகோல் விருது, பேராசிரியர் அன்பழகனார் பெயரில் பள்ளிகள் மேம்பாட்டுத் திட்டம், பெருந்தலைவர் காமராசர் பெயரில் கல்லூரிகள் மேம்பாட்டுத் திட்டம், முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு, உங்கள் தொகுதியில் முதலமைச்சர், பெரியார் பிறந்தநாள் ‘சமூகநீதி நாள்’,

அம்பேத்கர் பிறந்தநாள் ‘சமத்துவநாள்’, வள்ளலார் பிறந்தநாள் ‘தனிப்பெரும் கருணை நாள்’, கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம், அன்னைத் தமிழில் அர்ச்சனை, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர், மாவட்டந்தோறும் புத்தகச் சந்தைகள், புத்தகப் பூங்கா அமைக்க நிரந்தர இடம், கோயில் நிலங்கள் மீட்பு, 10 கலை அறிவியல் கல்லூரிகள், 11 புதிய ஐ.டி.ஐ நிறுவனங்கள், காவல் ஆணையம், பொருநை அருங்காட்சியகம், மீண்டும் மஞ்சப்பை முன்னெடுப்பு – இப்படி ஏராளமான திட்டங்களை சாதித்து வருகிறது தமிழ்நாடு அரசு.

இவை அனைத்தையும், அதன் உள்ளார்ந்த நோக்கம் சிதையாமல் அமல்படுத்திக் காட்டினோம் என்றால் தமிழ்நாடு சிறந்த மாநிலமாக உயரும். அப்படி உயர்வதற்கு நான் ஒரு கருவியாகப் பயன்பட்டேன் என்பதுதான் எனக்கு இருக்கக்கூடிய மகிழ்ச்சியாகும்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் தேர்தல் அறிக்கையை வெளியிட்டது. அந்தத் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தையும் ஐந்தாண்டு காலத்தில் நிறைவேற்றுவோம் என்பதுதான் வாக்குறுதி. ஆனால் இந்த ஓராண்டு காலத்தில் 60 முதல் 70 விழுக்காடு நிறைவேற்றி இருக்கிறோம் என்பதை அழுத்தம் திருத்தமாக நான் சொல்ல விரும்புகிறேன்.

இவை அனைத்தையும் பட்டியல் போடுவதற்கு காலநேரம் போதாது. ‘புதியதாக இவர்கள் எதையும் செய்யவில்லை, ஏற்கெனவே இருந்ததைத்தான் பெயர் மாற்றி இருக்கிறீர்கள்’ என்று சிலர் விமர்சிக்கும்போது சிரிப்பாகத்தான் இருக்கிறது. இவர்கள் தெரிந்து பேசுகிறார்களா, தெரியாமல் பேசுகிறார்களா என்பது புரியவில்லை.

நான் கேட்கிறேன்; மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து வசதி என்பது ஏற்கெனவே இருந்ததா? கொரோனா கால நிவாரணமாக 4,000 ரூபாய் தரப்பட்டதா? ஆவின் பால் விலை லிட்டருக்கு 3 ரூபாய் குறைக்கப்பட்டதா? பெட்ரோல் விலை லிட்டருக்கு 3 ரூபாய் குறைக்கப்பட்டதா? இலங்கைத் தமிழர்களுக்கு 317 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்கள் தீட்டப்பட்டிருந்ததா? பெரியார் பிறந்த

நாள் சமூக நீதி நாளாகக் கொண்டாடப்பட்டதா? அம்பேத்கர் பிறந்த நாள் சமத்துவ நாளாகக் கொண்டாடப்பட்டதா?

நெசவாளர்கள் கோரிக்கையை ஏற்று பஞ்சுக்கு ஒரு விழுக்காடு வரி ரத்து செய்யப்பட்டதா? தமிழ்நாடு ஆதிதிராவிடர், பழங்குடியினர் நல ஆணையம் உருவாக்கப்பட்டிருந்ததா? கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட நகைக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டதா? மகளிர் சுயஉதவிக் குழுக்கள் பெற்ற கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டதா? மக்களைத் தேடி மருத்துவம் சென்றதா? இல்லம் தேடி கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டதா? நம்மைக் காக்கும் 48 திட்டம் இருந்ததா? தமிழ்வழியில் படித்தவர்க்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை இருந்ததா? கல்லூரிகளை நோக்கி வரும் அரசுப் பள்ளி மாணவியர்க்கு 1,000 ரூபாய் தரப்பட்டதா? இப்படி என்னால் கேட்டுக்கொண்டே இருக்க முடியும்.

நாங்கள் சொன்னதை செய்திருக்கிறோம்; சொல்லாததையும் இந்த ஓராண்டு காலத்தில் செய்திருக்கிறோம். எல்லா அரசுக்கும் ஒரு நோக்கம், ஒரு பாதை இருக்கும். இந்த அரசுக்கும் ஒரு நோக்கம், ஒரு பாதை இருக்கிறது. அதற்கு ‘திராவிட மாடல்’ என்று நான் பெயர் சூட்டி இருக்கிறேன்.

‘எல்லார்க்கும் எல்லாம்’ என்பதுதான் இதனுடைய உள்ளடக்கம். “சமூகத்தில் அடக்கி ஒடுக்கப்பட்டு இருக்கிறானே, அவனை உயர்த்துவதுதான் எனது நோக்கம்” என்றார் தந்தை பெரியார் அவர்கள். “நான் சாமானியர்களுக்காக உழைக்கும் சாமானியன்” என்றார் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள். “நான் அடக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காக எந்நாளும் உழைப்பேன்” என்றார் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். இந்த மூவரின் சிந்தனைகளையும் உள்ளத்தில் வைத்து செயல்படுவதால்தான், இந்த ஆட்சியை ‘திராவிட மாடல்’ என்று நாங்கள் அழுத்தந்திருத்தமாகக் கூறிக்கொண்டே இருக்கிறோம்.

‘திராவிட மாடல்’ எது என்று கேட்டால், அது என்னுடைய இதயத்தில் மட்டுமல்ல; தமிழ்நாடும், தமிழ்நாட்டு மக்களும் முன்னேற வேண்டும் என்ற முற்போக்கான எண்ணம் கொண்ட அனைவரது உள்ளத்திலும் உள்ளது. இந்தக் கூட்டு எண்ணம்தான் அரசின் இதயத்துடிப்பாக விளங்குகிறது.

இந்த அரசாங்கத்தின் இதயம் என்பது, கொரோனா காரணமாக இடையில் நின்றுபோன கல்வியை மீண்டும் பெற்றுக்கொண்ட 1 இலட்சத்து 73 ஆயிரத்து 792 பள்ளிப் பிள்ளைகளின் இதயத்தில் இருக்கிறது. இந்த அரசாங்கத்தினுடைய இதயம் என்பது, ‘மக்களைத் தேடி மருத்துவம்’ திட்டத்தால் பயன்பெற்ற 95 இலட்சம் பேரின் வாழ்க்கையோடு கலந்திருக்கிறது. இந்த அரசாங்கத்தின் இதயம் என்பது, ‘நம்மைக் காக்கும் 48’ திட்டத்தின் மூலமாக உயிர் பெற்ற 39 ஆயிரம் பேரின் மூச்சில் இருக்கிறது.

‘கடலில் கால் நனைக்க முடியவில்லையே’ என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த மாற்றுத்திறனாளிகளின் ஏக்கம் போக்க, கடல் வரைக்கும் மரப்பாதை அமைத்தோமே! அதனால், கால் நனைத்து மகிழும் மாற்றுத்திறனாளிகளின் மனதில், இதயத்தில் இந்த அரசு வாழ்ந்துகொண்டிருக்கிறது.

இந்த அரசாங்கத்தின் இதயம் என்பது, நெஞ்சில் ஏக்கத்துடனும், முகத்தில் சோகத்துடனும் வாழ்ந்து வந்த முகாம்வாழ் இலங்கைத் தமிழ் மக்களின் புதிய குடியிருப்புகளில் இருக்கிறது.

தஞ்சை மாவட்டம், களிமேடு கிராமத்து கோயில் திருவிழாவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் 11 பேர் மரணம் அடைந்தார்கள். உடனடியாக நான் அங்கு சென்றேன். ‘செத்தவங்களோட சொந்தக்காரங்க வந்ததைப்போல முதலமைச்சர் உடனடியாக வந்துவிட்டார்’ என்று அந்த ஊர் மக்கள் சொன்ன சொல்லில் இந்த ஆட்சியினுடைய இதயம் இருக்கிறது.

இந்த அரசாங்கத்தின் இதயம் என்பது, மிகக் கொடூரமான குண்டுவீச்சுக்கு மத்தியில், மரண பயத்தில் வாழ்ந்து வந்த உக்ரைன் நாட்டுக்கு படிக்கச் சென்ற தமிழ்நாட்டு மாணவர்களை மீட்டு வந்ததில் இருக்கிறது.

43 ஆண்டுகள் இல்லாத வகையில் இந்த ஆண்டு நெல் விளைச்சல் அதிகமாகி, பூமி செழித்தது அல்லவா ? மண்ணைச் செழிக்க வைத்த மகிழ்ச்சியில் இருக்கிறது இந்த அரசாங்கத்தின் இதயம்.

மாமல்லபுரத்தில் ஒரு நரிக்குறவப் பெண்ணின் மனதில் நம்பிக்கையை விதைத்ததில், அவரது சுயமரியாதையை நிலைநாட்டியதில் இந்த ஆட்சியினுடைய இதயம் இருக்கிறது.

ஆவடியில் இருளர் இன மக்கள் இல்லத்திற்குச் சென்றபோது அவர்கள் கொடுத்த கறிக்குழம்பு காரமாக இருந்தது. ‘இவ்வளவு காரமாகவா சாப்பிடுகிறீர்கள் ?’ என்று நான் கேட்டேன். ‘ஆமாம், இவ்வளவு காரமாக சாப்பிடும் காரணத்தினால்தான் எங்களுக்குக் கொரோனாவே வரவில்லை’ என்று அந்த மக்கள் சொன்னார்கள். அது அறிவியல் பூர்வமானதா என்பது வேறு. ஆனால், அந்த உணவின் காரத்தில் அவர்களது அன்பு வெளிப்பட்டது. இந்த அரசும் காரமான அரசுதான். காரம் எப்படி நோய்களில் இருந்து தங்களைக் காக்கும் என்று அந்த மக்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ, அப்படி சமூக நோய்களிலிருந்து காப்பாற்றும் – மக்கள் நம்பும் காரமான அரசுதான் நம்முடைய கழக அரசு.

அவர்கள் வீட்டுக்கு நான் சென்றபோதுகூட தனக்கென எந்த வாய்ப்பு வசதியும் இல்லாத அந்தப் பள்ளி மாணவி, தன்னுடைய குடும்பத்திற்கு எதுவும் கேட்கவில்லை. பக்கத்து வீட்டில், காது கேளாத ஒரு பையனுக்கு உதவி செய்யுங்கள் என்றுதான் கேட்டார். நம்முடைய மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.நாசர் அவர்கள் அந்தக் குழந்தைக்கு தொடர்ந்து உதவி செய்து கொண்டிருக்கிறார். இத்தகைய விளிம்பு நிலை மக்களுக்குச்

செய்த உதவிகளில்தான் இந்த ஆட்சியினுடைய இதயம் இருப்பதாக நான் நினைக்கிறேன்.

“பகுத்தறிவும், பாகற்காயும் கசக்கும். ஆனால், அவை இரண்டும் உடலுக்கு மிக மிக நல்லது” என்றார் தலைவர் கலைஞர் அவர்கள். அத்தகைய காலத்தின் தேவையான ‘திராவிட மாடல்’ அரசுதான் இது. அரசு விழாக்களில் அல்லது சாலையில் போகின்றபோது, நிகழ்ச்சிகளுக்குப் போகின்றபோது மக்கள் என்னிடம் மனு கொடுக்கும்போது, சில பேர் சொல்வார்கள். ‘எத்தனையோ தடவை மனு கொடுத்துள்ளேன், ஆனால் உங்கள் கையில் கொடுக்கும்போது நிறைவேறும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது’ என்று சாதாரண, சாமானிய மக்கள் சொல்லும்போது – அவர்கள் வைத்திருக்கக்கூடிய நம்பிக்கைதான் இந்த ஆட்சிக்கு கிடைத்திருக்கக்கூடிய நற்சான்று, நற்சான்று, நற்சான்று என நான் சொல்கிறேன்.

அரசியலில் மிகச் சிறு வயதிலிருந்தே இருப்பவன் நான். மக்கள் கூட்டத்தைப் பார்த்துப் பார்த்து எனக்குப் பழகிவிட்டது. மக்கள் கூட்டத்தைப் பார்க்கும்போது அவர்கள் மனதில் என்ன நினைக்கிறார்கள் என்பதை அவர்களது முகம் காட்டிக் கொடுத்துவிடும். இந்த ஓராண்டு காலத்தில் மக்களை நோக்கி நான் செல்லும்போது, அலையைப்போல என்னை நோக்கி மக்கள் வருவதை நான் பார்க்கிறேன். அவர்களது முக மலர்ச்சி என்பது நாட்டில் ஏற்பட்டுள்ள மலர்ச்சியாகத்தான் இருக்கிறது. இதுதான் இந்த ஓராண்டு காலத்தில் நாம் செய்திருக்கக்கூடிய மகத்தான சாதனை.

என்னுடைய கவலையெல்லாம், என்னுடைய பயமெல்லாம் இந்த நம்பிக்கையை எப்போதும் நாம் காப்பாற்ற வேண்டும் என்பதுதான். மக்கள் ஆதரவு பெருகப் பெருக பொறுப்பும், கடமையும் கூடுகிறது. எதிர்ப்பார்ப்பு அதிகம் ஆகிறது. அதனைக் காப்பாற்ற நாம் கடினமாக உழைத்தாக வேண்டும், உழைக்க வேண்டும். அதிகமாக

உழைக்க நான் தயாராக இருக்கிறேன். நான் மட்டுமல்ல, இந்த அமைச்சரவையே இன்னும் அதிகமாக உழைக்கத் தயாராக இருக்கிறது.

ஓராண்டு முடிந்து, இரண்டாவது ஆண்டு தொடங்கும் இந்த மகிழ்ச்சிக்குரிய நாளில் மக்கள் மனம் மகிழும் சில அறிவிப்புகளை நான் வெளியிட இருக்கிறேன். சில மிக முக்கியமான ஐந்து பெரும் திட்டங்களை இந்த மாமன்றத்திற்கு அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

முதலாவது திட்டம், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இனிமேல் காலை நேரத்தில் சிற்றுண்டி வழங்கப்படும். நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் பள்ளிக்கு செல்லக்கூடிய குழந்தைகள் காலையிலேயே புறப்பட்டு விடுகிறார்கள். இதனால் பெரும்பாலான குழந்தைகள் காலை உணவு சாப்பிடுவது இல்லை என்ற தகவல் அரசுக்கு கிடைத்திருக்கிறது. பள்ளிகள் மிகத் தூரமாக இருப்பது மட்டுமல்ல, சிலருடைய குடும்ப சூழலும் இதற்குக் காரணமாக இருக்கிறது. இதனை மனதில் வைத்துக்கொண்டு இந்தத் திட்டத்தை நாம் தீட்டி இருக்கிறோம். முதற்கட்டமாக சில மாநகராட்சி, நகராட்சிகளிலும், தொலைதூரக் கிராமங்களிலும் இத்திட்டம் தொடங்கப்படவுள்ளது. ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலக்கூடிய தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும். இதனை உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக வழங்குவோம். படிப்படியாக அனைத்துப் பகுதிகளுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

இரண்டாவது திட்டமானது, ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத தமிழகத்தை உருவாக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆட்சிக்கு வந்த பிறகு எடுக்கப்பட்ட ஒரு புள்ளி விவரத்தில் கிடைத்த தகவல் மிக மிக மன வேதனையைத் தருவதாக இருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளைப்

பரிசோதித்ததில் அவர்களில் பெரும்பாலானவர்கள் ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ளவர்களாக இருந்தார்கள். வயதுக்கேற்ற எடையும் இல்லை; வயதுக்கேற்ற உயரமும் இல்லை. மிக, மிக, மெலிந்து இருக்கின்றார்கள். உடலில் உறுதி இல்லாவிட்டால் அவர்களது எதிர்காலம் என்பது கேள்விக்குறியாக ஆகிவிடும் என்பதை உணர்ந்து இதற்கென தனியாக ஒரு திட்டத்தைத் தீட்ட நான் ஆலோசனை கூறினேன்.

6 வயதுக்குட்பட்ட குழந்தைகளை நலமுடன் வளர்த்தெடுக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. பரந்துபட்ட அளவில் குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனைகள் செய்ய இருக்கிறோம். மருத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கு மருத்துவ உதவியும், ஊட்டச்சத்து தேவைப்படும் குழந்தைகளுக்கு சிறப்பு ஊட்டச்சத்து திட்டம் ஒன்றும் ஏற்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ், குழந்தைகள் பயனடைவார்கள். தமிழகக் குழந்தைகள் அனைவரையும் திடமான, ஊட்டச்சத்துக் குறைபாடில்லாதவர்களாக மாற்றுவதற்கான திட்டமாக இதனை நாம் வடிவமைத்துள்ளோம்.

மூன்றாவது திட்டம் ‘தகைசால் பள்ளிகள்’ என்ற திட்டம்! ‘Schools of Excellence’ என்று இதற்குப் பெயர். சென்ற ஏப்ரல் மாதம் டெல்லி சென்ற நான், அங்கு டெல்லி அரசின் சார்பில் நடத்தப்படும் மாதிரிப் பள்ளியைப் பார்வையிட்டேன். அப்போது டெல்லியினுடைய முதலமைச்சரே அழைத்துக்கொண்டு சென்று அதையெல்லாம் விளக்கிச் சொன்னார்கள். இதேபோல், தமிழ்நாட்டிலும் உருவாக்கப்படும் என்று அங்கேயே நான் சொல்லிவிட்டு வந்தேன். அந்த அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் தகைசால் பள்ளிகள் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலில், முதற்கட்டமாக 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25 மாநகராட்சி மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகள் தகைசால் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும். இப்பள்ளிகளின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் சீரமைக்கப்படும். அனைத்துக் கட்டடங்களும் நவீனமயமாக்கப்படும். மாணவர்களின் கற்றல் செயல்பாடுகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கக்கூடிய அதேநேரத்தில், கலை, இலக்கியம், இசை, நடனம், செய்முறை அறிவியல், விளையாட்டு, கைவினைச் செயல்பாடுகள் என அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய கட்டமைப்பு அந்தப் பள்ளியில் உருவாக்கப்படும். மாணவர்களின் பல்வகைத் திறன்களையும் வெளிக்கொண்டு வருவோம். படிப்புடன் சேர்ந்து அவர்களது தனித்திறன்கள் அனைத்தும் வளர்த்தெடுக்கப்படும். அவர்களுடைய ஆளுமைத் திறன் அனைத்தும் மேம்படுத்தப்படும். இந்தவகைப் பள்ளிகளைத் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் படிப்படியாக விரிவுபடுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் உறுதி அளிக்கிறேன்.

நான்காவதாக அறிவிக்கக்கூடிய திட்டமானது நகர்ப்புர மருத்துவ நிலையங்களை அமைக்கும் திட்டம். கிராமப்புறங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் இருப்பதைப்போல், நகர்ப்புரங்களில் இந்த மருத்துவ நிலையங்கள் அமைய இருக்கின்றன. நகர்ப்புர மக்கள் அரசுப் பொது மருத்துவமனையை நோக்கி வரும்போது மருத்துவமனைகளில் கூட்டம் அதிகமாகி வருகிறது. இந்நிலையை மாற்றி, ஒருங்கிணைந்த, தரமான மருத்துவ சேவைகளை மக்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வழங்கிடும் நோக்கில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட 21 மாநகராட்சிகள் மற்றும் 63 நகராட்சிப் பகுதிகளில் 708 நகர்ப்புர மருத்துவ நிலையங்கள் புதியதாக ஏற்படுத்தப்படும். இந்த மருத்துவ நிலையங்களுக்கு 180 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில்

சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும். இந்த 708 புதிய நகர்ப்புர மருத்துவ நிலையங்களிலும், காலை 8 மணி முதல் 11 மணி வரையும் மாலை 4 மணி முதல் 8 மணி வரையிலும் இரு வேளைகளிலும் புறநோயாளிகள் சேவைகள் செயல்படுத்தப்படும்.

இந்த மையங்களில் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு மருந்தாளுநர் மற்றும் உதவியாளர் ஆகிய பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள். இந்தத் திட்டத்தின் மூலமாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புர மருத்துவ நிலையங்களிலும் காலையும் மாலையும் ஏழை எளியோருக்கு இலவச மருத்துவ சேவைகள் கிடைப்பதை உறுதி செய்து, 2030ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் நல்வாழ்வு எனும் இலக்கினை தமிழ்நாடு எட்டும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஐந்தாவது திட்டம் 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற திட்டம். சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக நான் பல்வேறு ஊர்களுக்குச் சென்றேன்; மக்களைச் சந்தித்தேன்; அவர்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றேன் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். அந்த மனுக்களை ஒரு பெட்டியில் வைத்து பூட்டினோம். வெற்றி பெற்றதும் திறப்பேன் என்று வாக்குறுதி அளித்தேன். வெற்றி பெற்றோம். இந்த மனுக்களை பரிசீலிப்பதற்காகவே 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற தனித் துறை உருவாக்கப்பட்டு மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன.

இது மக்களுக்குப் பெரும்பயனைத் தந்துள்ள காரணத்தால், இதே திட்டத்தை மேலும் விரிவுபடுத்தத் திட்டமிட்டிருக்கிறோம். இதனடிப்படையில் 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டமானது, தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளிலும் நடைமுறைக்கு வரப்போகிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 234 தொகுதிகளிலும் நீண்ட காலமாக நிறைவேற்றப்படாத அவசியத் தேவைகள் குறித்து அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில்,

ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இணைந்து பரிசீலனை செய்வார்கள்.

அடுத்து வரும் நிதி ஆண்டுகளில் அவற்றை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கப்படும். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், தங்களுடைய தொகுதி மக்களுடைய தேவைகளை அறிந்து, அந்தந்த மாவட்ட ஆட்சியர்களிடம் 10 முக்கியத் திட்டங்கள் குறித்த பட்டியலை நீங்கள் அளிக்க வேண்டும். அந்தப் பட்டியலில் இருக்கக்கூடிய மிக முக்கியமான திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு, தற்போது நடைமுறையில் உள்ள அரசுத் திட்டங்களின்கீழ் செயல்படுத்த இயலாத திட்டங்களை, முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இந்தப் பணிகளுக்காக மட்டும் இந்த ஆண்டு ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இந்தத் திட்டம் நேரடியாக, என்னுடைய கண்காணிப்பிலே நடைபெற போகிறது. எனது கொளத்தூர் தொகுதியாக இருந்தாலும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு வரவில்லை; இருந்தாலும், அவருக்கு இங்கே நான் சொல்ல விரும்புகிறேன், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் எடப்பாடி தொகுதியாக இருந்தாலும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களின் போடி தொகுதியாக இருந்தாலும், அனைத்துத் தொகுதிகளுக்கும் சமமாக நடத்தப்படக்கூடிய திட்டங்கள் தீட்டப்படும் என்று நான் உறுதியளிக்கிறேன்.

ஆட்சிப் பொறுப்புக்கு வந்து இரண்டாம் ஆண்டு தொடங்கக் கூடிய இந்நாளில் இத்தகைய ஐந்து மாபெரும் மகத்தானத் திட்டங்களை அறிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

தேர்தலுக்கு முன்னதாக திருச்சியில் நம்முடைய நேரு அவர்கள் முன்னின்று நடத்திய மிகப் பெரிய தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம். அந்தக் கூட்டத்தில் நான் நிறைவாக பேசுகிறபோது ஏழு முக்கியமான வாக்குறுதிகளை நான் பிரகடனப்படுத்தினேன்.

வளரும் வாய்ப்புகள்—வளமான தமிழ்நாடு! மகசூல் பெருக்கம், மகிழும் விவசாயி! குடிமக்கள் அனைவருக்கும் குறையாத தண்ணீர்! அனைவருக்கும் உயர்தரக் கல்வி மற்றும் உயர்தர மருத்துவம்! எழில்மிகு மாநகரங்களின் மாநிலம்! உயர்தர ஊரகக் கட்டமைப்பு, உயர்ந்த வாழ்க்கைத் தரம்! அனைவருக்கும் அனைத்துமான தமிழகம்! இந்த ஏழு வாக்குறுதிகளை மையமாகக் கொண்டு இந்த ஐந்து திட்டங்களும் தீட்டப்பட்டிருக்கின்றன. நான் கொடுத்த வாக்குறுதிகளை நான் நிச்சயம் நிறைவேற்றுவேன். இந்த ஓராண்டு காலச் சாதனைகள் என்பவை தனிப்பட்ட என்னுடைய சாதனைகள் அல்ல; இவை அனைத்தும் தனிப்பட்ட என்னால் மட்டும் செய்யப்பட்டது என்று நான் சொல்லமாட்டேன். நான் அப்படி வளர்க்கப்படவில்லை. என்னுடைய அமைச்சரவைத் தோழர்கள் துணையோடு செய்யப்பட்டிருக்கக்கூடிய சாதனைகளாகும். அவர்களின் கரங்கள் இணைந்ததால், கிடைத்த பலத்தால், அடைந்த வெற்றியாகும் இது.

இந்த அவைக்கு மட்டுமல்ல, அரசுக்கும் முன்னவராக இருந்து என்னை வழிநடத்திக் கொண்டிருக்கிறார் என்னுடைய ஆருயிர் அண்ணன் திரு. துரைமுருகன் அவர்கள். அவை முன்னவரும், நம்முடைய மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சருமான அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களுக்கு நான் தனிப்பட்ட முறையிலே இந்த அவையின் மூலமாக நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசுக்கு ஆறு மாபெரும் இலக்குகள் இருக்கின்றன. உட்கட்டமைப்பில் உலகத் தரம்! கல்வி, அறிவாற்றலில் பேராளுமைத் திறம்! அன்றாடத் தேவைகளில் மக்களுக்கு மனநிறைவு! தொய்வு இல்லாத தொழில் வளர்ச்சி! அனைத்து சமூகத்தவர்களுக்குமான மேம்பாடு! நிதி, சட்டம், நிருவாகத்தில் வெளிப்படைத்தன்மை! ஆகிய ஆறு இலக்குகளைக் கொண்டு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த இலக்குகளை அடைய என்னோடு தோளோடு தோள் நின்று பணியாற்றக்கூடிய நம்முடைய மாண்புமிகு அமைச்சர்

பெருமக்கள் அண்ணன் திரு.துரைமுருகன், திரு.கே.என்.நேரு, திரு.இ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, திரு.எ.வ.வேலு, திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், திரு.K.K.S.S.R.ராமச்சந்திரன், திரு.தங்கம் தென்னரசு, திரு.எஸ்.ரகுபதி, திரு.சு.முத்துசாமி, திரு.கே.ஆர்.பெரியகருப்பன், திரு.தா.மோ.அன்பரசன், திரு.மு.பெ.சாமிநாதன், திருமதி பி.கீதா ஜீவன், திரு.அனிதா R. ராதாகிருஷ்ணன், திரு.R.S.ராஜகண்ணப்பன், திரு.கா.ராமசந்திரன், திரு.அர.சக்கரபாணி, திரு.V.செந்தில்பாலாஜி, திரு.ஆர்.காந்தி, திரு.மா.சுப்பிரமணியன், திரு.பி.மூர்த்தி, திரு.எஸ்.எஸ்.சிவசங்கர், திரு.பி.கே.சேகர்பாபு, முனைவர் பழனிவேல் தியாகராஜன், திரு.ஆவடி சா.மு.நாசர், திரு.செஞ்சி K.S. மஸ்தான், திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திரு.சிவ.வி.மெய்யநாதன், திரு.சி.வி.கணேசன், திரு.த.மனோ தங்கராஜ், திரு.மா.மதிவேந்தன் மற்றும் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் என அனைவரும் தங்களை முழுமையாக ஒப்படைத்துக்கொண்டு எனக்கு துணை நின்று பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் நன்றி.

துறை வாரியாக இவர்கள் தீட்டி செயல்படுத்தி வரக்கூடிய திட்டங்கள் அனைத்தும் உன்னதமானவை. தமிழ்நாட்டின் மேன்மைக்கும், உயர்வுக்கும் அடித்தளமாக அமையக்கூடியவை. இவர்களுக்கு உறுதுணையாக செயல்படக்கூடிய நம்முடைய தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் அனைவருக்கும் எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஓராண்டு காலத்தில் அனைத்தையும் சாதித்துவிட்டேன் என்று நான் சொல்லிக்கொள்ளவில்லை. அப்படி சொல்லிக் கொள்ளவும் மாட்டேன். ஓராண்டு காலத்திற்குள் செய்யக் கூடியதைவிட அதிகமாகச் செய்துவிட்டோம் என்று என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும். நாம் போகவேண்டிய தூரம் இன்னும் இருக்கிறது என்பதையும் நான் மனதார ஒப்புக் கொள்கிறேன். இன்னும் வேகமாகச் செல்ல முடியாததற்குத் தடையாக இருப்பவை நிதிநிலை நெருக்கடியும், ஒன்றிய

அரசாங்கத்தின் சில நிலைப்பாடுகளும். இந்த இரண்டு தடைகள் மட்டும் இல்லாமல் போயிருக்குமானால், இன்னும் பல திட்டங்களை நம்மால் தீட்டி இருக்க முடியும்.

தடைகள் இல்லாத வாழ்க்கை ஏது? எனது வாழ்க்கையில் நான் சந்தித்த தடைகள்தான் என்னைக் கூர்தீட்டி இருக்கிறது, பக்குவப்படுத்தி இருக்கிறது. உறுதியானவனாக என்னை இங்கே நிற்க வைத்திருக்கிறது. மனிதர்களை அடையாளம் காட்டி இருக்கிறது. எனவே இதுபோன்றத் தடைகள் காலம் காலமாக இருப்பவைதான். இந்தத் தடைகளை மட்டுமே பேசிக்கொண்டு இருக்கக்கூடிய எதிர்மறைச் சிந்தனை கொண்டவனாக இருக்கக்கூடியவன் அல்ல நான். இந்தத் தடைகளைத் தகர்த்து வெற்றிப் பெற வேண்டும் என்ற நேர்மறைச் சிந்தனைக் கொண்டவன் நான். அத்தகைய நேர்மறையான சிந்தனைகள்தான் இந்த ஓராண்டு கால வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணம் என்று நான் மனதார நம்புகிறேன்.

மற்றவர்களின் பலவீனத்தை நம்பி அரசியல் செய்யக்கூடியவன் அல்ல நான். என் பலத்தை நம்பியே நான் அரசியல் செய்ய நினைக்கிறேன். எனது பலம் என்பது எனது இலக்கில் இருக்கிறது. இந்த இலக்கை எப்படியும் நான் அடைவேன்.

"இந்தியாவைப் போல குறிக்கோள் உள்ள நாடு உலகத்தில் இல்லை. அதேநேரத்தில் குறிக்கோளுக்கும் செயல்முறைக்கும் இடையில் பெரிய அகலம் உள்ள நாடும் உலகத்தில் இல்லை" என்று இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அப்படி இருக்கக் கூடாது என்பதே என்னுடைய குறிக்கோள். குறிக்கோளும் செயல்முறையும் இணைந்து பயணிக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அதனால்தான் நான் செய்யக்கூடிய அறிவிப்புகளைச் செயல்படுத்த அதற்கான கால அவகாசத்தைக் குறிப்பிட்டு 'டேஷ்போர்டு' ஒன்றை உருவாக்கி வைத்திருக்கிறேன். இந்தத் திட்டமிடுதல் இருந்தால் போதும் எந்தத் திட்டத்தையும் செயல்படுத்தி முடித்துக் காட்டலாம்.

எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தையும் நிச்சயம் நிறைவேற்றிக் காட்டுவேன் என்பதை இந்த மாமன்றத்தில் உறுதியாகச் சொல்கிறேன்.

என்னுடைய இலக்குக்கு 'திராவிட மாடல்' என்று பெயர். அந்த இலக்கை அடைய தந்தை பெரியாரின் கொள்கை வலிமையும், பேரறிஞர் அண்ணாவின் மானுடப்பற்றும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் விடாமுயற்சியும், இனமானப் பேராசிரியரின் பொறுமையும் கொண்டு நான் எந்நாளும் உழைப்பேன்! உழைப்பேன்! உழைப்பேன்! தமிழ்நாட்டைக் காப்பேன்! காப்பேன்! காப்பேன்!

இந்த முதலாண்டு முத்தான தொடக்கமாக அமைந்திருக்கிறது. இரண்டாமாண்டு இணையற்ற ஆண்டாக இருக்கப் போகிறது. இனி எந்நாளும் கழக ஆட்சி கலைஞரின் ஆட்சி என்பதை வரலாற்றில் பதிய வைக்க எனது ஆட்சிப் பயணத்தை உங்கள் அனைவரது வாழ்த்துக்களுடன் தொடர்கிறேன். வாருங்கள் நாம் அனைவரும் இணைந்து நமக்கான தமிழ்நாட்டை அமைப்போம்.

"வாழ்க தமிழ்! வெல்க தமிழ்நாடு!"

❖ ❖ ❖

## மயிலாடும்பாறை ஆய்வு முடிவின்படி தமிழகத்தில் இரும்பின் பயன்பாடு 4,200 ஆண்டுகளுக்கு முற்பட்டது

### 09.05.2022

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்ச் சமூகத்தின் தொன்மை மற்றும் தொடர்ச்சியை உறுதிசெய்து, உலகுக்கு அறிவித்திட தமிழ்நாடு தொல்லியல் துறை எடுத்து வரும் மகத்தான முயற்சிகளை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட பூம்புகார், கொற்கை, அழகன்குளம் உள்ளிட்ட சங்ககாலத் துறைமுக நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் கிடைத்த ரோமானிய நாணயங்கள், மெருகூட்டப்பட்ட மட்பாண்டங்கள், அரேபியத் தீபகற்பத்தைச் சார்ந்த அயலகப் பொருட்களை முன்னிறுத்தி, இந்தத் துறைமுகங்கள் வழியே சங்க காலத் தமிழர்கள் கடல்வழி வணிகத்தில் சிறந்து விளங்கினர் என்பதைச் சான்றுகளின் அடிப்படையில் நம்மால் நிறுவ முடிந்தது.

அதேபோல், அங்கே கிடைத்த அரியவகை சூதுபவள மணிகள், ஒளிர்மிகு நீலமணிகள் கொண்டு கங்கைச் சமவெளி மற்றும் வடமேற்கு இந்தியப் பகுதிகளுடன் தமிழர்கள் உள்நாட்டு வணிகம் மேற்கொண்டிருந்தது உறுதி செய்யப்பட்டது. கீழடி அகழாய்வில் வெளிப்பட்ட கட்டுமானங்கள், தொல்பொருட்களின்

செய்நேர்த்தி, தொழில்நுட்பத் திறன், பொறியியல் நுணுக்கம் ஆகியவற்றை ஆராய்ந்து பார்த்ததில் சங்ககாலத் தமிழகத்தில் நன்கு முதிர்ச்சியடைந்த நகரப் பண்பாடு செழித்து வளர்ந்திருந்தது என்பதை உலகுக்கு நம்மால் அறிவிக்க முடிந்தது.

அதுமட்டுமல்ல; கீழடி, கொடுமணல் மற்றும் பொருந்தல் போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் மூலம் தமிழி எழுத்துக்களின் காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டு என்று அறிவியல் அடிப்படையில் உறுதிசெய்யப்பட்டது. மேலும், 2,600 ஆண்டுகளுக்கு முன்னரே, தமிழ்க் குடிமக்கள் பரவலான எழுத்தறிவு பெற்ற சமூகமாக விளங்கினர் என்ற உண்மையை அறிவுலகம் ஏற்றுக் கொண்டது நமக்கெல்லாம் பெருமையளிக்கக்கூடிய செய்தியாகும்.

அதைத் தொடர்ந்து, சென்ற ஆண்டு சிவகளை பகுதியில் அகழாய்வு செய்தபோது கிடைத்த நெல்மணிகளை பகுப்பாய்வு செய்து, பொருநை ஆற்றங்கரை நாகரிகம், 3,200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று அறிவிக்கப்பட்டது. தமிழ்நாடு தொல்லியல் துறை, அகழாய்வுகளை மேற்கொள்வதிலும், தொல்பொருட்களை ஆய்வு செய்வதிலும் பல்வேறு நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வருகிறது. காந்த அளவியல் பகுப்பாய்வு (Magnometer Survey), ஆளில்லா வான்வழி ஊர்தி ஆய்வு (Unmanned Aerial Survey), தரை ஊடுருவல் தொலையுணர்வு மதிப்பாய்வு (Ground Penetrating Radar Survey) போன்ற புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கள ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதேபோல், அகழாய்வுகளில் கிடைக்கக்கூடிய தொல்பொருட்களை ஆய்வு செய்திட (1) தொல் தாவரவியல் (Paleo Botany), (2) தொல் விலங்கியல் (Paleo Zoology), (3) தொல் மரபணு ஆய்வு (Ancient DNA Analysis), (4) சுற்றுச்சூழல் தொல்லியல் (Environmental Archaeology), (5) மண் பகுப்பாய்வு

(Soil Analysis), (6) உலோகவியல் (Metallurgy Study), (7) கடல்சார் ஆய்வு (Marine Archaeology) போன்ற பல்துறை வல்லுநர்களுடன் இணைந்து பணியாற்றிட புகழ்பெற்ற நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறு அறிவியல்வழி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதில் கிடைத்த ஆய்வு முடிவுகள் சிலவற்றை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

- கீழடிக்கு அருகே அகரம் அகழாய்வுத் தளத்தில் சேகரிக்கப்பட்ட மண்மாதிரிகளை மகரந்தம் மற்றும் பைட்டோலித் முறையில் பகுப்பாய்வு செய்ததில், அங்கே நெற்பயிர்கள் பயிரிடப்பட்டிருப்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

- சிவகளை வாழ்விடப் பகுதியில் சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளை ஆய்வு செய்ததில், அங்கே நீர் செல்லும் செங்கல் வடிகாலில் நன்னீர் சென்றுள்ளதாகவும், தேக்கிவைக்கப்பட்ட நீர்நிலையிலிருந்து இந்நீர் கொண்டு வரப்பட்டதாகவும் ஆய்வில் தெரிய வருகிறது.

இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக, மிக முக்கியமான ஒரு ஆய்வு முடிவை அறிவிப்பதில் நான் பெருமை கொள்கிறேன்.

கடந்த ஆண்டு, தமிழ்நாடு தொல்லியல் துறையால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மயிலாடும்பாறை என்ற இடத்தில் ஈமச்சின்னங்கள் மற்றும் வாழ்விடப் பகுதியில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பாறை ஓவியங்கள், புதிய கற்காலக் கருவிகள் என அரியவகை தொல்லியல் அடையாளங்களைக் கொண்ட மயிலாடும்பாறையின் வாழ்விடப் பகுதியில் 104 செ.மீ. மற்றும் 130 செ.மீ. ஆழத்தில் சேகரிக்கப்பட்ட இரண்டு கரிம மாதிரிகள், அமெரிக்காவிலுள்ள

ப்ளோரிடா மாநிலத்தின் பீட்டா பகுப்பாய்வுக் கூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அந்தப் பகுப்பாய்வின் AMS (Accelerator Mass Spectrometry) காலக் கணக்கீடு முடிவுகள் தற்போது பெறப்பட்டுள்ளன. அவற்றின் சராசரி மைய அளவீட்டுக் காலம் முறையே கி.மு. 1615 மற்றும் கி.மு. 2172 என்று காலக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இதன்மூலம், தமிழ்நாட்டில் இரும்பின் பயன்பாடு 4,200 ஆண்டுகளுக்கு முன்னரே நிலவி வந்தது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மனித இனம் இரும்பின் பயனை உணரத் தொடங்கிய பின்புதான், அடர்ந்த வனங்களை அழித்து வேளாண்மை செய்திடும் போக்கு உருவாகியுள்ளது. அந்தவகையில், தமிழ்நாட்டில் வேளாண்மைச் சமூகம் தொடங்கிய காலம் குறித்தான கேள்விகளுக்கு ஒரு தெளிவான விடை இன்று கிடைத்திருக்கிறது.

மேலும், இந்தியாவில் இரும்புக்காலப் பண்பாடு நிலவிய கங்கைச் சமவெளி, கருநாடகம் உள்ளிட்ட 28 இடங்களில் இதுவரை AMS (Accelerator Mass Spectrometry) காலக் கணக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் தற்போது கிடைத்துள்ள மயிலாடும்பாறை ஆய்வு முடிவுகளான, 4,200 ஆண்டுகளுக்கு என்பதே, காலத்தால் முந்தியது என்பது நமக்கெல்லாம் பெருமையளிக்கத்தக்க செய்தியாகும்.

அதேபோன்று, கருப்பு–சிவப்பு பானை வகைகள் 4,200 ஆண்டுகளுக்கு முன்னரே அதுவும் புதிய கற்காலத்தின் பிற்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டது என்பதையும் அறியமுடிகிறது.

இந்த இரும்புக்காலம் குறித்த முக்கியமான கண்டுபிடிப்பை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பத்மஸ்ரீ திலீப்

சக்ரபர்த்தி, புனே டெக்கான் கல்லூரியின் முன்னாள் இயக்குநர் பத்மஸ்ரீ பேராசிரியர் பத்தையா, ஒன்றிய அரசின் தொல்லியல் துறையின் முன்னாள் இயக்குநர் பேராசிரியர் ராகேஷ் திவாரி, பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் விபா திரிபாதி, கருநாடக பல்கலைக்கழகப் பேராசிரியர் ரவி செட்டார் ஆகிய தலைசிறந்த வல்லுநர்கள் பாராட்டியுள்ளார்கள்.

தமிழ்நாடு தொல்லியல் துறையின் முயற்சிகள் இத்தோடு நின்றுவிடப் போவதில்லை. தொடர்ந்து தமிழர்கள் தடம்பதித்த இந்தியாவின் பிறபகுதிகளிலும், கடல் கடந்து வெற்றி கொண்ட நாடுகளிலும் அகழாய்வு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு, கேரளாவின் பட்டணம், கருநாடக மாநிலத்திலுள்ள தலைக்காடு, ஆந்திர மாநிலத்தின் வேங்கி, ஒடிசாவிலுள்ள பாலூர் பகுதிகளில் அகழாய்வு மேற்கொள்ளப்படும் என்ற செய்தியை இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, சங்ககாலத் துறைமுகமான கொற்கையில் ஆழ்கடலாய்வின் முதற்கட்டமாக முன்கள ஆய்வு இந்த மாதம் தொடங்கப்பட உள்ளது. மேலும், தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின்போது கண்டெடுக்கப்பட்ட ஏராளமான பானை ஓடுகளில் காணப்படும் குறியீடுகளுக்கும், சிந்துவெளி நாகரிக முத்திரை எழுத்துகளுக்குமான உறவை ஒப்பீடு செய்து, ஆய்வு செய்திடும் திட்டத்தை தமிழ்நாடு தொல்லியல் துறை இந்தாண்டு முதல் மேற்கொள்ளும் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் கடந்த ஆண்டு சட்டமன்றத்தில் குறிப்பிட்டதைப் போல, இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு, இனி தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் தொடங்கி எழுதப்பட வேண்டும் என்பதைச் சான்றுகளின் அடிப்படையில் அறிவியல் வழி நிறுவுவதே

நமது அரசின் தலையாய கடமை என்று நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இதற்கு முத்தாய்ப்பாக தமிழகத்தில் இரும்பின் பயன்பாடு 4,200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை மயிலாடும்பாறை ஆய்வு முடிவுகள் இன்று நிலை நிறுத்தியுள்ளது நமக்கெல்லாம் பெருமை.

தமிழ்ச் சமூகத்தின் தொன்மை மற்றும் தொடர்ச்சியை உலகறியச் செய்திட எந்நாளும் உழைப்போம் என்று உறுதியளித்து நன்றி கூறி அமைகிறேன்.

❖ ❖ ❖

"மக்களுக்காக இருப்பவர்கள் நாங்கள்,
மக்களோடு இருப்பவர்கள் நாங்கள்,
மக்களுக்காகவே வாழ்பவர்கள் நாங்கள்."

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை – 9